சத்குரு வாணி

(ஸ்ரீ ஷிரிடி சாயிபாபா வின் அருள் வாக்கு)



மூலம் : தெலுங்கு சத்குருவாணி

எழுதியவர் : சிட்டா வெங்கடேஸ்வரலு சாயி

தமிழ் மொழி பெயர்ப்பு : இ. ராஜசேகரன்

Sathguru Vani (Tamil)

Ist Print Jan 2008 1000 Copies
Printed for Free Distribution on behalf of

(Translator)

II Print May 2008 5000 Copies
M/s. Shirdi Sai Charitable Trust
25, New Bypass Road, Karur - 639 006.
Tamil Nadu
Ph : 04324 - 221536, 221530

Contact for further Printing :
Translator & Copy Right Holder

No.10F 'C' Block,
TUDA Apparatments,
I.S.Mahal Road,
Tirupati - 517 501 (A.P.)
Ph : 0877 - 2260686
Cell : 094403 58244

Price :

Printed By :

99, Prakasam Road,
Tirupati - 517 501. A.P.
Cell : 098482 64047

www.shirdisaicharitabletrust.org

இந்த நூலைப் பற்றி மொழிபெயர்ப்பாளர்..........

நம் புனித பூமியில் அவதரித்த பல மகான்களில் ஒருவர் ஸ்ரீஷிரிடி சாயிபாபா ஆவார். இவர் ஒப்புயர்வற்ற ஆன்மீக மகா புருஷர். இன்று நம் நாட்டில் ஏராளமான பக்தர்கள் அவரை சத்குருவாக எற்றுக் கொண்டுள்ளனர். அன்று அவர் பூதஉடலுடன் இருந்தபோது எப்படி கணக்கிலடங்கா லீலைகளும், அற்புதங்களும் செய்து காட்டி பக்தர்களுக்கு வழி காட்டினாரோ அப்படியே இன்றும் தன்னை நம்பும், வழிப்படும் பக்தர்களுக்கு உதவி வருகிறார். பலமொழிகளில் அவரைப்பற்றிய நூல்கள் பல எழுதப் பட்டுள்ளன. எனினும் தெலுங்கில் இயற்றப்பட்ட இந்த நூல் மிகவும் வித்தியாசமானது. ஒரு எளிய பக்தரின் மூலம் ஸ்ரீசாயிபாபா அவர்களே நேரில் நமக்கு ஞானத்தை போதித்தருள்கிறார். அவரின் முகக் கமலத்திலிருந்து வெளிப்பட்ட இந்த அமிர்த வாணி மிகவும் பவித்திரமானது. இது ஒரு வற்றாத ஞானச்சுரங்கம். நம் புண்ணியபலனால் இது கிடைத்துள்ளது. இது ஒரு கணத்தில் நம் பாபங்களைக் கழுவி பரிசுத்தம் செய்து விடும். இதன் மகிமையை வார்த்தைகளைால் வர்ணிக்க இயலாது. மறுபிறவி இல்லாமல் செய்து விடும். நம்மை ஆன்மீகக் குன்றின் சிகரத்தில் உட்காரச் செய்யும் வல்லமை கொண்டது. பந்தவிமுக்தியை அளிக்கும். மோட்சம் நம் வீட்டு வாசல் முன் நிற்கும்.

அனைவரும் ஆன்மீகத்தை எளிதில் புரிந்து கொண்டு நடைமுறையில் பின்பற்றும் படி பாபா நம்மைத் தூண்டுகிறார். நாம் அவர்மேல் மிகுந்த விஸ்வாசத்தை வைத்தால் நம் பாரத்தை அவரே சுமப்பதாக வாக்களிக்கிறார். நம் சுமைதாங்கி அவரே என்பதை பல பக்தர்கள் அனுபவத்தில் உணர்ந்துள்ளனர். தமிழன்பர்கள் இந்த எளிய நூலை பன்முறை பயின்று மிகுந்த நலனைபெற விழைகிறேன். மொழிப் பெயர்க்க உதவிய சென்னை ஸ்ரீசாயி ஸ்மரணானந்தா அவர்களுக்கு நன்றி.

திருப்பதி.
5-12-2007.

சத்குருவாணி

ஓம் ஸ்ரீ சாயிராம்

ஸ்ரீ சமர்த்த சத்குரு சாய்நாதனை நமஸ்காரித்து

ஸ்ரீ சாயி சத்சரித்திரத்தை நாம் பலமுறை பாராயணம் செய்துள்ளோம், இன்னும் செய்து கொண்டே இருப்போம். அந்த கதைகளில் யாரோ ஒருவரை, ஒரு காரணத்தை முன்னிட்டு, பாபா பல உபதேசங்களை அருளினார். அவை மிகவும் சாமானியமாகவும், சாதாரணமாகவும் தோன்றினாலும் ஏராளமான மறைப்பொருள் அதில் பொதிந்திருக்கும். அந்த உட்பொருளை நாம் கிரகிக்க வேண்டுமென்றால் சத்சரித்திரத்தை முழுவதுமாக புரிந்துக் கொள்ள வேண்டும். பாபாவின் சொற்கள் நம்மில் ஜீரணமாகிவிட வேண்டும். பாபாவை வெளிமுகமாக பார்ப்பதை விட உள்முக பார்வைக்கு சாதனை செய்ய வேண்டும். அவ்விதமாக செய்தால் பாபாவின் சொற்களின் உட்பொருள் தெரியவரும். அந்த திசையில் பயணம் செய்ய சாதனை செய்து கொண்டு பாபாவை சதா தியானித்துக் கொண்டு முன்னேற வேண்டும். ஏகாத்ம பாவம் தோன்றிய உடன் பாபாவின் உண்மை நிலை தெரியவரும். அப்படிப்பட்ட முயற்சியில் **சத்குருவாணி** என்ற நூலை எழுத வேண்டும் என்று தோன்றியது. பாபா வாணியை அதன் பொருளை இந்நுலில் கேட்கும் முயற்சியைச் செய்வோம். சாயி சாயி என்று சொல்லி வந்தால் எப்போதோ ஒருபோது பாபா வாணி நமக்குக் கேட்காமல் போகாது. விஸ்வாசத்துடன் இம்முயற்சியைச் செய்வோம். பாபா சொன்னதைக் கேட்கலாம்.

சாயி பாத தூளி
சிட்டா வெங்கடேஸ்வரலு சாயி

1

பாபா எங்கே இருக்கிறார்? பாபா எப்படி இருப்பார்? என்று நீங்கள் அடிக்கடி எண்ணிப் பார்க்கிறீர்கள். உண்மையில் நான் உங்களிடமிருந்து தூரமாகவோ, எங்கோயோ இல்லை. உங்களுக்குள்ளேயே உங்களுடனேயே இருக்கிறேன். இருப்பினும் என்னை நீங்கள் அடையாளம் தெரிந்து கொள்வதில்லை, தாயின் கர்பத்தில் குழந்தை இருக்கிறது. அக்குழந்தை கர்ப்பத்தில் நுழைந்ததிலிருந்து பாசத்தை வளர்த்துக் கொள்கிறாய். ஆத்மீய பாவம் கொண்டு விளங்குகிறாய். குழந்தையின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்கூட்டியே எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறாய். அவ்விதமாகவே சேர்ந்தே நானும் உன்னுடனயே வந்துள்ளேன். உன்னுடனேயே இருக்கிறேன். உன்னுடைய தேவைகளைத் தீர்த்து வைக்கிறேன். உன் பசி தாகத்தையும் தணிக்கிறேன். உனக்கு சக்தியைக் கொடுக்கிறேன். உன்னை வழி நடத்துகிறேன். இந்த வேலைகளை தாய் வெளியிலிருந்து கொண்டு செய்கிறாள். உள்ளிருப்பவனாகிய நான் அந்த தூண்டுதலை உண்டாக்குகிறேன். நீ வெளியுலகைப் பார்த்து, ***நான்*** எங்கேயோ இருக்கிறேன் என்ற மயக்கத்தில் நீ இருந்தால் நான் என்ன செய்ய முடியும்? நடந்து கொண்டிருப்பதை நடத்திவைப்பது உள்ளிருக்கும் ***நானே*** என்று நீ கண்டு கொண்டால் ஒரு க்ஷண காலத்தில் நீ என்னை பார்க்க முடியும். நான் என்ற விஷயத்தை நீ மறந்த அதே வினாடியில் நானாகவே உன் முன்பாக இருப்பேன். உன்னுடைய ஆத்ம சொரூபமே நான்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

2

கலியுகம் என்றாலே துக்கக் கடல், அதில் மனிதர்கள் மீன்களைப் போன்றவர்கள். எப்போதும் நீந்துவது தவிர்க்க முடியாது. எப்போது ஓய்வாக இருகிறாயோ அப்போதும் கஷ்டங்கள் வாராமலிருக்காது. வாழ்க்கை என்பது நிரந்தர போராட்டமே, அந்தப் போராட்டத்தில் அலைச்சல்தான் மிஞ்சுமேயொழிய சாந்தி இருக்காது, கிடைத்த போது உண்பது,

கிடைக்காதபோது பட்டினி இருப்பது இது தவிர்க்கமுடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரிந்ததே. இவையெல்லாம் உன்னுடைய முயற்சியே அன்றி உனக்கு கிடைப்பது என்ன? ஒன்றுமில்லை. இருந்தாலும் ஏக்கத்தை விடுவதில்லை. போராடுவதையும் விடுவதில்லை. நீ அப்படி அலைந்து கொண்டிருந்தால் நான் உனக்கு எந்த விதத்தில் உதவி செய்ய முடியும்? நான், நீர் நிறைந்துள்ள குடம் போன்றவன். குடத்தருகில் நீ வராவிடில், உன்னுடைய தாகம் எப்படித் தீரும்? நிரந்தரம் உன்னுடைய தாகத்தைத் தீர்க்கும் முயற்ச்சியை யார் செய்வார்கள்? எதற்காகச் செய்வார்கள்? உன்னுடைய தேவைக்காக, உன்னுடைய சக்தியையே உபயோகிக்க வேண்டும். ஏங்குதல், போராட்டங்களை விடுத்து என்னையே சார்ந்திரு, நான் உன்னுடனேயே இருப்பேன். நான் உன்னுடைய தாகத்தைத் தீர்ப்பதற்காக வருவதற்குள் உன் மனம் சஞ்சலமடைந்து, எங்கேயோ செல்லுகிறாய். நான் உனக்காகவே இருக்கிறேன். **பாரத்தை என்மேல் சுமத்து** சாந்தி ஏற்படும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

3

இந்த உடலைப் பார்த்து பூரிப்படைகிறாய், அதனைப் பாராட்டி சீராட்டுகிறாய், அந்த உடலுக்கு இன்னொரு உடல் வேண்டு மென்று சம்சாரத்தில் சிக்கிக் கொள்கிறாய், அந்த சம்சாரம் கடல் போன்றதாகிறது. கரையில் உட்கார்ந்திருக்கும் நீ வேண்டு மென்றே கடலில் விழுந்து விடுகிறாய். யார் காப்பற்றுவார்களோ என்று தேடிக்கொண்டிருக்கிறாய். நான் அந்த சமயத்தில் ஒரு குச்சியைப் போலவோ, அல்லது கயிறு போலவோ, அல்லது ஒரு கட்டைத் துண்டு போலவோ அங்கு வருகிறேன். என்னை இவை காப்பற்றப் போகிறதா? என்ற பாவனையில் அதை விட்டு விடுகிறாய், துன்பத்தில் இருக்கும் போது கடவுள் வரமாட்டார் என்று நிந்திக்கிறாய். அப்போது நான் என்ன செய்யமுடியும்? நீ கடலில் இருக்கிறாய் என்றே நான் வந்தேன். மாயையில் விழுந்து என்னை அறியமுடியாமலிருக்கிறாய். உனக்கு தென்படுகின்ற, நீயே ஏற்படுத்திக் கொண்ட, மனைவி மக்கள் வரமாட்டார்கள். இருப்பினும் அவர்களையே நம்பியுள்ளாய். நானாக வந்தால்

என் திறமையைத் தெரிந்து கொள்ளாமலிருக்கிறாய். சமுத்திரத்தில் நீ எப்படி இருக்கிறாயோ, நானும் உனக்குள் அப்படியே இருக்கிறேன். அந்த விஷயத்தை நீ மறந்து, புற உலகை நம்பி என்னை உதாசீனப்படுத்துகிறாய், மறந்துபோகிறாய். அப்போது என் உதவி உனக்கு எப்படி கிடைக்கும்? நான் இருக்கிறேன் என்ற விஷயத்தை நீ மறந்து விடாதே, நீ இருப்பதையும் நான் மறக்க மாட்டேன். நம்முடைய இருவரின் அனுபந்தத்திலேயே நான் இருக்கிறேன். அதை தெரிந்துகொள் போதும்! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

4

நிரந்தரம் 'சாயி' 'சாயி' என்று சொல்லி உட்கார்ந்திருந்தால் யார் உனக்கு உணவளிப்பார்கள்? செல்வத்தை யார் கொடுப்பார்கள்? என்று வாதிக்கிறாய், அது உண்மையே என்றாலும், சாவதானமாய் நான் சொல்வதைக் கேள். உன் தேக சம்மந்தமான வேலைகளை பௌதிக உலகிலிருந்து ஒதுக்கி விடும்படி நான் கூறவில்லை. உன் கடமைகளான தர்மத்தை நீ செய். உன் கரங்களால் வேலை செய், வாயினால் பேசு, கண்களால் பார், அவ்விதமாக உன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள். மனத்தை மட்டும் என்னிடம் லயமாக்கு. உன் சிரமத்திற்கு அதிகமாகவே நூறு மடங்கு நான் கொடுக்கிறேன். சாயிக்காக இந்தப் பணியை நான் மேற்கொள்கிறேன் என்ற பாவம் உன்னில் இருந்தால், உன் மனம் என்னை நோக்கியே இருக்குமானால், உனக்கு கிடைக்கும் பலன் நூறு மடங்கு இருக்கும். சப்ஜா விதைகளை நீரில் போட்டால் அது உப்பி பெரியதாகத் தெரிகிறது. அது எங்கிருந்து சக்தியைப் பெற்றது? அந்த நீரிலிருந்தே சக்தியைப் பெற்றது. உனக்குக் கிடைக்கும் பலன் கடுகளவு பரிமாணத்தில் இருப்பினும், ஒரு பனங்காய் அளவில் உனக்கு நான் தருவேன். நான் விக்கிரகமாக இருக்கிறேன் என்று நினைத்தால் நான் என்ன செய்ய முடியும்? நான் உன் போலவே இருக்கிறேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

5

தேகமும் இந்திரியங்களும் உறுதியாக இருக்கும் போது, நான் என் சக்தி சாமர்த்தியங்களால் இவற்றைச் செய்யமுடிகிறது என்று நினைக்கிறாய். நான் சம்பாதித்தேன், நான் வீடுகட்டினேன், என் சாமர்த்தியமே இவற்றிற்குக் காரணம் என்று நினைக்கிறாய். அந்த தேகமும் இந்திரியங்களும் பலவீனமாகி செயலிழந்த போது, நான் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறாய். அப்போது ஏதோ செய்தேன் என்று நினைத்ததும் நீதான். என்ன செய்யமுடியும் என்று இப்போது நினைப்பதும் நீதான். வாதமும் உன்னுடையதே சமாதானமும் உன்னுடையதே. ஆனால் உனக்குள் இருக்கிற அந்த சக்தி யாரென்று நீ நினைக்கிறாய்? உன்னில் இப்போது இருக்கும் இந்த சக்தி யாரென்று நினைக்கிறாய்? அந்த சக்தி நான்தான். நான் உன்னுள் இல்லை என்ற பாவம், உனக்குத் தெரியாமலேயே பிரவேசித்ததால் பலவீனம் ஏற்படுகிறது. சுகத்திற்கும், துக்கத்திற்கும் நானே காரணம் என்று நீ என் மேல் நம்பிக்கை வைத்தால், அன்று இருந்ததும் இல்லை, இப்போது போக்கடித்துக் கொண்டதும் இல்லை. இருக்கிறது இல்லை என்ற பாவமே துக்கத்திற்குக் காரணமாகிறது. அந்த பாவனையை விட்டுவிடு, நான் அப்போதும் இருந்தேன், இப்போதும் இருக்கிறேன். நாளையும் இருப்பேன், இருப்பது 'நானே' என்று நீ பாவித்தால் சாந்தி கிடைக்கும். அந்த சாந்தி வடிவமே நான். பிறப்பில் நான் இருக்கிறேன், இறப்பிலும் நான் இருக்கிறேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

6

வேதங்களும் சாத்திரங்களும் நமக்கு எவ்வளவோ விஞ்ஞானத்தையும் ஞானத்தையும் கொடுக்கிறது. அதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. நம்முடைய சாமர்த்தியம் என்ன என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றைப் பற்றி விவரமாகக் கூறுபவர் யார் இருக்கிறார்கள்? அவற்றை எவ்விதமாக அறிந்து கொள்வது? என்ற சந்தேகத்தால் காலத்தை வீணாக்காதே. எறும்பு ஒரு மலையை சுமக்க முடியாது, மேலே தூக்கவும் முடியாது. ஆனால் மலையின் மேல் எறும்பினால் ஏற இயலும். காரணம் என்னவென்றால் அதற்கு அந்த விஸ்வாசம் இருக்கிறது. அந்த விஸ்வாசத்தின் காரணமாக அந்த வேலையைச் செய்ய முடிகிறது. என் நாம உச்சாடனையில் அப்படிப்பட்ட நம்பிக்கையை நீ வைத்தால் உன்னை நான் ஆன்மீக மலைச்சிகரத்தின் உச்சியில் உட்காரவைக்கிறேன். பாத்தியில் நீர் ஊற்றினால் கிளைகள் துளிர் விடுகிறது. வேதங்களுக்கும் சாஸ்த்திரங்களுக்கும் மூலம் ஏதோ ஒரு சக்தியின் நாமமே. நாமம் என்றால் சொரூபத்தை ஒருமித்த உச்சரிப்பின் மூலம், உண்மையை கிரகித்தலே. என் நாமத்தை உச்சரிப்பதால் வேறு சிந்தனைகள் தோன்றாது. அனர்த்தமான துன்பங்கள் வராது. புளியினால் பித்தளைப் பாத்திரத்தின் களிம்பு நீங்குவது போல் என் நாம ஸ்மரணையினால் மாயை நசிக்கிறது. என் சுத்த தத்துவம் என் நாம ஸ்மரணையால் தெரிய வரும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

7

கஷ்டங்கள் ஏன் வருகின்றன? துக்கம் ஏன் ஏற்படுகிறது என்று நீ அடிக்கடி நினைத்துக் கொள்கிறாய், இறைவன் என்பவர் இருந்தால், கஷ்டங்களும், துக்கமும் இருக்க கூடாது அல்லவா என்ற பாவம் தோன்றுகிறது. அந்த விஷயத்தை அப்படி வை. சிறுவனுக்கு தாய் நடக்கக் கற்றுக் கொடுக்கிறாள். நடப்பது எனக்கு வந்து விட்டது என்று கருதி, சிறுவன் தானே நடந்து விழுந்து விடுகிறான். சாதனையில் இருக்கும் போதே சாதித்து விட்டேன் என்று நினைத்தால் தாய் என்ன செய்ய முடியும்? உனக்கு துக்கம் ஏன் ஏற்படுகிறதோ, எது இதமான மார்க்கமோ அதை நான் சொன்னேன். நடைமுறையில் கடைபிடிக்காமலேயே தெரிந்து கொண்டு விட்டேன் என்று நினைத்தால் நான் என்ன செய்யமுடியும்? நடக்கக் கற்றுக் கொடுத்த தாயை மறக்காதே, தாய் சொல்லிய மார்க்கத்தைக் கைவிடாதே, அப்போது நீ விழமாட்டாய். அவ்விதமாகவே, நான் சொல்லியவற்றை கடைப்பிடி. சதா என்னை நினை, நான் நடத்துகிறேன் என்று திடமாக நம்பு. எனக்கு நானாகவே செய்கிறேன் என்ற பாவத்தை

வரவிடாதே, நான் துணையாக இருப்பேன். உனது மார்க்கத்தை எளிதாக்குகிறேன். நீ நடக்கும் பாதையில் முட்கள் இருந்தால் நானே முன்பாகவே களைந்து விடுகிறேன். நான் உன்னுடனேயே வந்து கொண்டிருப்பதை நீ மறந்தால் நான் என்ன செய்ய முடியும்? பாபா என்னுடையவர் என்று நீ நினை, நீ என்னுடையவன் என்று நான் கருதுவேன். சுடர் விடும் தீபத்தைப் பார்க்காமல், இருளாக இருக்கிறதே என்றால் நான் என்ன செய்ய இயலும்?

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

8

அஹங்காரமென்பது ஓர் தீயகுணம். அதுவே பல தீயவிளைவுகளுக்குக் காரணம்கூட, அஹங்காரத்தில் விழுந்தவர்கள், என்றும் உயர்ந்த நிலையை அடைய முடியாது. அஹங்காரம் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் மற்றவர்களிடமிருந்து பிரேமை, அனுராகம் போன்றவற்றை பெறஇயலாது. அவர்களுக்கு நல்லவற்றைச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். நல்லது சொன்னவர்களை அற்பமான வர்களாகக் கருதுவார்கள். முடிந்த வரை அஹங்காரர்களிடமிருந்து தூரவிலகிச்செல்ல வேண்டும். அவர்கள் எதிர்பட்டால், நாமே அந்த வழியிலிருந்து விலகிச் செல்ல வேண்டும். அஹங்காரம் அகப்பகைவன். அதனை வெளியே இருப்பவர்களால் வெல்ல முடியாது. அவரவர்களே வென்று விமுக்தியடைய வேண்டும். அத்தகையவர்களுக்கு எதேனும் துன்பம் நேர்ந்தால், அவர்களைப் பற்றி மற்ற யாரும் துக்கப்பட மாட்டார்கள். அவர்கள் என்னுடைய இரக்கத்தைப் பெறமுடியாது. அவர்களுக்கு நெருக்கமானவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் அப்படிப்பட்டவர்களுக்குள் நான் ஒருக்காலும் இருக்கமாட்டேன். அவர்கள் அருகில்கூட நான் செல்ல மாட்டேன். ஆகையால் அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய கர்மங்களைத் தியாகம் செய்து, அவர்களின் அஹங்காரத்தை, என் பாதங்களில் கிடத்தினால், அவர்களுக்கு என் கிருபை எவ்வளவாகவோ

கிடைக்கும். அஹங்காரமின்மையே என் வடிவம், என்னுடைய தத்துவம். என் உதவியை வேண்டுபவர்கள் அஹங்கார மற்றவர்களாக இருக்க வேண்டும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

9

எதை உன்னுடையது என்று கருதுகிறாயோ உன்மையில் அது உன்னுடைது அல்ல. ஆகையால் சிருஷ்டியில் என்னுடையது என்று எதுவும் இல்லை. நேற்று உன்னுடையது என்று கருதப்பட்டது இன்று உன்னுடையதாக இருப்பதில்லை. கற்பனை எதுவாகிலும் அது நிலையானது அன்று. ஏராளமான செல்வம் நேற்று உன்னிடம் இருந்திருக்கலாம். ஏதோ ஒரு காரணத்தால் இன்று போய் விடுகிறது. மனைவி, மக்கள், உறவினர்கள் ஆகிய அனைவரும் ஒரு கண நேரம் பந்தத்தில் சேர்ந்திருந்து மறு க்ஷணத்தில் மாயமாய் மறைகின்றார்கள். அவர்களிடம் மமகாரம், ஆசைகளை வளர்த்துக் கொண்டு நிரந்தரமாக உனக்குள் இருக்கும் எனக்கு தூரமாகின்றாய். என்னை நாவினால் ஸ்மரணை செய்து கொண்டு அவர்களை இதயத்தில் ஆராதித்தால் உன்னில் எனக்கு இருப்பிடம் எங்கிருக்கிறது? அந்த நாம ஸ்மரணையினால் பலன் என்ன இருக்கும்? எது எங்கிருக்க வேண்டுமோ, அது அங்கிருக்க வேண்டும். நான் உன்னுடைய இதயத்தில் வசிப்பவன், அந்தராத்மா. உன் நலனை விரும்பு பவன். செடியின் வேருக்கு நீர் ஊற்றுவதை விட்டு விட்டு, பலனை விரும்பினால் எப்படி கிடைக்கும்? நீ எந்த காரியத்தைச் செய்து கொண்டிருந்தாலும், எங்கிருந்தாலும், எதைச் செய்தாலும் என்னையே ஸ்மரணை செய்து, தியானம் செய்து உன் வேலையைச் செய், அதை நான் வெற்றியடையும் படி செய்வேன். பலனை விரும்புபவர்கள் செடியின் நலனையும் கவனிக்க வேண்டுமல்லவா!

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

10

"ஒவ்வொரு வினாடியும் நான் பாபாவை ஆராதிக்கிறேன் பாபாவின்மேல் எனக்கு எராளமாக விஸ்வாசம் உள்ளது. பாபாவின் பூஜைகளை தினந்தோறும் செய்கிறேன். இருந்த போதிலும், துக்கமும் கஷ்டங்களும் வராமல் இருப்பதில்லை. என் கர்மாவை (தீவினை) நானே அனுபவிக்கும் போது, பாபாவை ஆராதிப்பதால் என்ன பலன் இருக்கிறது" என்ற பாவம் அடிக்கடி உங்களுக்குத் தோன்றுகிறது. அப்படி பாவிப்பதை நான் சரி என்று சொல்ல முடியாது. என் அனுகிரகத்தால் இந்தப் பிறவியில் என்னை ஆராதிக்கிறாய். என்னை ஸ்மரிக்கிறாய். அப்படி என்னை ஸ்மரிக்கும் அவகாசம் உனக்கு கிடைத்ததே ஒரு யோகம். நீ இப்பிறவிக்கு சாட்சி, நான் உன் பூர்வஜன்மங்கள் அனைத்திற்கும் சாட்சி. உன் கடந்த பிறவிகள் தீவினைகளால் நிறைந்து கர்ம ராசிகள், குன்றுகளாக சேர்ந்திருப்பதால் அவற்றை நான் குறையும் படி செய்ய வேண்டுமல்லவா! பூர்வஜன்மங்களின் உன் சம்ஸ்காரமே, இந்த ஜென்மத்தில் சுக துக்கங்களாக வந்து கொண்டிருக்கும், அவற்றிற்கு நான் சாட்சி, இந்தக் கிரமத்தில் உனக்கு சுகம் கிடைப்பதில் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. உன் செயல்கள் வெளி முகமாக இருக்கிறது. என் செயல்கள் மறைமுகமாக இருக்கிறது. அதை தெரிந்து கொள்ள முடியாமல், என்னை நிந்திப்பதால் நான் என்ன செய்ய முடியும்? கர்மவினைகள் கரைந்த உடன் யோகம் தானே கைக்கூடும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

11

மனதில் ஏதேதோ கோரிக்கைகளை வைத்து கொண்டு என்னை ஆராதிக்கிறாய். அந்தக் கோரிக்கைகளின் நன்மை தீமைகள் உனக்குத் தெரியாது, நிறைவேற வேண்டும் என்ற ஆவல் மட்டுமே உன்னிடம் இருக்கிறது. உனக்கு நன்மை பயக்கும் கோரிக்கைகளை நான் நிறைவேற்றுகிறேன். மீண்டும் உன்னில் மற்றொரு கோரிக்கை துளிர் விடுகிறது. அந்தக் கோரிக்கை நிறைவேறாத போது என்மேல் நம்பிக்கை குறைகிறது. சிறுவன்

விளக்கை நோக்கி நகர்ந்து செல்கிறான். அதைத் தொட நினைக்கிறான். தாய் அந்த விஷயத்தைக் கவனித்து விளக்கை தூரமாக வைக்கிறாள். சிறுவன் அடம்பிடித்து கோபித்து அழுகிறான். அந்த அழுகை தாய்க்கு இனிமையாகவே இருக்கும். உனக்கு நிறைவேறாத கோரிக்கைகளின் விஷயத்தில் கூட நான் தாய் போன்றவனே. தாய் குழந்தையை அரவணைத்து, ஸ்தனத்தை தருகிறாள். அவ்விதமாகவே நான் உன்னை நேசிக்கிறேன். எப்படி ஸ்தனங்களிலிருந்து பால் குழந்தையின் தொண்டையில் மிகவும் ரகசியமாக சப்தமில்லாமல் சேர்கிறதோ, உன்னிடம் என் அன்பு கூட அப்படியே இருக்கும். எனக்குக் கேட்கும்படி சப்தமாக நீ என்னை அழைக்கிராய். நான் தெரியாமல் மிக ரகசியமாக உன்னிடம் வருகிறேன். ஒரு கணத்தில் உன் மனம் சபலமடைந்தால் நான் என்ன செய்ய முடியும்? குழந்தை மடிமீது இருந்தால் அல்லவா தாய் பாலூட்ட முடியும்? பொறுமை மிகவும் தேவை.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

12

ஜீவர்கள் மாயா ஜகத்தில் இருக்கின்றனர். இந்த விஸ்வம் மாயையிலிருந்து பிறந்ததே, அதிலுள்ள ஜீவர்கள் பகடைக்காய்கள். மாயை ஆட்டுவித்தபடி ஆடுகிறார்கள். மாயையின் முக்கிய உத்தேசம் ஜீவர்களை ஏமாற்றுவதே. மாயை கூட இறைவனின் அம்சமே. மாயையின் காரணமாக என்னைப் பார்க்க முடியாமல் இருக்கின்றனர். என்னை எப்போதும் ஸ்மரணை செய்து கொண்டிருந்தால் மாயை மாயமாய் மறைந்தே போகும். பாசியினால் மூடப்பட்ட சரோவரத்தில் நீர் தென்படாதது போல, இந்த மாயா ஜகத்தில் என் இருப்பை அறிந்து கொள்ள இயலாமல் இருக்கிறாய். மாயை எந்த வடிவத்தில் இருக்கும் என்ற சந்தேகம் உனக்கு வரலாம். மாயை உண்மையில் உன் வடிவிலேயே இருக்கிறது. ஆகையால் இந்த தேகத்தை நம்பாதே. இந்திரியங்களை நம்பாதே, இந்திரியங்களால் உண்டாகும் சுகத்தை விரும்பாதே. அப்படிப் பட்ட நன்மையளிக்காத கர்மங்களை மேற் கொள்ளும் முன்பு என்னை தியானி. நான் உனக்குக் கவசம் போல் இருப்பேன். சிறுவனை கொசு

கடிக்காமலிருக்க, தாய் எப்படி கொசு வலை கட்டுகிறாளோ, அப்படி அந்த பாபவினைகள் உன்னை சேராமல், நான் ரட்சிக்கிறேன். என்னை ஸ்மரிக்காமல், என்னை அழையாமல் நீ துக்கித்துக் கொண்டிருந்தால், நான் என்ன செய்ய முடியும்? உன் முன்னாலும் பின்னாலும் நான் நிழலைப் போல் இருக்கிறேன். உன் பார்வையை என் மேல் வைத்திரு.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

13

கர்மங்களைக் கடைப்பிடிக்கும் விஷயத்தில் தர்க்கம் செய்ய வேண்டாம். ஜீவர்களுக்கு நன்மையுண்டாக்கவே கர்மங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ன. யாருக்கு எது நலமோ அது முன்பாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது நல்ல கர்மங்ளை அனுசரிப்பதன் மூலம் கர்மா நிச்சயமாகக் கரைந்து போகிறது. வேதங்களாகட்டும், சாத்திரங்களாகட்டும் அதிகமாக எதைப்பற்றி விவரமாக கூறியுள்ளதோ அவை நன்மையளிப்பவையே, என்ற விஷயத்தை மறக்க வேண்டாம். அப்படிப்பட்ட கர்மங்களை அனுசரிப்பதில் வெளிமுகமாக நீ கர்தா, கர்மா, கிரியா போன்றே தென்பட்டாலும், அந்த திரிகரணங்கள் **நானே** என்ற விஷயத்தை மறக்காதே, கர்தா, போக்தா, சம்ஹர்தா என்ற மூன்று கார்யங்களும் நானாகவே இருந்தேன் என்ற விஷயம் உன் மனத்தில் இருக்கும் போது, பலனுக்காக சகஜமாகவே நீ ஆசைப்படமாட்டாய். அந்த பலனும்கூட நானே, ஆகையால் எப்போதும் என்னையே நினைத்து, தாம் செய்யும் கார்யங்களை எனக்கு அர்ப்பணம் செய்து, யார் கார்யங்களை நிறைவேறுகிறார்களோ அவர்களுக்கு என் உதவி, கிருபை, ரட்சனை எப்போதும் இருக்கும். இக்காரணத்தால் என்னை ஒவ்வொரு கணமும் ஸ்மரித்து வந்தால், அவர்களுடைய கர்மங்கள் (தீவினைகள்) என் பாதங்களில் சரணடைகின்றன. நான் சாயி சொரூபமே என்ற பாவம் வளர்த்துக்கொள். நானும் நீயும் வேறல்ல. நீ என்னுடைய பிரதிபிம்பமே. நீ காண்பதெல்லாம் என் சொரூபமே என்ற நம்பிக்கை இருந்தால் நான் உன்னுடையவனே.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

14

ஆலய தரிசனம், புண்ய க்ஷேத்திர தரிசனம், புண்ய தீர்த்த தரிசனம் போன்றவை நிச்சயமாக சுபம் விளைவிப்பவையே, மஹாத்மாக்களின் பாத தூளி பவித்ரமானவை என்பதில் சந்தேகமே இல்லை. அப்படிப்பட்ட யாத்திரைகள் எத்தனையோ செய்த போதிலும் ஜீவன் புனிதமடைவதில்லை. அதற்கு காரணம் ஜீவனா? க்ஷேத்திரங்களா? சம்பங்கி மலர் அதன் பரிமளத்தை எப்போதும் இழப்பதில்லை. பரிமளத்தை உணர்கின்ற மூக்கில் குறை இருந்தால் சம்பங்கி மலர் என்ன செய்யமுடியும்? இந்த காரியங்களை மேற்கொள்ளும்போது பவித்திரமான பாவம் இருக்க வேண்டும். பாவம் எதுவாக இருக்குமோ, பலனும் கூட அதேவிதமாகவே இருக்கும். கண்கள் என்னைப் பார்த்துக் கொண்டு மனம் எங்கேயோ அலைந்து கொண்டிருந்தால், என் தரிசனத்தின் பலன் எப்படி கிடைக்கும்? சிவன் ஜீவனில் கலந்தே இருக்கும். ஜீவன் தனக்குத் தானாகவே சபல சித்தனாய் தூரமாகிக் கொண்டிருக்கிறான். மனம் சபல மடைவதால் கார்யசித்தி எப்படி உண்டாகும்? உடலை என்னிடம் இருத்துவதால் லாபம் என்னவாக இருக்க முடியும்? உன் சிந்தனை என்னைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். அது நானாகவே இருக்க வேண்டும். நானாகமாத்திரமே இருக்கவேண்டும். அப்போது உனக்கு சுபம் உண்டாகும். நீ என்னை மிகவும் சிரத்தையோடு பார்த்துக் கொண்டிருக்கும் வரையில் நான் உன்னை இரு மடங்கு சிரத்தையுடன் பார்த்துக் கொண்டிருப்பேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

15

என் கதைகளைக் கேட்டல், என் நாமத்தை சங்கீர்த்தனம் செய்தல், என் கதைகளின் பால் மிக்க ஆர்வம் கொள்ளுதல், உலக விவகாரங்களில் விருப்பமின்மை, முதலியன எங்குள்ளனவோ அங்கு நான் நிச்சயமாக இருப்பேன். சாதாரணமாக என்னை ஸ்மரித்தாலும் நான் கவனத்துடன் கேட்பேன், இருப்பேன். உலக விஷய ஆலோசனைகள் மனதிற்கு வேதனை தருமேயொழிய அமைதியைத்தராது. ஆனந்தம்

என்பது எந்த வடிவில் உன்னுள் இருக்கிறதோ அப்படியே ஆனந்த சொரூபனாகவே நான் உன்னிடமிருப்பேன். எனக்கு வீடு, வாசல், மனைவி, மக்கள், எந்த பந்தமும் இல்லை. என் அனுபந்தம் உன்னுடனேயே. உனக்காகவே நான் இருக்கிறேன். உன் அழுகையையும், வேதனையையும் மனைவி மக்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் அதை போக்குவார்களா? ஜீவர்கள் அனைவரும் என் கட்டுப்பாட்டிலேயே உள்ளனர். நான் இல்லாத ஜீவனோ, பிராணியோ இல்லை. இதை மறந்து வீணாகக் கவலை கொள்ளாதே. உன் பிரச்சனை எதுவானாலும் அதற்குப் பரிகாரம் என்னிடமுண்டு. பரிகாரம் என்னிட மிருக்கையில், நீ எங்கோ ஓடிக் கொண்டிருந்தால் நான் என்ன செய்ய இயலும்? என்னைப் பரிபூரணமாக நம்பு, உன் உடல், மனம், செல்வத்தை என் பாதத்தில் வை. உன்னை விட்டு நான் எங்கே செல்வேன்? என் இருப்பிடம் உன் இதயமே. அதை அசுத்தமின்றி வைத்திரு, உன் இருதயமே என் கோவில்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

16

சிறுவன் ஏன் அழுது கொண்டிருக்கிறான் என்பதை அறியாமல், சந்திரனை காட்டிக் கொண்டு, தாலாட்டு பாடிக் கொண்டு, தாய் சமாதானப்படுத்துதல் போல், நான் அனேக கதைகள் கூறியுள்ளேன். லீலைகளைக் காட்டினேன், நலமானவற்றை உரைத்தேன், உனக்கு துக்கமும் அசாந்தியும் ஏன் ஏற்படுகிறது என்பது உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். நான் உன் இருதயத்தில் வசிப்பவன், நான் உன் அந்தராத்மா, என்னைப் பற்றிய கதைகளைக் கேட்காமலும், என் லீலைகளை எண்ணிப் பார்க்காமலும், புரியாத மனக் கலக்கத்திற்கு நீ உள்ளானால், அந்த மனோநிலையில் என்னை உன்னால் அறிய இயலுமா? ஒரு ஸ்திரமான நிலையில் இருக்காமல், தன்னை மறந்து உறக்க நிலையில் இருக்கிறாய். உணவிற்கும் மற்ற தேவைகளுக்கும் கலவரப்படுகிறாய். நான் உனக்கு அளிக்கும் மனசாந்தியை உதரித்தள்ளி விட்டு எங்கோ சென்று விடுகிறாய். எவ்வளவு தூரம் நீ போகமுடியும்?

அசாந்தியற்ற இடம் எங்குள்ளது? நான் இருக்கிறேன் என்பதை ஏன் அறிய முடியாமலிருக்கிறாய்? கவளம் கவளமாக உண்டால் அல்லவா உணவு ஜீரணமாகும். பொறுமையுடன் என் உடனிருந்து என்கதைகளைக் கேட்டும், லீலைகளைக் கேட்டும் நீ சந்தோஷப்பட்டால், உன் சுமையை நான் ஏற்கிறேன். உன்னுடைய துன்பங்களையும் நான் துடைப்பேன். மனக் கலகத்தையும், ஆசை பாசங்களையும் நீ மறந்து விட்டால் நான் உன்னை மறக்காமல் இருப்பேன். நான் ஒளி, நீ வழிப்போக்கன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

17

“இறைவனை ஆராதிக்கிறேன்; எப்போதும் நினைக்கிறேன்; என் பூஜைகளும் முறையீடுகளும் அவரை அடைகின்றனவா இல்லையா?” இந்த சந்தேகம் உனக்குத் தேவையில்லை. உன் போக்கை நான் எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரியாமல் ஏதும் இருக்கமுடியாது. எனக்குத் தெரியாமல் எதுவும் நடக்கவும் நடக்காது. நான் எங்கோ தூரத்தில் இருக்கிறேன் என்ற உன் மனோபாவத்தால் உனக்கு அதைர்யம் உண்டாகிறது. அப்படிப்பட்ட அதைர்யத்திற்கு இடம் கொடுக்காதே, இன்பமோ, துன்பமோ விதி வசத்தால் வந்து சேரும். அவற்றிற்கு நீ பயந்தால் உனக்கு அசாந்தியே மிஞ்சும். சுக துக்கங்கள் மின் மினிப் பூச்சி போன்றவை. வரும், இறந்து போகும். கீழ்மையான எண்ணங்களை விட்டு விடு. உடலழுக்கு சுத்தமான தண்ணீரால் கழுவப்படுவது போன்று, என்னை நீ உள்ளத்தில் இருத்தினால் பயம் அகன்று போகும். சுமப்பவன் நான், நீ நிமித்த மாத்திரனே. நான் என்ற மனோபாவமே உனக்கு துக்கத்தை விளை விக்கிறது. நான் உனக்குள் இருக்கும் போது நீ வேறாக எங்கு இருக்க முடியும்? உனக்கும் எனக்கும் இடையில் தூரமென்பது மாயை. அதுவே சுவர் போன்ற தடையாகும். அதைத் தகர்த்தெரி. அப்போது நாம் இருவரும் ஒன்று சேரலாம். ஆனந்தத்தை அனுபவிக்கலாம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

18

எல்லாம் நீ நினைப்பது போலவே நடந்தால் சிருஷ்டிகர்தா நீயாகவேயல்லவா இருக்க வேண்டும்! உண்மையில் சிருஷ்டி கர்தா நீயல்ல. அந்த எல்லைக்குட்படாத பரமனே சிருஷ்டிகர்தா. அதுவே அல்லா மாலிக் (அல்லாவே இறைவன்). ஆகையால், நீ விரும்புவ தெல்லாம் உன் விருப்பத்திற்கு ஏற்ப நடக்காது. இறைவன் எதை நிர்ணயித்துள்ளாரோ அதுவே நடக்கும். நீ வெறும் சிருஷ்டியில் நியமிக்கப்பட்டுள்ளவனேயன்றி கர்தா அல்ல. பின் ஏன் நீ வீணாக துக்கப்படுகிறாய்? அல்லாவின் கையில் நீ ஒரு கைப்பாவையே. சூத்திரதாரி அல்லா ஒருவனே. ஆகையால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் அல்லாவை நினை. உனக்கு எது நன்மை பயக்குமோ அதை அவரே அளிப்பார். அதுவே உனக்கு கிடைக்கும். விளக்கை நீயே சுமக்க வேண்டும், விளக்கு உனக்குப்பின் உடன் வருவதில்லை. விளக்கைக் கையில் பிடித்துக் கொண்டு குழியில் காலை வைப்பது குருட்டுத்தனமேயன்றோ? அந்த அஞ்ஞானத்தை விட்டு விடு. எனது உண்மையான இருப்பிடத்தை அறிந்துகொள். சங்கல்பம் என்னுடையது, பலன் உன்னுடையது. இவ்வித பாவனை உன்னில் அதிகமாக இருந்தால் துக்கம் எதற்காக ஏற்படுகிறது? பிராரப்த கர்மத்தின்படி வருபவை வந்தே தீரும். அவற்றைப் பற்றி கவலைப் படுவது அஞ்ஞானமேயாகும். எங்கும் நானே நிறைந்துள்ளேன் என்பதே ஞானமாகும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

19

சிறுவன் மரத்தின் உச்சியில் இருக்கும் பழத்தைக் கேட்டால், நீ சிரமப்பட்டு கேட்ட பழத்தைப் பறித்து வந்து அவனுக்குத் தருகிறாய். சிறுவன் அதை உண்டு கொண்டிருந்தால் உனக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. அந்த உறவை என்னவென்பது? அதே போல் நீயும் என்மீது நம்பிக்கை வைத்தால், நான் உனக்கு அப்படிப்பட்ட பழங்கள் எத்தனையோ தருவேன். நீ அதை உண்ணும் போது நான் மகிழ்ச்சி

கொள்வேன். நம் இருவருக்கிடையேயுள்ள உறவிற்கு காரணம் அந்த நம்பிக்கையே. அந்த நம்பிக்கை எந்த வடிவில் உன்னுள் இருக்கிறதோ, அந்த வடிவிலே நான் உன்னுள் இருப்பேன். எந்த அளவில் உன்னுள் உள்ளதோ, அதே அளவில் நான் உன்முன் இருப்பேன். உனக்கும் எனக்கும் இடையில் உள்ள இணைப்புப் பாலம் விஸ்வாசம் ஒன்றே. நீ என்னை பரிபூரண சரணாகதியடைந்தால் நான் உன்னுடையவனே. உனக்கு சேவை செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். எளிதில் உடனடியாக கிடைக்கவிருக்கும் பலனை உதறிவிட்டு, எட்டாத திராட்சைப் பழங்களுக்காக நீ ஆசைப்பட்டால் நான் என்ன செய்ய முடியும்? நீ என் குழந்தை. நான் உன்னுடைய தந்தை. நான் உனக்கு நடக்கக் கற்றுக் கொடுக்கிறேன். என் சொற்படி நீ நட. அப்போது இன்பமானாலும், துன்பமானாலும் ஒன்றுப்போலவே இருக்கும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

20

லௌகியம் – மற்றும் ஆன்மீகம் என்ற இரு வெவ்வெறான பாதைகள் உள்ளன இவ்விரண்டும் சிருஷ்டியில் இரு மார்கங்கள். ஜீவன் இப்பூமியில் பிறந்த முதற்கணமே லௌகீக மார்கத்தில் உழல்கிறான். லௌகீய பாவனை இல்லாமல் பிறப்பவர்கள் மிகவும் அரிது. அப்படி அரியவர்களே சித்தர்கள். லௌகீய வாதிகள் சுகத்தை விரும்புகின்றனர். சுகம் என்ற சொல்லுக்குச் சரியான அர்த்தம் சொல்ல முடியாது. மனோபாவம் எதில் சுகித்திருக்குமோ அதை சுகம் என்றும் நினைக்கின்றனர். சுகம் என்பது பாவனையைச் சார்ந்ததே, இதற்கு முடிவு இல்லை, முக்தியும் இல்லை. **புனரபி ஜனனம், புனரபி மரணம்** என்ற ஸ்லோகத்திற்கு சுகம் என்பதே ஆரம்பம். இதற்கு வேறானது ஆன்மீகம் என்ற பாதை. ஆன்மீகத்திலேயே நான் இருக்கிறேன். என்னை அடைய நினைப்பவர்கள் இப்பாதையின் வழியாக என்னைச் சேரலாம். தரிசிக்கலாம். ஆன்மீகத்தில் சுகம் என்ற வார்த்தை இருக்காது. ஆனந்தமே இருக்கும். அந்த ஆனந்தமே ஆத்மானந்தம் என்று சொல்லப்படும். ஆத்மானந்தத்தையும் தாண்டிப்போனால் ஏகாத்ம நிலை ஏற்படுகிறது. இந்த ஏகாத்ம

நிலையில் பிரம்மத்துவம் இருக்கிறது. படிப்படியாக சாதனை முறையில் பிரம்ம நிலையை அடைந்தவர்கள் நிச்சயமாக என்னில் ஐக்கியம் ஆகிறார்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

21

எத்தனேயோ கிளைகளாக விஸ்தரித்துள்ள இந்தப் பிரபஞ்சம் புரிந்து கொள்ள முடியாதது. எந்த வழி எங்கு போகிறது? எங்கு சேர்கிறது? என்று நிச்சயமாய் சொல்லக்கூடியவர்கள் யாரும் இல்லை. புரிந்து கொள்ள முடியாத இந்த பரந்து வியாபித்துள்ள பிரபஞ்சத்தின் மேல் உறை அஞ்ஞானம், கீழ் உறை ஞானம். அஞ்ஞானத்தில் தென்படுகின்ற இந்த விஸ்வம் ஞானத்தில் தென்படாது, அஞ்ஞானத்தில் இருக்கும் சூன்யம் ஞானத்தில் இருக்காது. அஞ்ஞானத்தால் பார்கக் கூடியவை அனைத்துமே நசித்துப் போகக்கூடியவை. ஞானத்தால் காணக்கூடிய அனைத்தும் பிரகாசித்துக்கொண்டு எப்போதும் புதுமையுடன் விளங்கும். அந்த ஞானத்தைப் பெற்ற பின்னரும் அஹங்காரத்தில் முழ்கினால் மீண்டும் அதோ கதியில் வீழ்ந்து அஞ்ஞானமே கிடைக்கும். இது போன்ற தாழ்வடையும் அவலநிலை ஏற்படாதிருக்க வேண்டுமானால் சத்குருவை சார்ந்திருக்க வேண்டும். அவரே நம் வழிகாட்டி, தண்ணீர் உறைந்தால் பனிக்கட்டி யாகிறது, பனிக்கட்டி கரைந்தால் மீண்டும் தண்ணீராகவே மாறுகிறது. அஞ்ஞானம் என்ற இருளை தாண்டிப் போனால் ஞானம் கிட்டும். அப்படிப்பட்ட அஞ்ஞானம், என் கதைகளைக் கேட்பதன் மூலமாகவும், என் மகிமைகளைப் புகழ்வதாலும், என் நாமஸ்மரணையாலும் நசிக்கிறது. அப்போது என் நிஜமான நிலையை நீங்கள் கண்டு கொள்ள முடியும். தியானம் மூலமாக விளங்கும் என் உண்மை நிலை ஆனந்தத்தை உண்டாக்குகிறது. துக்க நிலை மறைகிறது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

22

சம்போகத்தின் மூலம் பிறந்த இந்த உடல் நசித்துப் போகும். அப்படி நசித்துப் போகும் தேகம் மண்ணில் ஐக்கியமாகி, மரணம் என்று அழைக்கப்படுகிறது. ஆகையால் இது பொய்யானது என்ற விஷயம் பிறந்தது முதல் தெரிந்ததே, துக்கப்படுதல் அஞ்ஞானம். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையேயுள்ள காலமே மோட்ச சாதனை செய்யவேண்டிய காலமாகும். அப்படிப்பட்ட கிடைத்தற்கரிய காலத்தை, புற உலக சிந்தனையில், தேகப்பற்றுடன் அனுபவிப்பதால் பிறவித்தளையில் அகப்படுகிறோம், மீண்டும் மீண்டும் பிறப்பது தவிற்க முடியாது, மறுபிறவி இல்லாத வாழ்க்கை ஜீவர்களின் கையிலேயே இருக்கிறது. யார் முக்தியை விரும்புகிறார்களோ, யார் மோட்சத்தையே நாடுகிறார்களோ அவர்கள் கோரிக்கைகள் அற்றவர்களாக இருக்க வேண்டும். தேகப்பற்று, மனைவி மக்களின் மீது பற்று முதலிய வற்றிலிருந்து விலகி என்னை சரணடைய வேண்டும். யார் எனக்காகவே பரிதவிக்கிறார்களோ, ஏங்குகிறார்களோ அவர்களுக்கு நான் தூரமாக இருக்கமாட்டேன். அவர்களுக்கு மற்றவர்களை விட மிக நெருக்கமாக இருப்பேன். இறுதிக்காலம் வரை எனக்காகவே ஏங்குபவர்கள் நிச்சயமாக என்னுள் ஐக்கியமாவார்கள். அவர்கள் நாவில் இருக்கும் என் நாமம், அவர்களுக்கு மீண்டும் மறுப்பிறவி இல்லாமல் செய்து விடுகிறது. நிரந்தரமாகச் செய்யப்படும் என் நாம ஜெபம், என்னிடமே அவர்களைச் சேர்க்கிறது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

23

குறிக்கோள் இல்லாமல் அலைபவர்களுக்கு மோட்சம் எந்த விதத்திலும் கிடைக்காது. குறிக்கோள் இல்லாத பயணம் வீண். ஒரு நிமிடமாவது மனத்தைக் கட்டுப்படுத்த முடியாதவர்களுக்கு, எந்த ஒரு கண்ணுக்குத் தெரியாத சக்தியாலும் சாந்தியைக் கொடுக்க இயலாது. மிக்க மனக்கலக்கத்துடன் எதிர்பார்க்கக் கூடிய விஷயம் நமக்கு

நன்மை செய்வதாக இருக்க வேண்டும். உனக்காகவும் சம்சாரத்திற்காகவும், பந்துக்களுக்காகவும் கவலைப்படுவதால் அலைச்சலேயொழிய சாந்தி எப்படிக் கிடைக்கும்? நான் எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பது, உணவு உடைக்காக கவலைப்பட வேண்டாம், பிராராப்தத்தின்படி கிடைக்ககூடியது கிடைக்கும், எப்போதும் கவலையுடன் இருக்காதீர்கள், கூண்டில் கிளி போன்று இருந்தும் கூட, சம்சாரம் என்ற விலங்கைப் போட்டுக் கொள்பவருக்கு அந்த பந்தங்களின் பின் ஓடுபவர்களுக்கு நான் என்ன உதவி செய்ய முடியும்? கவலைகளை விடுத்து என்னிடம் உட்கார். என்னையே தியானி, என்மீதே மனத்தை வை. நடக்கப் போவதை ஒருமித்த மனத்துடன் சாந்தத்துடன் பார்த்துக் கொண்டிரு, வானம் உன்மீது விழுந்தாலும் சலிப்படையாதே, உன்னைக் காப்பாற்ற நான் இருக்கும் போது இந்தக் கவலை எதற்கு? கலங்குவதால் என்னிடமிருந்து தூரமாகிறாய், பெரும் துன்பத்தை உண்டாக்கிக் கொள்கிறாய். என்மேல் நம்பிக்கை இருந்தால், என்னால் உனக்கு முடியாத காரியம் ஏதாகிலும் உண்டா?

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

24

ஞானத்தைப் பெறுவதற்காக யாராவது என்னிடம் வருவார்களா என்று நான் பரிதவித்துக் கொண்டு இருக்கிறேன். அப்படிப்பட்டவர்களை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கிறேன். ஏராளமாக ஞான நிதி என்னிடமிருக்கிறது. அதை தோ'ண்டியெடுத்து வண்டியில் சுமந்து செல்ல அழைத்தால் ஒருவரும் வருவதில்லை. அப்படி என்னிடம் வந்து ஞானத்தைப் பெறுபவர்ளை பெற்றெடுத்த தாய் மிகவும் புணிதமானவள். அப்பெண்ணின் மகனும் புணிதமானவனே, இவ்வுலக ஆசைகளால் அலைக்கழிக்கப் படுபவர்களுக்கு மன சாந்தி எப்படி கிடைக்கும்? அப்படிப் பட்டவர்களின் ஏக்கத்தைப் பார்த்து என் இதயம் உருகிப் போகிறது. கிடைத்தற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்றும், வீணான விவகாரங்களால் மன அமைதிக்கு மிக்க தூரமாகி விட்டவர்களுக்காக நான் என்ன செய்ய முடியும்? என் சாந்நித்யம், என் நாமஸ்மரணை, என் நற்போதனைகள்,

இவற்றில் ருசி ஏற்படாத அபாக்கியசாலிகளைப் பற்றி நான் எவ்வளவென்று கவலைப்பட முடியும்? இப்படிப்ட்டவர்களுக்கு மறுபிறவி எப்படி இல்லாமற் போகும்? நீங்கள் மிகவும் ஏங்கித் தவித்தும் கிடைக்காதது எதாகிலும் இருந்தால், அது என் சங்கல்பம் அற்றதாகவே இருக்க வேண்டும். என் ஏக்கம் என்ன என்பதை நீ கிரகிக்க முடிந்தால், என் மார்கத்திற்கு நீங்களாகவே வருவீர்கள். அப்படிப்பட்ட யோகமே உங்களை என்னிடம் சேர்க்கும். என் மார்கத்தில் கிடைக்கும் சாந்தி வேறு எங்கும் இருக்காது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

25

நான் ஒரு விஷயம் சொல்கிறேன் நிதானமாகக் கேளுங்கள். லோபம், டாம்பீகம், மன அழுக்கு, கபடம், அசத்தியம் முதலியன யாரிடம் இருக்கிறதோ அப்படிப்பட்டவர்கள் இருக்கும் இடத்திற்கு நான் போகமாட்டேன். அப்படிப்பட்டவர்கள் என் தரிசனம் பெற்றாலும், அவர்களுக்குக் கிடைக்கும் பலன் தாமரை இலையின் மீது நீர்த்திவலை போன்றதே. அவைகளை வெளியேற்றிய மறு நிமிடமே அவர்கள் என் அனுக்கிரகத்தைப் பெறுவார்கள். அஷ்டோபசார, ஷோடோபசார பூஜைகளுக்கு நான் கட்டுப்படுபவன் அல்ல. யார் என்பால் விருப்பமும், ஆர்வமும் கொண்டு விளங்குவார்களோ, யார் என்மீது எப்போதும் அன்பு செலுத்துவார்களோ, அவர்களின் யோக ஷேமங்களையும், பாரத்தையும் நானே வகிக்கிறேன். அவர்களுக்கு என்னைத் தவிர வேறு யாரும் தென்படுவதில்லை. எனக்கும் அவர்களைத் தவிர்த்து வேறு யாரும் இல்லை. ருணானுபந்தத்தால் நாம் சந்திக்க நேர்ந்துள்ளது. இந்த பந்தம் நிரந்தரமாக இருக்க வேண்டுமானால் வேறுமார்க்கமில்லை, நீங்கள் என்னை பரிபூரணமாக நம்புங்கள். ஒளிவு, மறைவு விளையாட்டுகள் என்னிடம் வேண்டாம். எண்ணெய்ப்பட்ட தரையின் மேல் தண்ணீர் ஒட்டாதது போல் நான் அழுக்காறு உள்ள இடத்தில் இருக்கமாட்டேன். யாருடைய இதயக் கதவுகள் எனக்காக திறந்துள்ளனவோ, அவர்களுடைய இதயத்தில் நானே நிறைந்திருப்பேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

26

மந்திர உபதேசங்களைக் கொடுத்து உங்களை ஆகாய மார்க்கத்தில் செலுத்தும் சக்தி எனக்கில்லை. அப்படிப்பட்ட வற்றை என்னிடம் எதிர்பார்க்காதீர்கள். நான் இறைவன் அல்ல. அவரது சேவகன் மாத்திரமே. என்னுடைய உடலை அவரது சேவையில் பணித்துள்ளேன். அவரது அனுக்கிரகத்துக்காக மிகவும் தவித்துப் போனேன். என் எஜமான் (அல்லா) மிகவும் தயை நிறைந்தவர். அவர் குறைவற்ற ஆன்மீகச் செல்வத்தை அளித்துள்ளார். அவருக்கு ஈடு இணை மற்றொருவர் இல்லை. எனக்கும் அவரைத்தவிர்த்து யாரும் இல்லை. அவரைப் பிரிந்து ஒருகணமேனும் இருக்க முடியாது, அப்படிப்பட்ட பிரிவை நான் சகிக்க முடியாது, அந்த மார்க்கத்திலேயே நான் அவரை நெருங்கினேன், அவர் அனுக்கிரகம் பெற்றேன். உனக்கு யாரோ ஒருவர் இருக்கிறார். எனக்கு யாரும் இல்லை. அல்லாவே என் குரு, தாய், தந்தை மற்ற அனைத்துமாவார். நீங்களும் இந்த மார்க்கத்தைக் கடைபிடித்து என்னிடம் வரலாம். இதற்கு பக்தி மார்க்கமே சாலச்சிறந்தது பக்திமூலமாக நீங்கள் என்னுடன் கொண்டுள்ள உறவு எப்போதும் நிரந்தரமாய் இருக்கும். மற்ற மார்க்கங்களின் மூலம் நான் கிடைத்தற்கரியவன். பக்திப் பரவசத்தில் நீங்கள் இருந்தால், அன்பு பரவசத்தில் நான் உங்களில் சேர்ந்திடுவேன். இதுவே என் மார்க்கம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

27

தர்க்கத்திற்கு எட்டாத தத்துவம் ஏதாகிலும் இருக்கிறதென்றால் அது என்னுடைய தத்துவமே. தர்க்கத்தால் நீங்கள் என்னை ஒருபோதும் தரிசிக்க முடியாது. என்னுடைய செயல்கள் மிகவும் முரண்பாடானதாகவும், புரிந்து கொள்ள முடியாததாகவும், ரகசியமானதாகவும் இருக்கும். யார் எப்படி என்னை ஆராதிக்கிறார்களோ அவர்களுக்கு அதே விதத்தில் நான் கிடைக்கிறேன். விஸ்வாசம் இருக்கும் இடத்தில் நான்

விஸ்வாசமாகவே இருப்பேன். என்னுடைய மூலசொரூபமே விஸ்வாசமாகும். என் லீலைகளுக்கு ஒரு அனுபவம் இருக்கும். ஒரு சிலருக்கு பிரத்யட்சமாகவும் மற்றும் சிலருக்கு பரோட்சமாகவும் அந்த அனுபவம் கிடைக்கும். அவற்றின் உள்ளார்ந்த பொருளை நீங்கள் உணரமாட்டீர்கள். உங்களுடைய பலப் பிறவிகளுக்கு சாட்சியாய் இருப்பவன் நான். யாருக்கு எது பிராப்தமோ அதற்குத் தக்கவாறே நான் அளிப்பேன். அளிக்கப்பட்டுள்ளது எதுவாக இருந்தாலும் அது என் சங்கல்பமே என்பதை நீங்கள் அறிந்தால் என்னை அறிந்து கொண்டவரேயாவர். அதனால் கிடைக்காதவற்றைப் பற்றியோ, இல்லாததைப் பற்றியோ கவலைப்படுவதால் பயன் ஒன்றும் கிடையாது. மிகவும் எளிதாக உங்களுக்கு மோட்சம் அளிக்கவும், என் இருப்பை நீங்கள் அறிந்து கொள்ளவும், லீலைகளை (திருவிளையாடல்கள்) நான் செய்கிறேன். அந்த லீலைகளைப் பற்றியே எப்போதும் சிந்தனை செய்து, அவற்றிலேயே எப்போதும் மூழ்கியும் இருந்தால் நான் யாரென்பதை நீங்களே கண்டுகொள்வீர்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

28

இந்தப் பிறவியில் சுகமாக வாழவேண்டும் என்று விரும்புபவர்கள் முதலில் தியாக குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். மிகவும் சிரமப்பட்டுச் சேர்த்த செல்வத்தை தன் பொருட்டே வினியோகம் செய்து, அதிலேயே ஆனந்தம் இருக்கிறது என்று நினைப்பவர்களைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும்? செல்வத்தைச் சேர்த்து அதை பத்திரப்படுத்தி, எப்போதும் அதைப் பற்றியே சிந்திப்பவர்களுக்குள் எனக்கு எங்கே இடமிருக்கப் போகிறது? செல்வம் நிறையப் பெருகப்பெருக, அதனுடனேயே துக்கமும் பின் வரும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. அப்படிப்பட்ட செல்வத்தை தர்மகார்யங்களுக்கு வினியோகம் செய்பவர் தன்யமானவர்கள். எனக்கு யாராகிலும் ஒரு ரூபாய் தட்சிணையாக அளித்தால் நான் அவர்களுக்கு

மீண்டும் நூறு மடங்கு அதிகமாக கொடுக்க வேண்டியிருக்கும். இந்த மசூதித் தாய்க்கு யார் கடன் பட்டிருக்கறார்களோ, அந்த பக்கீர் யாரைக் காட்டுகிறாரோ, அவர்களை நான் தட்சினை கேட்கிறேன். அவர்கள் இவ்விதமாக கடனிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். அவர்கள் இப்படி தட்சிணைக் கொடுத்து, விதைவிதைத்துக் கொள்கிறார்கள். அதன் பலனைஅதிக வளத்துடன் அறுவடைச்செய்து அனுபவிப்பார்கள். இப்படிப்பட்ட தியாக குணம் கொண்டவரும் செல்வத்தின் மீது பற்று இல்லாதவர்களும் என்னை மிகவும் நெருங்கியவர்கள் ஆவார்கள். அவர்களை கடைத்தேற்றுவதற்காக நான் மிகவும் ஆவல் உள்ளவனாக இருக்கிறேன். இதை அறிந்து கொண்டவர்கள் புணிதமானவர்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

29

நீங்கள் எப்போதும் உலக ஆசைகளுக்காகப் போராடிக் கொண்டே இருந்து, அதுவே சுகம் என்ற மயக்கத்தில் இருப்பீர்களானால் உங்களுக்கு எப்போதும் நான் கிடைக்காமலே போவேன். உலக இன்பங்களின் பால் அதிக அளவு ஆசை கொண்டு விளங்கினால், என் நற்போதனையை எப்போது நீங்கள் அறிந்து கொள்வீர்கள்? தேகம் இந்திரியங்கள் சக்தி இழந்து, முதுமை அடைந்த போது, மரணத்தின் முன் உதவியற்ற நிலையில் நிற்பதைத் தவிர வேறு வழி இல்லை. அப்போது மட்டும் என்ன செய்ய முடியும்? மீண்டும் பிறப்பது, துக்கப்படுவதுதான். அந்த அவல நிலையிலிருந்து உங்களைக் காப்பாற்ற பல வழிகளிலும் நான் முயற்சி செய்கிறேன். இருப்பினும் யாரும் என் சொற்களைக் கேட்பதில்லை. தேவையான போது மட்டும் அழைத்தால் அல்லா வருவாரா? இன்றைய நாள், இந்த நிமிடம் உங்கள் கையில் இருக்கிறது. நான் சொல்வதைக் கேளுங்கள். என் லீலைகளை நன்றாக மனத்தில் இருத்துங்கள். அவற்றை ஆழமாக சிந்தியுங்கள். அப்போது நீங்கள் அடையும்

ஆனந்தத்தையும், இப்போது நீங்கள் அனுபவிக்கும் சுகத்தையும் சீர்தூக்கிப் பாருங்கள். என் வார்த்தைகளில் உள்ளவற்றையும் அவற்றின் உட்பொருளையும் அப்போது நீங்கள் அறிய முடியும். என் நினைப்பை மிஞ்சிய பரமானந்தம் என்ன இருக்க முடியும். எங்கே இருக்கும்? நீங்கள் செய்யும் தொழிலுக்கு என் நினைவு தடையாக இருக்காது. உங்களுக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும். நான் உங்களுக்கு உதவி செய்பவனாக இருப்பேன். நாளை உண்டு என்ற மயக்கம் வேண்டாம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

30

தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென நினைப்பவர்கள், தாம் செய்த தவறுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள நினைப்பவர்கள், ஆத்ம வஞ்சனை செய்து கொண்டு மற்றவர்களை நிந்தனை செய்வார்கள். அவ்விதமாக அவர்கள் தனக்குத் தானே திருப்தி அடைவார்கள். உண்மையாக இது ஆத்மவஞ்சனையேயாகும். கோபத்தில் நீ மற்றவர்களை ஏசிய பேச்சு, அவர்கள் இதயத்தை எவ்வளவாக காயப்படுத்தி இருக்குமோ ஒரு நிமிடம் ஆலோசனைச் செய்து பார். இவ்வுலகில் இவ்விதமாக நீ உன்னைக் காப்பாற்றிக் கொண்டாலும், பரலோகத்தில் உன்னை யார் காப்பாற்றுவார்கள்? இக பரமிரண்டையும் உனக்கு நீயாகவே நரகமாக்கிக் கொள்கிறாய். இக உலகில் மனிதர்கள் உன்னை துவேஷிப்பார்கள். பரலோகத்தில் பரமன் உன்னை வெறுப்பார். அப்படிப்பட்ட ஆவேசம் தோன்றிய போது என்னைச் சரணடை. என் நாமத்தை உச்சரி. என்னை நினை. அப்போது உன்னில் பெரும் அமைதியுண்டாகும். இப்படிப்பட்ட சாதனைகளை செய்தால் நான் உனக்கு அருகில் வருவேன். நீ எனக்கு பிரியமானவன் ஆவாய். என் மூலமாக முக்தி கிடைக்கப் பெறுவாய். ஆவேசம் உன்னில் இருக்கும் வரை, என் அனுக்கிரகம் என்பது கானல் நீரைத் தேடுவதைப் போன்றதே

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

31

எப்போதும் நிராசையுடன் உற்சாகமின்றி இருப்பவர்களை நான் காண்கிறேன். அவர்களைப் பற்றி எவ்வளவாகவோ நான் கவலை கொள்கிறேன். அப்படிப்பட்ட நிராசையும் உற்சாகமின்மையும் ஏன் ஏற்படுகிறது? அவர்கள் சாதிக்க வேண்டும் என்று நினைத்த காரியத்தின் பாரம், அவர்களின் சக்தியைவிட அதிகமாக இருப்பதோ, அல்லது அவர்கள் கோரிக்கைகள் முன்பு, அவர்களின் சக்தி பலவீன மடைவதோ நிகழ்வதால், அப்படிப்பட்ட உதவியற்ற நிலை ஏற்படுகிறது. இதற்குக் காரணம், இருப்பதைக் கொண்டு திருப்தி யடையாமல் போவதோ, சுமக்க முடியாத பாரத்தைச் சுமக்க வேண்டுமென்பதாலோ நிகழ்கிறது. சகஜமாக அப்படிப்பட்டவர்கள், அவர்களை விட பெரிய சக்தி ஒன்று இருக்கிறது என்பதை மறப்பதால் இந்நிலை ஏற்படுகிறது. மனிதனின் சக்தி எல்லைக்குட்பட்டது. பரமனின் சக்தியோ எல்லையற்றது. என்னை எப்போதும் தங்கள் இதயத்தில் நிலை நிறுத்திக் கொள்வோர் பலவீனர்கள் ஆகமாட்டார்கள். அவர்களுக்குத் தோன்றும் கோரிக்கைகளும் கூட, தீங்குச் செய்யக்கூடியதாக இருக்காது. உனக்குத் தேவையானவற்றையும், உனக்கு அறுகதை உள்ளவற்றையும் நான் கொடுத்துக் கொண்டே இருக்கிறேன். அதை போதாதென்று இன்னும் ஏதோ வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு ஷிரிடி எந்த விதத்தில் உதவி செய்ய முடியும்? நீங்கள் அனுபவிப்பது, உங்களிட மிருப்பது, நான் உங்களுக்கு அனுக்கிரகித்துக் கொடுத்ததேயாகும் என்பதை நீங்கள் அறிந்தால் உங்களுக்கு சுபம் ஏற்படும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

32

என்னை எப்படி ஆராதிக்க வேண்டும், எப்படி அர்சனை செய்ய வேண்டும் என்ற விஷயத்தில் நீங்கள் குழப்பமடைய வேண்டாம். நான் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது மிகுந்த விஸ்வாசமே. அது குறைவாக இருக்கும் போது, என்னை எப்படி

அர்ச்சித்தாலும் பயன் இருக்காது. உனக்கு ஒவ்வொரு வினாடியும் நம்பிக்கையுண்டாவதற்கு, நான் நீங்கள் செய்யும் எல்லா வேலைகளிலும் உதவி செய்கிறேன். நான் இந்த பௌதீக உடலுடன் ஷிரிடியில் மாத்திரம் இருக்கிறேன் என்ற பாவத்தை விட்டு விடுங்கள். நான் எங்கும் வியாபித்துள்ளேன். என் வருகைக்கு எல்லைகள் இருக்க முடியாது. எனக்கு விமானங்கள், புகைவண்டிகள் போன்ற வாகனங்கள் தேவையில்லை. நான் நினைத்த இடத்திற்குப் போக முடியும். நீங்கள் என்னை நினைத்த உடன் நான் அங்கிருப்பேன். யார் எனக்கு அளிக்காமல் உணவு உட்கொள்ள மாட்டார்களோ, யார் எல்லாக்காரியங்களிலும் என்னை நினைத்துக் கொள்வார்களோ, அவர்களின் முன் புறத்திலும் பின் புறத்திலும், நான் தென்படுவேன். உங்கள் சாதனைக்கு நான் எப்போதும் உதவி செய்கிறேன். உங்கள் காரியங்களுக்கு காரணமாய் இருப்பவன் நானே, உங்கள் கோரிக்கைகளை நிறைவேறச் செய்யவே இரவும் பகலும் நான் உழைக்கிறேன். இதைத் தெரிந்து கொண்டு பாரத்தை என் மேல் சுமத்துபவனின் காரியங்கள் விரைவாகவே நிறைவேற்றப் படுகின்றன.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

33

வாழ்க்கையில் ஒவ்வொன்றும் பூர்வஜன்ம கர்மவினைகளின்படியே நடக்கும். ஆனந்தமானாலும் துக்கமானாலும் மற்ற ஏதாகிலும் நிச்சயிக்கப்பட்டுள்ளவையே நடக்கும். நான் சாட்சியாய் மாத்திரமே இருப்பேன், நானாக எதையும் செய்ய மாட்டேன், யாரிடமும் எதையும் செய்விக்கவும் மாட்டேன். இருந்தாலும் அனைவரும் என்னையே பொறுப்பாளியாக்குகின்றனர். துன்பம் வந்தபோதும் கூட என் மீது நம்பிக்கை குறைவுப்படாமல் இருந்தால் அவர்களுக்கு என் உதவி கண்டிப்பாகக் கிடைக்கும். கர்மவினையின் போக்கை யாரும் தடுக்க முடியாது. பிராராப்த கர்மத்தின் முறைப்படி வருபவற்றை அனுபவிக்க வேண்டியதே, துன்பம் வந்தபோது அதைரியப்பட்டு தூரமாக விலகிப் போதல் அல்லது தற்கொலை

செய்துகொள்ளுதல் போன்ற கொடுஞ்செயல்களுக்கு முற்படுவதால் மாத்திரம் கர்ம பந்தம் விலகிவிடாது. அதை அனுபவிக்க மீண்டும் பிறப்பது தப்பாது. கர்மங்களை குறைத்துக் கொள்ள வழி, அதை தைரியமாக அனுபவிப்பதே, நீங்கள் எப்போதும் என்னை நினைத்துக் கொண்டிருந்தால் என்பால் நம்பிக்கைக் கொண்டிருந்தால், அதை அனுபவிக்கும் சக்தியை நான் கொடுக்கிறேன். அது துன்பம் என்ற பாவனை உங்களில் ஏற்படாமல் நான் செய்கிறேன். உன்னில் இருக்கும் நானே அதை சுமக்கிறேன். என்னை மறந்த போது துன்பம் ஏற்படுகிறது. நான் உன்னைச் சார்ந்தவன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

34

உன்னிடம் எல்லா வளங்களும் நிறைந்திருக்கும் போது, எல்லாம் நன்றாக இருக்கும்போது, எல்லோரும் உன்னிடம் வருவார்கள். காலம் மாறி இதற்கு மாறாக நடக்கும் போது உன்னவர் என்று நீ நினைத்த யாரும் உன்னிடம் வரமாட்டார்கள். உன்னுடன் இருக்கவும் மாட்டார்கள். அப்போது நீ காலத்திற்குக் கட்டுப்பட்டவனே யாகின்றாய். உண்மையில் இந்த பிரபஞ்சத்தில் நம்பத் தகுந்தது எதுவும் இல்லை. யாரும் இல்லை. அப்படிப்பட்ட சங்கடமான நிலையில், நான் தனித்து உள்ளவன் என்ற பாவம் ஏற்பட்டு பயம் உன்னுள் இடம் பெற்று விடுகிறது. நீ உண்மையில் நம்பியிருந்தது வெறும் மயக்கமே என்று உனக்குத் தெரியவரும். அப்போது புலம்புவதால் லாபமென்ன? நான் சனாதனமானவன் (ஆதிபுருஷன்). என் பாதங்கள் மிகவும் புராதனமானவை. காலத்தோடு யுகங்கள் பல மாறினாலும் நான் இருப்பேன். உன் நட்பு, அனுராகம், பிரேமை, விஸ்வாசம் முதலியவற்றை என் மேல் வைத்திரு, நான் உன் கண் இமையைப் போன்றவன். உன் முயற்சி இல்லாமலேயே நான் உன்னைக் காப்பாற்றுவேன். புற உலகினை நம்பியிருக்கும் வரை, துன்பம் இருந்து கொண்டுதானிருக்கும். உன் வெளிமுகப் பார்வையை உதறித்தள்ளு, உள்நோக்கிய பார்வையால் என்னை தரிசி, உனக்கு துணையாக இருப்பேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

35

வளமான பூமியில் பயிர் நன்றாக விளையும். அப்படிப்பட்ட சாரமிக்க பூமியைக் கூட உழ வேண்டும்; தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும்; நாற்று நட வேண்டும்; சிரத்தையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டிருந்தால் நல்ல பலனை நீங்கள் பெறமுடியும். உன் இதயம் கூட சாரமிக்க பூமியைப் போன்றதே. மலினமான இதயத்துடன் யாரும் பிறப்பதில்லை. சுய நலம் அளவை மீறும் போது இதயம் அதிக மலினமடைகிறது. சுயநலத்துடன் கூடிய கோரிக்கைகள் நிறை வேறாமல் போகும்போது, குரோதம் தோன்றுகிறது. அந்தக் குரோதமே கேட்டிற்கு வழி வகுக்கிறது. அதன் வழியாக நாசமடைதல் நிகழ்கிறது. ஆகையால் காமம், குரோதம், மதம், மாச்சரியம் ஆகியவற்றிற்கு தூரமாக இருந்து இயங்குபவன் உத்தம புருஷன் ஆகிறான். இத்தகைய துர்குணங்கள் உன் இதயத்தில் முளைவிடாமல் இருக்க வேண்டுமானால், அந்த இதயத்தில் என்னை ஸ்தாபிதம் செய். என் சுத்த தத்துவ வடிவத்தால் உன் இதயத்தை தூய்மை படுத்திக்கொள். அப்போது பரிசுத்தனாக ஆவாய். யாருடைய இதயம் மலினங்கள் இன்றி சுத்தமாக இருக்குமோ, அப்படிப்பட்டவர்களின் இதயத்தில் நான் இருப்பேன். அவர்களின் மனோரதங்களை நான் நிறைவேற்றி வைக்கிறேன். நிச்சயமாக அப்படிப்பட்டவருக்கு சாந்தி என் மூலமாகக் கிடைக்கிறது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

36

இந்த சிருஷ்டியில் பசி இல்லாத ஜீவியோ உயிரினமோ இருக்காது. பசி என்பது மிகவும் கொடுமையானது. ஜீவன் தனது பசியைத் தணித்துக் கொள்வதற்கு வாயினால் கேட்கக்கூடும். பசியை தணித்துக் கொள்ள முடியும். ஆனால் வாயில்லாப் பிராணிகளின் விஷயத்தைப் பாருங்கள். பூர்வஜன்ம கர்மவசத்தால் அது நாயாகவோ, பூனையாகவோ பிறப்பெடுக்கிறது. அவற்றிற்கு நலன் பேணுவோர் இலர்.

வாயினால் பசியையோ, துன்பத்தையோ தெரிவிக்க இயலாது. ஜீவன் ஆனாலும் பிராணியானாலும், ஒருவருக்கு ஒருவர் கடன்பட்டிருப்பதால் மட்டுமே, ஒருவருக்கு அருகில் மற்றொன்று சேர்கிறது. அப்போது அவற்றை சீ என்று விரட்ட வேண்டாம், கருணையின்றி இம்சிக்க வேண்டாம். வார்த்தைகளால் மனிதர்களையோ, ஜீவராசிகளை அடித்தோ இம்சிப்பதால் எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. உயிரினங்களின் மீது தயை இல்லாமல் செய்யும் எந்த செயலும் எனக்கு மகிழ்ச்சியைத் தராது. அன்னதான விஷயத்தில் தராதரத்தைப் பார்க்க வேண்டாம். பசியின் கொடுமை யாருக்காகிலும் ஒன்றே. பிராணிகள் ஆனந்தமாக இருந்தால் தான் எனக்கு ஆனந்தம் ஏற்படும். மண்தட்டில் உயிரினங்களுக்கு வைக்கப்படும் ஒரு கவளம் உணவு, எனக்குத் தங்கத் தட்டில் வைத்தது போலாகும். அவற்றின் பசியைத் தணிப்பதோ என் பசியைத் தீர்ப்பதோ இரண்டும் ஒன்றே. அப்படி செய்வதால் உங்களுக்கு சுபம் ஏற்படும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

37

உயிர்கள் பிறப்பது எவ்வளவு சகஜமோ மரணிப்பதும் அவ்வளவு சகஜமே, ஆனால் மரணத்திலிருந்து தப்பித்து மோட்சம் அடையும் அவகாசம், ஒரு மனிதர்களுக்கு மாத்திரமே உண்டு, இவ்விதமாக மனிதனின் உடல் மாத்திரமே உயர்ந்த லாபத்தை அடைகிறது. புத்தியற்றவர்கள் மரணமடைகின்றனர் பக்தி, ஞான சொரூபர்கள் மோட்சத்தை அடைகிறார்கள். ஆன்மா பரிசுத்தமானது. அப்படிப்பட்ட சுத்த ஆன்மாக்கள் இறைவனோடு கலக்கும் அவகாசம் மனிதருக்கே உண்டு. இதய மலினங்களை நீக்கி, இந்திரியங்களின் ஆட்சியில் இருந்து விலகி, விஷய வாசனைகளுக்கு தூரமாக இருந்து யார் சம்சாரபந்தங்களை உடைத்துக் கொண்டு, மனதை என்மேல் வைத்து, வாக்கினால் என் நாமத்தை ஸ்மரித்து, அவர்கள் தியானத்திலும் கண்களிலும், வாக்கிலும், இருதயத்திலும் என்னையே ஸ்மரணை செய்து தரிசிக்கின்றனரோ, யாருடைய செயல்களெல்லாம் என்னைப்

பற்றியதாகவே இருக்குமோ யார் என்னை அனன்யமாக நேசிக்கிறார்களோ, யார் இறக்கும் தருணத்தில் கூட என் வடிவத்தைப் பார்த்துக் கொண்டிருப்பரோ, அப்படிப்பட்டவர்கள் நிச்சயமாய் மோட்சத்தை அடைகிறார்கள். மனம், இறக்கும் நேரத்தில் எதை விரும்புகிறதோ அதுவே பிராப்திக்கும். பூர்வஜென்ம ஞான சம்ஸ்காரங்களையொட்டி, மறு ஜென்மங்கள் இருக்கும். இது சாத்திரங்களால் உரைக்கப்பட்டுள்ளது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

38

மிகப்பெரும் கிரந்தங்களைப் படித்த பண்டிதர்களும் வித்வான்களும், யோகாப்யாசம் செய்தவர்களும்கூட மன சாந்தி பெறாமல் தவித்து, திருப்தியில்லாத மனதுடையவராய் இருக்கின்றனர். அவர்களுக்கு அப்படிப்பட்ட அசாந்தி ஏன் எற்படுகிறது? இதற்கு நிவாரண உபாயம் எங்கு கிடைக்கும் என்று எப்போதும் தேடிக்கொண்டே இருக்கிறார்கள். உண்மையில் சாந்தி என்பது யார் மூலமாகவோ அல்லது மற்றோர் மார்க்கத்தின் மூலமாகவோ கிடைக்காது. அசாந்தி ஏற்பட ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும். நூல்களைப் படித்து முடித்து விட்டுவிட்டால் சாந்தி கிடைக்காது. நூல்களில் கூறப் பட்டுள்ள விஷயங்களை எப்போதும் சிரவணம், மனனம், தியானம் செய்து வரவேண்டும். சாதனை மூலமாக நூல்களில் உள்ள விஷயங்களை, பழக்கத்திற்கு கொண்டுவரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். எந்த நூலையும் அரைகுறையாகக் கற்கலாகாது. பொருள் புரிந்தாலும் புரியாவிட்டாலும் முழுமையாகப் படிக்க வேண்டும். விஷயத்தைப் புரிந்து கொண்டால் சாந்தி ஏற்படும். இன்னொரு வழியும் உள்ளது. மஹாத்மாக்களை சந்திக்கும் பாக்ய வசத்தாலும் சாந்தி கிடைக்க அவகாசமுள்ளது. சாந்தியை விரும்புவர்கள் எங்கிருக்கின்றனரோ, அப்படிப்பட்டவர்கள் இருக்கும் இடத்தில், குளத்தில் நீர் போல சாந்தி கிடைக்கும். அப்படிப்பட்ட மஹாத்மாக்களின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

39

கோரிக்கைகள் எங்கிருக்கிறதோ அங்கு துக்கமும் இருக்கும். கோரிக்கைகள் தீர்ந்து போவது என்பது யார் விஷயத்திலும் சாத்தியமில்லை. தும்பிகளின் கூட்டம் போல் கோரிக்கைகளும் மிக அதிகமாக பிறந்துகொண்டே இருக்கும். கோரிக்கைகளால் துன்பமேயொழிய லாபம் கிடைக்காது. சப்தத்தால் கவரப்பட்டு மான், ஒளியால் கவரப்பட்டு விட்டில் பூச்சி, பரிசத்தால் கவரப்பட்டு யானை, வாசனைக்கு கவரப்பட்டு சர்ப்பம் உயிர் இழப்பதுண்டு. ஒரேயொரு ஆசையை உடைய அந்த ஜீவராசிகளே அவ்வளவு துன்பம் அனுபவிக்கும் போது, எண்ணற்ற ஆசைகளையுடைய மனிதர்கள் எப்படி இன்பம் அனுபவிக்க முடியும்? விசித்திரம் என்வென்றால் இந்த ஆசைகளுள் நிரந்தரமான இன்பத்தை அளிக்கவல்ல ஆசை ஒன்று கூட கிடையாது. இது தெரிந்தும் கூட கோரிக்கைகளின் பின்னால் ஓடுவது அஞ்ஞானமேயல்லவா! அந்த அஞ்ஞானம் நசித்தால் சம்சார ஆசை ஒழியும். அப்படிப்பட்ட அஞ்ஞான நிர்மூல சாதனங்களே எனது கதைகள், எனது வினோதங்கள், எனது லீலைகள், என் நாமஸ்மரணை, ஒவ்வொரு நிமிடமும் என் கதைகளைக் கேட்டல், மனனம், தியானம் யார் செய்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களின் அஞ்ஞானம் சூடுபட்ட வெண்ணெய் போலவே கரைந்து விடுகிறது. அவித்யை எல்லா துன்பங்களுக்கும் மூலம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

40

விஷயங்கள் விஷத்திற்குச் சமமாகும். ஆனால் விஷயங்களுக்கு மிகவும் சக்தி உள்ளது. விஷத்தையுண்டால் ஒருமுறையே மரணமுண்டாகும். விஷயங்களால் ஜனன மரண சுழலில் சிக்கிக் கொள்கிறோம். விஷயங்களை அனுபவிப்பவர்கள் கீழ்மையை அடைவர். மானாபிமானங்கள் அழிந்து போகும். கௌரவ மரியாதைகள் கண்களுக்கெட்டாத தூரமடையும்.

விவேகம், விலக்ஷனஞானம் அழிந்து போகும். அப்படிப்பட்டவர்களுக்கு உலகில் கௌரவம் கிடைக்காது. யார் நிரந்தரம் தேகானுபந்தம், கொண்டவரோ, சம்சாரத்தை சொர்க்கமாக பாவிப்பார்களோ, அவர்களுக்கு விஷயவாசனைகளின் பால் வியாமோகம் ஏற்படும். அப்படிப்பட்டவருக்கு ஞானம் உண்டாவது துர்லபம். பற்றின்மை, விரக்தி ஏற்படாமல் ஞானம் உண்டாகாது. சம்சார சுகங்களின் பால் விரக்தி கொண்டவர்கள், விஷய வாசனை என்ற முட்களால் குத்தப்பட்டவர்கள், ஞானத்தைத் தேடிக்கொண்டு என்னிடம் வருகின்றனர். அவர்கள் என் வடிவத்தை தரிசிப்பதால் மட்டுமே சாந்தி அடைந்து எப்போதும் என்னிடமே பிரேமானுராகம் கொண்டு என்னையே சரணமடைந்து விடுவார்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

41

கர்ம பந்தங்களிலிருந்து விடுபடுவதற்காக இப்பௌதீக உலகிற்கு வந்துள்ளோம். அதிர்ஷ்டவசமாக மனிதப்பிறவி கிடைத்துள்ளது. அனாதியாய் வந்துள்ள கர்மபலன்களை அழித்துக் கொள்வதற்கு பதிலாக, மீண்டும் இந்திரியங்களின் போகத்திற்கு அடிமையாவது, கர்மபலன்களை அதிகப்படுத்திக் கொள்வதேயாகும் அப்படிப்பட்ட நிலை கர்மபந்தங்களிலிருந்து விடுதலையளிக்காது. மனிதப்பிறவிக்கு உதவியாக இருக்காது. பக்தி மார்க்கத்தில் திரிகரண சுத்தத்துடன் பயனிப்பவர் மாத்திரமே கர்மபந்தங்களிலிருந்து விடுதலை அடைய விரும்புவார்கள். கர்மபந்தங்களிலிருந்து விடுதலை அடைய விரும்புபவர் சுப அசுபங்களுக்கு, பாவ புண்ணியங்களுக்கு தூரமாக இருக்கவேண்டும். எல்லா காரியங்களையும் இறைவனுக்காகவே செய்யும் பொழுது இந்த இரட்டைகளிலிருந்து விடுதலை அடைவது சாத்தியமாகும். இந்த பௌதீக உலகம் கர்மபூமியாய் இருப்பதால், இங்கு கர்மங்கள் செய்யாமல் இருக்கவும் முடியாது. கர்மங்களை செய்யாவிடில் வாழ்க்கை நடக்காது ஆனால் அவ்விதமாக கர்மங்களைச் செய்து கொண்டே கர்மபந்தங்களில்

சிக்காமல் இருப்பது கர்மாக்களில் உயர்ந்தாகச் கொள்ளப்படுகிறது. மனம், வாக்கு, காயம் மூலமாக பாவங்கள் ஒட்டிக்கொள்கிறது. ஆகையால் திரிகரண பரிசுத்தம் மிகவும் அவசியமாகும். திரிகரண சுத்தத்துடன் இறைவனின் சேவையில் ஈடுபட்டால், பாவ வாழ்க்கை முடிந்து போகிறது. பரிவர்த்தனையால் கைதிகள், சிறையிலிருந்து விடுதலை அடைவதைப் போன்று, இந்த ஜீவன் பௌதீக ஜகத்திலிருந்து விடுதலை அடையமுடியும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

42

ஜீவன் முக்தியடைவது என்றால் தனது சொரூபத்தில் நிலைத்திருப்பதேயாகும். முக்தி என்றால் என்ன என்பதற்குச் சரியான விளக்கம் அதுவே. முக்தன் ஆவதற்கு மரணமடைய வேண்டும் என்ற வாதம் முற்றிலும் சரியானதன்று. வாழ்ந்து கொண்டிருக்கும் போதே கூட ஜீவன்முக்தி பெறலாம். அப்படிப்பட்ட மஹாத்மாக்களை ஜீவன் முக்தன் என்கிறோம். மனத்தாலும், வாக்காலும், தேகத்தாலும் பரமாத்மாவின் சேவையில் நிலை பெற்றவன் ஜீவன் முக்தனேயாவான். அப்படிப்பட்டவர்கள் உடலை நீக்கிய பின்னர் பரமாத்ம பிராப்தியையே பெறுகின்றனர். நான் யார்? எனக்கு ஏன் திரி குணங்கள் ஏற்படுகின்றன? என்ற விஷயத்தைத் தெரிந்து கொள்ளாவிடில் உண்மையான நன்மை எப்படி யுண்டாகும்? இதையும்கூட நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஜீவனின் லட்சியம் பரமாத்ம பிராப்தியை அடைவதே. அந்த நிரந்தரமான கவனமே ஜீவனின் ஸ்வரூப ஸ்திதி, இந்த விஷயத்தை மறந்து விடுவதால் பிறவிப்பிணிப் பற்றிக்கொள்கிறது. அந்த பவரோகத்திற்கு பரமாத்மாவின் நாமமே சரியான மருந்தாகும். அப்படிப்பட்ட மஹாத்மாக்கள், மனிதனின் வடிவில் தோன்றிய போதும் அவர்கள் பரமனின் பிரதிபிம்பங்களேயாவார்கள். தீவிரமான பக்தியின் மூலமாக மாத்திரமே பந்தங்களிலிருந்து விடுதலை அடைய முடியும். அவர்கள் மாத்திரமே துக்கராஹித்ய சித்தியை அடைவர். பக்தி மார்க்கமே சாலச் சிறந்தது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

43

கிரகணக் காலத்தில் சூர்ய சந்திரர்கள் அவர்களுடைய தேஜசை இழக்கிறார்கள். அந்த சமயத்தில் பிரகாசம் குறைந்து காணப்படுகிறார்கள். உண்மையில் அவர்கள் ஒளிபொருந்திய சொரூபர்களே. கிரகணம் காரணமாக அந்நிலையை அனுபவிக்கின்றனர். இந்த உண்மை இயற்கையில் நமக்கு விளங்கிக் கொண்டே இருக்கிறது. அவ்விதமாகவே மானிடர்கள் தூய்மையுடனும், நிர்மலமாகவும் பிறக்கின்றனர். தீயவர்களின் நட்பினாலோ, சுபாவ சித்தத்தின் பாவனையாலோ, வாழ்க்கை முறையின் காரணமாகவோ, அல்லது மற்ற கேடு விளைவிக்கும் காரணங்களாலோ அஹம் என்ற கிரகணத்தால் பீடிக்கப் படுகின்றனர். அஹம் மனிதனில் தோன்றிய மறுநிமிடம் நாசமடைதல் ஆரம்ப மாகிறது. காச நோயால் பாதிக்கப்பட்டவன் நிமிட நிமிடத்திற்கு பலவீனமடைவது போன்று அந்த மனிதர்கள் ஒவ்வொரு நிமிடமும் நாசமடைகின்றனர். "நான் மற்ற எல்லோரையும் விட கீழ்மையானவன், என் சக்தி கட்டுக்குள் அடங்கியதாகும், நான் தெரிந்து கொள்ள வேண்டியது அளவற்றதாக உள்ளது, நான் ஒரு நிரந்தரமான சாதகன் மாத்திரமே." என்று யார் பாவிக்கிறார்களோ அவர்களுக்கு அஹம் மிகுந்த தொலைவிலேயே இருக்கும். அஞ்ஞானத்தில் பிறப்பதே அஹம் ஆகும். அந்த அஞ்ஞானம் பரமாத்மனின் தியானத்தால் மாத்திரமே நாசமடையும். பரமாத்மன் என்றால் சிரேயசையுடையவன் என்று தெரிந்து கொண்டவர்களே ஞானிகளாவார்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

44

நான் ஒரு உண்மையைச் சொல்கிறேன். சிரத்தையுடன் கேள். காரணம் இல்லாத பிறப்பு இருக்காது. ஏதோ ஒரு காரியத்திற்காக அல்லா நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார். இம்மாயா ஜகத்தில் தோன்றிய மறுநிமிடமே, நாம் எந்த காரியத்தை நிறைவேற்ற வந்தோமோ, அதை முழுமையாக

மறந்து விடுகிறோம். நாம் பிறக்கும் போது நம்முடன் மறதி என்ற தீங்கும் உடன் பிறக்கிறது. அதன் காரணமாக நம் தேவை என்னவோ, நாம் எதற்காகப் பிறந்தோமோ என்ற விஷயத்தை விட்டு விட்டு, சரீரத்தால் இன்பம் அனுபவிக்கும் மார்கத்தில் நுழைந்து விடுகிறோம். அந்த நிமிடம் முதல் இறைமார்க்கத்திலிருந்து தூரமாகின்றோம். அச்சமயத்தில் இறைவனின் சங்கல்பத்தால், நமக்கு யாரோ ஒருவர் நல்ல மார்க்கத்தைத் தெரிவிக்கிறார். அறிவுமிக்கவர்கள் அந்த நலம் பயப்பவற்றைப் பின்பற்றி இந்தப் பிறவியைப் பயன் படுத்திக் கொள்கின்றனர். அப்படி நற்போதனை செய்தவரே சத்குரு, ஹிதம் சொல்பவர், பரமாத்மா என அறிந்து கொண்டவர் பாக்கியசாலிகள். யார் நற்போதனை செய்தாலும் தள்ளிவிட வேண்டாம். சுத்த ஜலத்தை யார் கொடுத்தாலும் அது தாகத்தைத் தீர்ப்பது போலவே, யார் நல்வார்த்தைகளைச் சொன்னாலும் அது நன்மையே அளிக்கும். நற்போதனை செய்பவர் யார் என்றும், எங்கிருக்கிறார் என்றும் தேடுபவரை ஜிஞ்ஞாசு என்று சொல்கிறோம். ஜிஞ்சாசம் (தேடுதல்) இல்லாத வாழ்க்கை வீண் என்று அறிவாய்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

45

வேதசாராம்சத்தையும், சாத்திரங்கள் உரைப்பதையும் தவறாகப் புரிந்து கொண்டு தவறாகச் சொல்வதால் நன்மையை விட தீங்கே உண்டாவதற்கு அதிக அவகாசம் உள்ளது. இறைவனே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார், அவரே எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றுவார் என்ற பாவத்துடன் உனக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வேலையைச் செய்யாமல் உட்கார்ந்திருந்தால் காரிய சித்தி ஏற்படாது. அரிசி, தண்ணீர், நெருப்பு இருந்தாலொழிய உணவு வராது, பசிதீராது, அவ்விதமாகவே கார்யதீட்சை, விஸ்வாசம், இறைவனின் சங்கல்பம் இருந்தாலோழிய காரியம் நிறைவேறாது. ஆகையால் உனது காரியங்கள் தடையின்றி முடிய வேண்டும், சிறப்பாக செயலாற்ற வேண்டும் என்ற சீரிய எண்ணமிருந்தால்,

உறுதியான நம்பிக்கையை என்பால் வைத்து, என் சங்கல்பத்தை ஆராதிப்பாய். தேகத்தையும், மனதையும், புத்தியையும், செல்வத்தையும், அனைத்தையும் என் பாதங்களில் கிடத்தி, அனன்யசரணம் அடைந்தவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறாமல் போவது என்ற பேச்சே என் சங்கல்பத்தில் இல்லை. அப்படி என்னைப் புரிந்து கொண்டு ஆராதிப்பதால், உன் முயற்சியையும் உறுதியையும் நான் வெற்றிபெறச் செய்வேன். சுபம் உண்டாக்குவேன். உன் காரியங்களை நிறைவேற்றவே நான் பாடுபடுவேன். சர்வம் சாயிமயம் என்ற பாவம் உன்னில் இருந்தால் நான் தனியாக எங்கிருக்க முடியும்? உன் இதய பீடமே என் இருப்பிடம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

46

என்னிடம் பண்டிதர்கள் வருகிறார்கள், வித்வான்கள் வருகிறார்கள், தத்துவ அறிஞர்கள் வருகிறார்கள், ஒன்றும் தெரியாதவர்கள் வருகிறார்கள், பாடல் பாடுபவர்கள், பஜனை செய்பவர்கள், யாசகம் கேட்பவர்கள், பாமரர்கள் ஆகியோரும் வருகின்றனர். துவாரகாமாயி மஹிமையை என்னவென்றுப் பார்க்கலாம் என்றும் சிலர் வருகின்றனர். என்னை தரிசிப்பதற்காக என்று சிலர் வருகிறார்கள். யாருக்காகிலும் இந்த மசூதிமாயி யின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். எனக்கு எவரிடமும் பேதபாவமோ, துவேஷபாவமோ இருக்காது. எல்லோரும் எனக்கு சமமானவர்களே. அப்படி இருகின்றவர்களுள் பலர் சாயிபாபா இந்துவா? முஸ்லீமா? எந்த குலத்தைச் சேர்ந்தவர்? என்ற சந்தேகங்களை விவாதித்துக் கொண்டு, அவ்விதமாகவே போகவும் செய்வார். ஒருவரும் நிலையாக உட்காருவதில்லை. நான் சொல்வதை சாவதானமாகக் கேட்பதில்லை. நதிகள் கடலில் கலந்த மறு நிமிடம் நாம, ரூப, ருசி ஆகியவற்றை இழக்கிறது. நதிகள் எல்லாம் சாகர ஜலமாகவே மாறிவிடுகிறது. இந்த எல்லையற்ற விஸ்வத்தில் நாம் எல்லோரும் அந்த இறைவனின் கருணையால் மட்டுமே சுகமாக இருக்க முடிகிறது. அவரே

நம்முடைய தந்தையாவார். அவரே நம்முடைய இரட்சகன். இவ்வளவு தூரம் பிரயாசையுடன் வந்து வீணாக என் குலகோத்திரங்களைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தால், அவர்களுக்கு கிடைக்கும் பரமார்த்திக ப்ராப்தி என்னவாக இருக்க முடியும்? பசுவின் நிறம் எதுவானாலும் சுத்தமான பாலையே தருகிறது என்ற பாவம் இருந்தால் துவாரகாமாயி அப்படிப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

47

குருவிற்கு சேவை செய்வது எப்படி என்ற சந்தேகம் உங்களுக்குத் தோன்றலாம். சேவை என்பது மிகவும் புனிதமானது. விருப்பம் இருந்தால் செய்வது இல்லையேல் விட்டுவிடுவதற்காகச் செய்வது என்பதை சேவை என்று கருத முடியாது. என் உடல் குருவினுடையது. என் உடல், மனம், புத்தி குருவின் ஆதீனத்தில் உள்ளன. நான் சுதந்திரமானவன் அல்லன் என்ற பாவத்துடன் குருசேவை செய்பவர்கள் தன்யமானவர்கள். நன்மை தீமையை அறிந்தவர் குரு. குரு எதைச் சொல்கிறாறோ அதுவே நன்மை விளைவிக்கும். நம் மேன்மையை நாடுபவர் குருமாத்திரமே. ஆகையால் குருவிடம் வினயம், நம்பிக்கை, பொறுமை, சகித்துக் கொள்ளுதல் முதலான வற்றைக் கொண்டு, தெரியாத விஷயத்தை மிக்க வினயத்துடன் தெரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். குரு பிரத்தியேகமாக உபதேச வழியை மேற்கொள்ளமாட்டார். குருவின் ஒவ்வொரு வார்த்தையையும், சாதாரணமாகச் சொல்லும் விஷயங்களையும் சிரத்தையுடன் கேட்டு அதனுடைய சாராம்சத்தை மூட்டை கட்டிக்கொள்ள வேண்டும். குரு என்ன சொல்கிறார், கேட்க வேண்டுமென்று சகோரப்பறவை போன்று எதிர் பார்த்திருந்து, கடமையுணர்வுடன் குருசேவை செய்து வந்தால் குரு நிச்சயம் ஏற்றுக் கொள்வார். குருவிற்கு கோபம் ஏற்படுமானால் சிவபெருமான் கூட ஒன்றும் செய்யமுடியாது. குருவிடம் வினயம் நன்மையை உண்டாக்கும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

48

இறைவனின் ரூப தரிசனத்திற்காக அனைவரும் ஏங்குகின்றனர். இறைவன் எப்படி இருப்பார்? அவருடைய உருவம் எப்படி இருக்கும்? என்ற ஏக்கம் சகஜமாகவே எல்லோரிடமும் இருக்கிறது. சரி இவ்விஷயத்தை பக்கத்தில் வையுங்கள். இறைவன் எங்கே இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டால் அவருடைய உருவம் எப்படி இருக்கும் என்றும் தெரிந்து கொள்ளலாம்.உண்மையில் ஆலயங்கள், இறைவனுடைய சகுண வடிவத்தை விக்ரக வடிவமாகப் பார்த்து ஆராதிப்பதற்குப் பயன் படுகின்றன. உண்மையில் இறைவன் நம்முடைய இதயக்கோவிலிலேயே இருக்கிறார். இதயம் பரிசுத்தமாகவும் மனம் நிர்மலமாகவும் இருக்குமானால் ஆலோசனை மார்க்கத்தில் மனிதாபிமானம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். மனிதத் தன்மையின் வழியாக தயை, தர்மம். நல்ல மார்க்கத்தைக் கடைபிடித்தல் உயிர்களின் மீது கருணை கொள்ளுதல், மற்றவர் மீது அன்பு காட்டுதல் போன்ற குணங்கள் சகஜமாகவே தோன்றும். இக்குணங்களையெல்லாம் தெய்வ சொருபமாகவே கிரகிக்கப்பட வேண்டும். இறைவனுக்கு ஒருவடிவம் எப்படி இருக்க முடியும்? நல்ல பாவனைகளுக்கு எந்த உருவம் இருக்குமோ அதே பாவமே இறைவனின் உருவமாகும். உண்மையில் இக்குணங்களைக் கொண்டவர்கள் யாராயினும் அவர்கள் இறைவனின் சொரூபமேயாவார்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

49

மனிதன் சமூகஜீவி, ஒருவரின் மேல் ஒருவர் ஏதோ ஒரு காரியமாக ஆதாரப்பட்டிருப்பார்கள். நல்ல முறையில் புரிந்து கொள்வதால் சமூகம் நல்ல முறையில் இயங்கும். உன்னிடம் ஏராளமான செல்வம் இருக்கலாம். மற்றவர்களிடம் இல்லாமற் போகலாம். உனக்கு இல்லாதது எதுவோ, அது மற்றவர்களிடம் ஒருவேளை இருக்கலாம். இக்காரணத்தால் மனிதர்களிடையே உறவு நிலவுகிறது, யாராவது பண உதவி கேட்டோ பசியின்

காரணமாக உணவு கேட்டோ, அல்லது உடைக்காகவோ, அல்லது இருக்க இடம் கேட்டோ உன்னிடம் வர நேரலாம். ருணானுபந்தம் இருந்தாலொழிய ஒருவரிடம் மற்றவர் வரமாட்டார். அப்படி யாராகிலும் உன்னை நாடி வந்தால் உனக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் செய். இல்லையேல் அவர்களை விட வினயமாக, மிருதுவான மொழியில் பேசி அவர்களை அனுப்பிவிடு, அவ்வளவே யொழிய கண்டிப்புடன் பேசி அவர்களின் இதயத்தில் காயம் உண்டாக்காதே, அவர்களுக்கு தேவைகளைவிட, உன் கடின வார்த்தைகள் அதிகமான வேதனையை உண்டாக்கும். யாரேனும் யாரையாவது கோபத்துடன் தூஷித்துக் கொண்டிருந்தால் என் இதயம் வேதனையில் துடிக்கும். அந்த கோபாவேச வார்த்தைகள் என் இதயத்தைப் பிளப்பதைப் போன்ற வேதனையைக் கொடுக்கும். உன் மிருதுவான வார்த்தைகள் எனக்கு ஆனந்தம் உண்டாக்கும். எனக்கு ஆனந்தம் உண்டாகுமென்றால் நீ செய்ய வேண்டிய செயல் இதுவே.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

50

ஒருவரைவிட ஒருவர் உயர்ந்தவர் என்ற பாவம் ஏன் தோன்றுகிறதோ என்று எவ்வளவு யோசித்தாலும் விடை கிடைக்க வில்லை. செல்வத்தினால் அப்படிப்பட்ட பாவம் உண்டாவதென்பது பொருத்தமற்றது. செல்வம் இன்று இருக்கலாம். நாளை இல்லாமற்போகலாம். ஒருவேளை குலப்பிறப்பால் தோன்றுகிறதோ என்பது கூடப் பொருத்தமற்றதே, குலம் ஏதானாலும் அனைவரிலும் இருக்கும் சீழ், ரத்தம் ஒன்றே. உண்ணும் உணவும் ஒன்றே. இது பரிபூரண அஞ்ஞானத்தால் உண்டாகிறது என்பது பொருந்தும். செல்வந்தனானாலும், வறியவனானாலும் இறுதியில் அடைவது மரணமே, அந்த மரணத்தில் தோன்றும் நிலையான இன்பம் யாருடையதானாலும் ஒன்றே. உடல் நீர்குமிழியைப் போன்றது. வாழும் சமயத்தில் வேறு வேறான மார்க்கங்கள் இருக்கலாமேயொழிய, மரண மார்க்கம் யாருக்காகிலும் ஒன்றே. ஆட்டி வைக்கும் இறைவன், வாழவைக்கும் தெய்வம் அனைவருக்கும் ஒருவனே. வாழ்கைக்கும் மரணத்திற்கும் இடைப்பட்ட காலத்தைப் பார்த்து மிகவும் சந்தோஷப் படுவது உண்மையில் அஞ்ஞானம் அன்றி வேறென்ன? விறகுக் குச்சிகள் எந்த வடிவத்தில் இருந்தாலும் நெருப்பில் விழுந்தவுடன் ஒரேவிதமாக எரிந்து சாம்பலாகும் போது, வித்தியாசமான மனப்போக்கு ஏன் ஏற்படுகிறதோ! நிதானமாக யோசித்துப் பார்த்தால் என் வார்த்தைகளில் உள்ள சத்தியம் உனக்கு விளங்காமற் போகுமா? பின்னபாவம் தீயவிளைவுகளுக்கே வழிகோலுமல்லவா?

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

51

உனக்கு ஆன்மீக அறிவை வழங்கும் ஒரு கதை சொல்கிறேன் கேள். உலகில் தவறு செய்யாத மனிதன் இருக்க மாட்டான். தவறு செய்வது மனிதனின் சகஜகுணம். அந்தத் தவற்றைத் தெரிந்து கொண்டு பரிதாபப்படுபவன், பாவத்திலிருந்து விமுக்தியடைந்து புண்யாத்மா ஆகின்றான். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து நான் எவ்வளவாகவோ ஆனந்தப்படுகிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமான அனுக்கிரகம் காட்டுகிறேன். ஒரு ஆடுமேய்ப்பவனுக்கு மந்தையில் 100 ஆடுகள் உள்ளன. அதில் ஒரு ஆடு மந்தையிலிருந்து வெளியேறி எங்கேயோ சென்று விட்டால், அந்த மேய்ப்பாளன் 99 ஆடுகளை விட்டுவிட்டு, மறந்து தவறிவிட்ட அந்த ஒரு ஆட்டிற்காகவே கவலைப் படுகிறான். தேடுவான், அந்த ஆடும் மந்தைக்கு வந்து சேர்ந்து விட்டால், மேய்ப்பவன் எவ்வளவோ சந்தோஷப்படுவான். இவ்விதமாகவே சன்மார்க்கத்தில் உள்ளவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை, வக்கிரமார்க்கத்தில் சஞ்சரிப்பவனைப் பற்றியே என் கவலை. அவனையும் சன்மார்க்கத்தில் இருக்கச் செய்ய நான் இரவும் பகலும் முயற்சிச்செய்து கொண்டிருப்பேன். உழைத்துக் கொண்டிருப்பேன். என் ஏக்கம் அவனைப் பற்றியதே.

வக்கிர மார்க்கத்தில் பிரயாணம் செய்யும் மனிதர்கள், என் ஏக்கத்தைப் புரிந்து கொண்டால், என் முயற்சிக்குப் பலன் கிடைத்ததாகவே கருதுவேன். அப்படிப்பட்டவர்களை குருவியின் கால்களுக்கு கயிறுகட்டி இழுப்பதுபோல், இந்த மசீது தாயிடம் இழுத்துக் கொண்டு வருவேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

52

நன்மையையும், சிரேயசையும் அளிக்கும் ஒரு விஷயம் சொல்கிறேன். சிரத்தையுடன் கேள். நாமஸ்மரணைச் செய்யும்படி எப்போதும் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படி நாமஸ்மரணை செய்து கொண்டிருந்தால், பல தீயவிளைவுகளுக்குக் காரணமாகும் பேச்சு, தீமையை அளிக்கும் பேச்சு இவற்றிற்கு இடமிருக்காது. நாமஸ்மரணையால் உள்ளம் பரிசுத்தமடைகிறது. இறைவன் உன் அந்தரங்கத்திலேயே இருக்கிறார். அது அசுத்தமாகவும் மலினமடைந்தும் இருந்தால் பரமாத்மா அங்கு இருக்கமாட்டார். சிலர் செய்வதற்கு எந்த வேலையும் இல்லாமையால் இறைவனை நிந்திக்கின்றனர். ஏளனமாகவும் பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனாலும் இறைவன் சும்மா இருப்பார். காரணம் என்னவென்றால் இறைவன் தனியாக இருக்கமாட்டார். வேறாகவும் இருக்கமாட்டார். இறைவனின் இருப்பிடம் பக்தனின் இதயத்துக்குள்ளேயே இருக்கும். பக்தர்கள் இறைவனின் சொரூபங்களே, பக்தனை யாராவது நிந்தனை செய்தாலும், ஏளனமாகப் பேசினாலும் இறைவன் சும்மா இருக்கமாட்டார். கண்டிப்பாகத் தண்டிப்பார். ஆகையால் பக்தன் எங்கு போற்றப் படுகிறானோ, எங்கு கௌரவிக்கப்படுகிறானோ அங்கு இறைவன் இருப்பார். பக்தன் நின்ற இடமே புண்ய க்ஷேத்திரம். இறைவன் பக்தனுக்கு தாசன். பக்தன் கானம் செய்து கொண்டிருப்பதால் இறைவனின் இருப்பு உலகிற்கு தெரிய வருகிறது. பக்தன் இறைவனின் தூதுவன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

53

நல்ல மணத்தையுடைய மலர்களை ஒரு கூடையில் வைத்து இறைவனுக்குச் சமர்ப்பிக்கலாம் என்ற நல்ல உத்தேசத்தோடு இருக்கையில், அதில் இருக்கும் ஒரு அழுகிய மலர் கூடையில் உள்ள அனைத்து மலர்களையும் துர்நாற்றம் அடிக்கும் படி செய்கிறது. அதனால் அனைத்துப் பூக்களும் வீணாகின்றன. அதே விதமாகவே சில பக்தர்கள் என்னை தரிசிக்கலாமென்று, கர்மங்களை நாசமடையச் செய்யலா மென்று, ஆர்வத்துடன் பயணமாகின்றனர். வழியில் யாரோ ஒரு வீண்பேர்வழி ஷிரிடியில் என்ன இருக்கிறதையா? அங்கு பாழ் அடைந்த மசூதி, அங்கே ஒரு பக்கீர் தட்சினை கேட்டு உட்கார்ந்திருப்பார். அவர் இந்துவோ, முஸ்லிமோ தெரியாது. அவரை தரிசிப்பதால் என்ன பிரயோஜனம்? என்று சொல்வார்கள். விஸ்வாசத்துடன் பயனம் ஆன அவர் மனம் சலன மடைகிறது. மனம் மாறிவிடுகிறது. கர்மத்தின் தொடர்பை அவர்கள் அவ்விதமாக நீட்டித்துக் கொள்கிறார்கள். தரிசிப்பதற்காகப் புறப்பட்டவர் நேராக என்னிடம் வரவேண்டும். அவர்கள் தம் கண் களாலேயே பார்க்கவேண்டும், தீர்மானம் செய்ய வேண்டும். மற்றவர் பேச்சைக் கேட்டு பலனை உதைத்துத் தள்ளக்கூடாது. ஒவ்வொருக்கும் ஒவ்வொரு மனோபாவம் இருக்கும். எங்கு உன் மனம் சாந்தியடைகிறதோ அங்கு இறைவன் இருப்பது போலவேயாகும். இதை அறிந்து நடப்பது நலனைக் கொடுக்கும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

54

சுக துக்க விஷயத்தில் மானிடருக்கு ஒரு நிச்சயமான அபிப்பிராயம் இருக்காது. நான் சொல்வது வாஸ்தவம். இந்த மசூதியில் உட்கார்ந்து கொண்டு நான் அசத்தியம் பேசமாட்டேன் சுகத்தில் சுகமாக இருக்கும் போது, கர்ம சிந்தாந்தமோ, பரமனின் சக்தியோ எதுவும் ஞாபகத்திற்கு வராது. தம்முடைய அதிர்ஷ்ட வசத்தாலோ, முயற்சியாலோ இதெல்லாம் கிடைத்தது என்று நினைத்துக் கொள்வார்கள். அம்மனிதர்களே துக்கம் வந்த போது, எந்த இறைவன் கோபப்பட்டாரோ, எப்போது எந்த பாவம்

செய்தோமோ என்று புலம்புவார்கள். நான் ஒரு உண்மையைச் சொல்கிறேன். நம்புங்கள். சுக துக்க விஷயத்தில் இறைவனின் தலையீடோ அல்லது மற்றொரு சக்தியின் தலையீடோ இருக்கவே இருக்காது. இறைவன் வெறும் சாட்சி மாத்திரமே. பூர்வஜென்மங்களுக்கு சாட்சியாக இருந்தவர் அந்த பரமாத்மனே. கர்மசம்ஸ்காரம் ஏதாக இருக்குமோ அதன்படி சுக துக்கங்கள் வாய்க்கும். அவர்கள் அந்தந்த ஜென்மங்களில் அனுசரித்த கர்மங்களின் சாரமே சுகம் அல்லது துக்கத்தின் வடிவத்தில் வருகின்றன. இவ்விஷயத்தில் ஒருவரை நிந்திப்பதாகட்டும் பொறுப்பாளியாக்குவதாகட்டும் விவேகம் ஆகாது. அஞ்ஞானமே ஆகிறது. சுகத்தில் இறைவனுக்கு சம்மந்தம் இல்லை. துக்கித்திருக்கும் போது உன் இஷ்ட தெய்வம் யாராய் இருப்பாரோ அவர் உனக்கு தாங்கும் சக்தியை ரகசியமாகக் கொடுப்பார். இறைவன் கருணை வடிவானவர். இதை மறந்து விடாதே.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

55

இறைவனின் அனுக்கிரகம் பெறும் மார்க்கங்கள், அவரை அடையும் மார்கங்கள் அனேகம் உள்ளன. வேதத்தில் சொல்லப்பட்டுள்ள நற்கருமங்கள், சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள நற்கருமங்கள்,கிரந்தகளில் கூறப்பட்டுள்ள நற்கருமங்கள் கிரந்தங்களை வாசித்தல், நாமஸ்மரனை செய்தல், தியானம், தவம் இப்படி எத்தனையோ இருக்கின்றன. “எங்களைப் போன்ற பாமரர்களுக்கு அவையெல்லாம் சாத்தியமகுமா? உடனே கடைத்தேறும் மார்க்கம் ஏதாகிலும் இருந்தால் எங்களுக்கு உடனே அனுக்கிரகியுங்கள் பாபா!” என்று வேண்டிக் கொள்கின்றனர். நான் அனுக்கிரகிக்கும் விஷயம் அப்படி இருக்கட்டும். காற்று உனக்கு சுகத்தைக் கொடுக்கிறது. பிரதி உபகாரமாக நீ என்ன செய்கிறாய்? அவ்விதமாகவே ஜலம், அக்னி, சூரியன், சந்திரன் முதலியோர் இப்படி உனக்கு சேவை செய்து கொண்டே இருக்கின்றனர். பிரதி உபகாரமாக நீ என்ன செய்கிறாய்? ஆகையால் சிருஷ்டியை யார் ஆராதித்து, கீழ்படிந்து இருக்கிறார்களோ, அவர்களுக்கு இறைவனின் அனுக்கிரகம்

நிச்சயமாய் இருக்கும். சிருஷ்டியென்றால் ஜீவர்களின், உயிர்களின் சமுதாயக் கூட்டமேயல்லவா? பரோபகார சிந்தனையுடன் ஏழை எளியோர்களுக்கு, அனாதைகளுக்கு உன்னால் என்ன செய்யமுடிகிறது? குறைந்தபட்சம் அவர்களைப் பற்றி நீ ஆலோசிக்கவும் மாட்டாய். துக்கப்படமாட்டாய். உபகாரம் செய்வதற்கு பணம் தேவையில்லை. நல்ல வார்தைகளைப் பேசினால் போதும். தைரியம் சொன்னால் போதும். நான் உனக்குத் துணையாக இருக்கிறேன் என்ற ஒரு தயை நிறைந்தசொல் போதும். சகமனிதர்களின் மேல் உனக்கு இருக்கும் ஆதரவு அபிமானங்களை எனக்கு ஆராதனையாக நான் ஏற்றுக் கொள்வேன். இதையும்கூட செய்ய முடியாமற்போனால் நான் என்ன செய்ய முடியும்?

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

56

பசியாக இருக்கிறது சாப்பாடு போடுங்கள் என்று யாராவது உன் வீட்டு வாசல் முன் நின்று கேட்டால், அந்த பசிக்கிறவன் உனக்கு மிகப்பெரிய உபகாரம் செய்வதற்காக வந்திருக்கிறான் என்று கிரகிப்பாய்! அப்படிப்பட்ட அவகாசம் எப்போதும் கிடைக்கும் என்று நினைக்காதே, யாசகன் என்னிடமிருந்து பணம் கேட்கிறான், உணவு கேட்கிறான் என்று வெறுப்படையாதே, வெளிப்படையாக உங்களுக்கு தோன்றுவது அதுவேயானாலும், யாசகன் உன் சஞ்சித கர்மங்களை ஏற்றுக்கொள்கிறான் என்று உங்களுக்குத் தெரியாது, பசியோடு இருப்பவரின் பசிக்கு உருவம் இருப்பதில்லை. உபாதை மாத்திரமே இருக்கும். அந்தப் பசிக்கு உருவம் நானே. பசியும் கூட என் பிரேரேபனையே. பிரதிபலனைக் கருதி நான் எதையும் ஏற்றுக்கொள்வதில்லை. என் செயல்களெல்லாம் பரோபகாரத்திற்கு மட்டுமே. உன் வாசல் முன் உங்கள் கர்மங்களை கழுவும் நிவாரண உபாயத்தை உனக்கு இவ்விதமாக கிடைக்கச் செய்யும் போது, என் பணம், என் சொத்து, என்னுடையது என்ற பாவத்துடன் நீ இருந்தால் என் உதவி உனக்கு எப்படிக் கிடைக்கும்? ஒரு கவளம் உணவு ஒரு தீனனுக்கு கொடுத்தால் உன் செல்வக் குன்று ஒன்றும் கரைந்து போகாது

அல்லவா? இப்படியாக வாயில்லாப் பிராணிகளிடமும் நீ காட்டும் அன்பு என்னை நேராகவே அடைகிறது. நான் அன்புக்கு கட்டுப்பட்டு இருப்பேன். என்னிடம் உன்னைச் சேர்க்கும் எளிய வழி இதுவே. உண்மையைச் சொல்கிறேன், என் வார்த்தைகளை நம்பு.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

57

உனக்கும் எனக்கும் இடையேயுள்ள ருணானுபந்தத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. நான் ஒரு பக்கீர். வீடு வாசல் இல்லாதவன். மனைவி மக்களும் இல்லை. என்ஜீன நான் மறந்து தியானத்தில் லயித்து இருப்பேன். அப்படிப்பட்ட தன்மய நிலையில் கூட உங்களை மறக்கமுடியாமல் இருக்கிறேன். என் கவனம் உங்கள் கவனமாக மாறிவிடுகிறது. என் எண்ணங்கள் நீங்களாகவே இருக்கிறீர்கள். நீங்கள் எனக்கு தூரமாக இருந்தாலும், நான் உங்களுக்கு மிக அருகாமையிலேயே இருக்கிறேன். நீங்கள் என்ன செய்கிறீர்கள், எங்கு இருக்கிறீர்கள் எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் கர்மபந்தம் பெரும் புயல் போல அடித்துக் கொண்டு வரும்போது, நீங்கள் சுயநினைவின்றி உலக சுகங்கள், தேகபந்தம், சம்சார சாகரத்தில் அனைத்தையும் மறந்து உலவுகிறீர்கள். இந்தப் பிறவிக் கடலை கடப்பதற்கு நான் தோணியாய் இருக்கிறேன். அந்த தோணியை நடத்துபவனும் நானே. சுக்கானி படகை நடத்துபவனிடம் இருப்பது போல் கர்மசூத்திரம் என் கையிலேயே இருக்கிறது. நானே சூத்திரதாரி, நீங்கள் அந்த படகில் ஏறி உட்காரும் முயற்ச்சியைச் செய்ய வேண்டுமல்லவா? எங்கேயோ நீங்கள் போய்க் கெண்டிருந்தால் படகு உங்கள் அருகில் வராது, உங்கள் தேவைகள், வேலைகள் எதுவானாலும் எனக்கு அர்ப்பணமாக செய்யுங்கள். நான் உங்கள் நலன் பேணுபவன். காப்பாற்றுபவன். நீங்களே என் குறிக்கோள். தாய் குழந்தையை மறக்க முடியுமா சொல்லுங்கள். என்னிடம் உங்கள் சித்தத்தை ஸ்திரமாக வைத்து உலவுங்கள். நான் உங்கள் பாரத்தை சுமக்கிறேன்

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

58

ஒரு நாள் விடியற்காலை உலாவுவதற்குப் புறப்பட்டேன். சிறிது ஆகாரத்தை உட்கொண்டு புறப்பட்டேன். அப்படியே வெகுதூரம் நடந்து சென்றேன். மத்தியான நேரம் வந்தது. வெய்யிலின் சூடு அதிகமாக இருந்தது. ஒரு நதிக் கரைக்குச் சென்று ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்தேன். புகை பிடிக்கும் குழாயைச் சுத்தம் செய்தேன். அந்த நேரத்தில் ஒரு பாதசாரி அங்கு வந்து சேர்ந்தான். என்னைப் பார்த்து, என்னிடம் வந்து, என்னை பணிவுடன் நமஸ்கரித்து உட்கார்ந்தான். ஏதேதோ பேசிக் கொண்டு அங்கு உட்கார்ந்திருந்தோம். அவ்விதமாக போஜன வேளை கடந்து விட்டது. எனக்குப் பசியாக இருக்கவில்லை. அந்தப் பேர்வழி என்னைத் தன் வீட்டுக்கு வந்து சிறிது ரொட்டியை உண்டு செல்லுமாறு மிகவும் பணிவுடன் வேண்டினான். நீங்கள் மீண்டும் மசூதிக்கு திரும்ப மிக அதிக நேரமாகும். என் வீடு இங்கிருந்து மிக அருகில் உள்ளது. தயவு செய்து என் வேண்டுகோளை நிராகரிக்க வேண்டாம் என்று நட்புணர்வுடன் பிரார்த்தித்தான். என் இதயம் புளகாங்கிதம் அடைந்தது. நான் இறைவன் என்ற உத்தேசமே அவனிடம் இல்லை. அந்த ஆத்மார்த்த நட்புக்கு நான் கட்டுப்பட்டேன். அவன் பின்னால் சென்று , ரொட்டியை உண்டு, ஓய்வேடுத்து திரும்பி வந்தேன். எங்கு என்மீது ஆத்மீய பாவம் உண்டோ, அங்கு நான் இருப்பேன். நான் அதைவிட உங்களிடமிருந்து கோருவது வேறு என்ன இருக்க முடியும் சொல்லுங்கள்!

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

59

மனிதர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் மனக்கலக்கம் கொள்கிறனர். திருப்தி என்பதே அவர்கள் உள்ளத்தில் சிறிதும் தென்படாது. அப்படிப்பட்டவர்களைப் பார்த்து எனக்கு சிரிப்பு வருகிறது. வேதனையும் உண்டாகிறது. இறைவன் நமக்குக் கொடுத்ததே நமது பிராப்தமாகும் என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால் என் சொற்களின் பால் அவர்களுக்கு

நம்பிக்கை ஏற்படாது. ஒருமண் குடத்தில் நீர் நிறைய ஊற்றி வைத்தாலும், ஒரு சிறிய ஓட்டை எற்பட்டு நீர் முழுவதும் வெளியேறிவிடும். அந்தச் சிறிய ஓட்டை நம் கண்களுக்குத் தெரியாது. அப்படியே செல்வம் சப்தம் இல்லாமல் வந்து சேரும். யானை விழுங்கிய விளாம் பழத்தைப் போலவே போகவும் செய்யும். அப்படியானால் நாம் கலக்கமடைவது எதற்காக? உண்மையில் வீணேயல்லவா. அப்படி திருப்தி இல்லாத கலக்கம், ஞானத்தைப் பெறுவதற்காக பரமார்த்திக விஷயங்களில் கொண்டிருந்தால், அவர்களுக்குத் தெரியாமலேயே எனக்குச் சமீபமாவார்கள். நானும்கூட முயற்சி இல்லாமலேயே அவர்களிடம் சென்று விடுவேன். ஒருவருக்கொருவர் தெரியாமலேயே ஒன்று சேருகிறோம். தென்னை மரத்தின் அடியில் அழுக்கு நீரை ஊற்றினாலும் தேங்காயில் சுத்தமான நீர் சேர்வது போல் முயற்சி இன்றியே இம்முயற்சியை செய்தபோதும் என் சமீபத்திற்கு அவர்கள் வருகின்றனர்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

60

இந்த மசூதியும் துவாரகாமாயியும் நம்மைப் பெற்றெடுத்த தாயாகும். இங்கு அபாரமான தயை, இரக்கம், கருணை, தர்மம். உதாரகுணம், சாந்தி முதலியன ஒவ்வொரு செங்கல்லிலும் உண்டு. இப்பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு அணுவும் மற்றவர்களுக்கு சுயநலமின்றி உதவ வேண்டு மென்றே ஏங்குகிறது. இங்கு விந்தை என்னவென்பது தெரியுமா? நான் நீ என்ற இரட்டை பாவமே தென்படாது. எல்லாம் ஏகாத்ம பாவமே. இங்கு யார் வருகிறார்களோவென்று அல்லா எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். அப்படி வந்தவர்கள் நல்ல இதயத்தோடு வந்தாலும், தீய இதயத்தோடு வந்தாலும், அவர்களுக்கு உடனே சாந்தியைப் பிரசாதிக்கும்படி அல்லா கட்டளையிட்டுள்ளார். நான் அவரது சேவகன். அவரது கட்டளையை ஒருகணமும் தாமதம் இன்றி நிறைவேற்றுவேன். நானும்கூட அவரது கட்டளைக்காக காத்திருப்பேன். அந்த அல்லாவுடன் நீண்ட காலமாக நான் நெருங்கிய உறவு கொண்டுள்ளேன். ஒருநாளும் அவர் சலிப்படைவதையோ, உதவி செய்யாமல் இருந்ததையோ நான் பார்த்ததில்லை. ஆகையால் இந்த துவாரகாமாயியை நம்முடைய பெற்ற தாய் என்று சொல்லுகிறோம். அந்த விஸ்வாசத்துடன் நீங்களும் இங்கு வாருங்கள். அந்த தாயின் நிழலை நாடியிருங்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

61

அந்த அல்லா யார்? அவர் என்ன செய்கிறார்? என்ற சந்தேகம், மற்றும் நான்யார்? என்ன செய்து கொண்டிருக்கிறேன்? என்ற சந்தேகம் உஙகளுக்குத் தோன்றலாம். அல்லாவைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் குறைவானதே யாகும். வார்த்தைகளுக்கு எட்டாதவர், மௌனமே சொத்தாக இருப்பவர், தயாகுணம் நிரம்பியவர். தன்னைப் பற்றி சிறிதும் யோசிக்காமல் எப்போதும் எளியவர்களுக்காகவே உழைப்பவர். பூமிக்கும் ஆகாயத்திற்கும் இடையேயுள்ள சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்து வருபவர். கண்களை மூடாமல் எப்போதும் நம்மையே பார்த்துக் கொண்டிருப்பவர். உணவிலும், நீரிலும், வாயுவிலும், சூர்ய சந்திரர்களின் ஒளியிலும், இருளிலும் நன்றாகப் பார்க்கக்கூடியவர். சலனமின்றி ஓரிடத்தில் உட்கார்ந்து எல்லா விஷயங்களையும் கணநேரத்தில் கிரகிக்கக் கூடியவர் அந்த தயாமயமான அல்லா. அவரை நான் நிரந்தரமாக தியானிப்பதால், என் உடலை அவருக்கு அங்கிதம் செய்தபடியால் அவர் கிருபை நிறைந்த பார்வையால் எனக்கு சக்தி வந்தது. அவர் என்னையே பார்த்துக் கொண்டிருப்பார். நான் அவரையே பார்த்துக் கொண்டிருப்பேன். இதுவே எங்கள் இடையேயுள்ள அனுபந்தம், நீங்களும் என்னை அப்படி பார்த்துக் கொண்டு இருப்பீர்களானால், நீ என்னில் ஒரு பகுதியாவது சிரமமானதல்ல. அந்த முயற்சியை இப்போதேசெய். நான் உனக்காகவே இருக்கிறேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

62

நான் பிட்சை எடுத்து வந்த உணவை ஒரு மண் தட்டில் வைத்து மசூதியின் ஒரு மூலையில் வைப்பேன். அதன்பின் அந்த உணவு பற்றி நான் மறந்து விடுவேன். பசி என் ஞாபகத்திற்கு வராது. அப்படியே தியானத்தில் ஆழ்ந்து, செங்கல்லின் மேல் கை ஊன்றி உட்காருவேன். வருகின்றவர் வந்து கொண்டும் போகின்றவர் போய்க்கொண்டும் இருப்பார்கள். இந்த விஷயம் அப்படி இருக்கட்டும். எனக்கு எப்போதோ பசி வரும். அப்போது அந்த மண் தட்டின் பக்கம் செல்வேன். பார்த்தால் உணவை எறும்புகள் சூழ்ந்து, அதில் சில எறும்புகள் சப்தமின்றி உணவுப் பருக்கையை வாயினால் கௌவ்விக் கொண்டு எடுத்துச் சென்று கொண்டிருக்கும். என் பசி விஷயம் அப்படி இருக்கட்டும். அவற்றின் முயற்சியைப் பார்த்து ஆனந்தம் பொங்கி யெழுந்து, எனக்கு வயிறு நிறைந்து விடும். அப்போது என்பசி எங்கோ பறந்துவிடும். என்னிடம் ஞானக் களஞ்சியம் பெரிய குவியலாய் உள்ளது. அதையும் கூட ஒளித்து வைக்காமல் இங்கேயே வைத்துள்ளேன். வருபவர்கள், என்னைப் பார்ப்பவர்கள் மசூதியைப் பார்ப்பார்கள். எதையோ கொடுக்கும்படி என்னைக் கேட்பார்களே யொழிய அந்த ஞானக் களஞ்சியத்தின் பக்கம் பார்க்கவும் மாட்டார்கள். அந்த எறும்பிற்கு உள்ள ஆர்வம் மனிதர்களுக்குக் கூட இருந்தால் என் கடமை முடிந்தது போலவே. அந்த சுபமான நாளுக்காக எதிர் பார்த்துக் கொண்டிருப்பேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

63

சிறுவன் மழலை மொழியில் பேசிக்கொண்டிருந்தால், தாயும் அவ்வாரே பேசுகிறாள். தாய்க்கு நன்றாகப் பேச வராமலா முடியாமலா! இல்லை. ஒருவகையான அத்மீய பாவம் தாயின் உள்ளே கூடுகட்டி இருக்கும். அப்படிப் பேசினாலொழிய அவளுக்கு ஆனந்தமும் திருப்தியும் ஏற்படாது. சிறுவனுக்கு ஆபரணங்கள் அணிவித்து ஆனந்தமாகப் பார்த்துக்கொண்டேயிருப்பாள். அந்த ஆபரணங்களை

போக்கடித்து விடுவானோ என்று பார்த்துக் கொண்டேயிருப்பாள். நானும் கூட என்னிடம் வருகின்ற சாந்தியற்ற மனத்தை யுடையவர்களுக்கு நல்ல கதைகள் சொல்லுகிறேன். லீலைகள் செய்து காட்டுவேன். அவர்கள் சிரத்தையுடன் கேட்டார்களோ இல்லையோ என்றும், மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ இல்லையோ என்றும் அவர்களைக் கவனித்து உட்கார்ந்திருப்பேன். அது ஓர் ஆனந்தம் . தாய்க்கு சிறுவனின் விஷயத்தில் இருக்கும் சுயநலமே என்னிலும் இருக்கும். என்னைப் பார்த்து, பண்டிதர்களும் வேதாந்திகளும், படித்தவர்களும் நான் பரிசவேதியல்ல என்று நினைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் அவ்விதமாக அஞ்ஞானத்தோடு என்னிடம் வந்த உடன், அந்த அஞ்ஞானம் என் பாதங்களின் பால் சரணடைந்து ஞானமாக மாறிவிடும். அவர்கள் அந்த ஞானத்தை எப்போதைக்கும் பத்திரப்படுத்திக் கொண்டால் என் ஆனந்தம் வரம்புமீறி, அவர்களை என்னுள் ஐக்கியமாக்கிவிடும். உலோகத்தை களிம்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா?

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

64

சத்சங்க மகிமைகளைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் குறைவாகவே சொல்வதாகும். நூறு குருமார்கள் ஒன்றாகச் சேர்ந்து உபதேசிக்கும் நல்வார்த்தைகள் எவ்வளவு உயர்ந்ததாக இருக்குமோ, அந்த பலனை சத்சங்கத்தின் மூலமாகப் பெறமுடியும். சத்சங்கத்தால் மன அழுக்கு நீங்கி விடுகிறது. மனோ விகாசம் ஏற்படுகிறது. பாரமார்த்திகத்தைப் பற்றி அனேக சூட்சுமங்களை, இறைவனைப் பற்றி அனேக விஷயங்களை சத்சங்கத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். மனிதப் பிறவி கிடைப்பது எவ்வளவு அரிதோ, அவ்வளவு அரிதானதே சத்சங்கம் கிடைப்பதும். சாத்திரங்கள், வேதங்கள் முதலியவற்றை ஆழ்ந்து கற்றல் அனைவருக்கும் சாத்தியமானதல்ல. அவற்றைப் புரிந்து கொள்வதுகூட அத்தனை எளிதல்ல. அப்படிப்பட்ட விஷயங்களை சத்சங்கத்தின் மூலம் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்.

சத்சங்கம் என்றால் பேசுகின்ற கிரந்தம் என்று பொருள் கொள்ளலாம். எங்கு சத்சங்கம் நடக்கிறதோ அங்கு இறைவன் ஆனந்த சொரூபமாக அமர்ந்திருப்பார். ஏதேதோ பேசுகின்றவர் எங்கும் பலர் கிடைக்கலாம். ஆனால் பத்து நலமான வார்த்தைகளைப் பேசுபவர்கள் மிக அரிது. நீங்கள் சத்சங்கத்தில் என் லீலைகளைப் பற்றிப் பேசிகொண்டிருந்தால் எனக்கு ஆனந்தம் ஏற்படுகிறது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

65

ஒன்றோடு இன்னொன்றைச் சேர்த்தால் இரண்டாகிறது. உண்மையல்லவா? வாதத்திற்கு இடமே இல்லை. அந்த சொற்கள் உலகாயத விஷயத்தில் உண்மையே என்றாலும் ஆன்மீக விஷயத்தில் கணக்கு தவறாகிவிடுகிறது. நீங்களும் நானும் வெவ்வேறு என்ற பாவத்தை விட்டு விடுங்கள். உங்களில் நான் இருக்கிறேன். என்னில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் வேலைகளை பௌதீக தேவைகளைத் தெரிந்துக் கொண்டு நானே நிறைவேற்றி வைக்கிறேன். கர்ப்பத்தில் உள்ள குழந்தைக்கு தாய் ஆகாரம் ஊட்டுகிறாள் என்பதை நீங்கள் மறக்கமாட்டீர்கள் அல்லவா? தாய் வேண்டுமென்றே அந்த கர்ப்பத்தில் உள்ள குழந்தைக்கு உணவளிப்பதில்லை. தன் பசியைப் போக்கிக் கொள்ள ஆகாரம் உட்கொள்கிறாள். தெரியாமலே குழந்தையை அடைகிறது. ஏன் அப்படி நிகழ்கிறது? குழந்தை பொறுமையுடன் அந்த கர்ப்பத்திலேயே இருக்கிறது. அப்படியே நீங்கள் எனக்குள் இருக்கும்படி முயற்சி செய்யுங்கள். நான் உன்னுடையவன் என்ற விஷயத்தை மறந்து விடாதீர்கள். உங்களுடனேயே இருக்கிறேன் என்பதையும் மறந்து விடாதீர்கள். உங்கள் பசியைத் தணிக்காமல் நான் உண்ண முடியுமா? சொல்லுங்கள். வெளிப்புறமாக நீங்கள் செய்யும் ஆராதனை, உங்களுக்குள் இருக்கும் என்னை அடைகிறது. அப்போது நான் சக்தியுடைய வனாகி உங்களைக் காப்பாற்றுகிறேன். இந்த மாத்திரம் நீங்கள் செய்ய முடியா விட்டால் நான் என்ன செய்ய முடியும்? உங்களுடைய ஆத்மாராதனையே என்னை

ஆராதிப்பதாகும். இது உண்மை.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

66

மலைய பர்வதத்தின் மேல் சந்தனமரம், கிளைகள் கிளைகளாக மிகவும் விசாலமாக வளர்ந்திருக்கும். சுகந்த பரிமளத்தை எங்கும் நிறைத்து, அந்தச் சுற்றுச் சூழ்நிலையை மிகவும் ரம்மியமானதாகச் செய்கிறது. பிராம்மணர்களும் சத்புருஷர்களும் எவ்வளவோ சிரமப்பட்டு சந்தனத்தை அரைத்து அதை இறைவனுக்கு சமர்பிக் கின்றனர். அவர்களுக்கு இருக்கும் சத்வகுணம், சத்வ பாவனை, அவர்களை அக்காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. அவர்களிடம் அத்தகைய சமஸ்காரம் இருக்கிறது. அதே இடத்தில் வசிக்கும் காட்டு வாசிகள் அந்த சந்தன மரத்தை வெட்டி, அடுப்பில் போட்டு. விறகு குச்சிகள் போல் எரித்து, கஞ்சி வடித்துக் கொண்டிருப்பார்கள். அதே விதமாக சாதுக்களிடமும் சத்புஷர்களிடமும் சத்சங்கம் செய்து கொண்டே அவர்களிடமுள்ள குற்றங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி செய்து அவர்கள் கூறும் நற்போதனைகளை பக்கத்தில் ஒதுக்கிவைப் பவர்களுக்கு யார் எந்த விதத்தில் உதவி செய்ய முடியும்? சாது சாங்கத்தியம் கிடைப்பது மிகவும் அரிது. அதிலும் மனிதப்பிறவி கிடைப்பதென்பது மிகவும் அரிதானது. அப்படி மிக அரிதாகக் கிடைக்கும் சாதுக்களின் சங்கத்தைப் பெற்றும் கூட. நலம் பயப்பவற்றைக் கிரகிக்க முடியாதவருக்கு, எந்த ஒரு கண்களுக்குத் தெரியாத சக்தியாலும் உதவி செய்ய இயலாது. நலனை எதிர் பார்ப்பவரிடம் துவேஷத்தை வளர்த்துக் கொண்டு, வீணாக மனிதப் பிறவிக்கு நஷ்டம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

67

மாயையிலிருந்து விடுபட்டவர்களுக்கு, மோட்சமார்க்க பிரவேசம் சாத்தியமாகிறது. மாயை, மோஹம் இரண்டும் பரமார்த்திக பிராப்திக்குத் தடைகளே, இரண்யகர்பத்திலிருந்து

இந்த அகண்ட பிரமாண்டம் உத்பவிக்கிறது. மாயையை எப்படி வெல்ல வேண்டும் என்று பலர் அடிக்கடி கேட்கிறார்கள். சத்குரு ஒருவரே பிரமாண்டம் சிருஷ்டிக்கும் மாயா பிராந்திக்கு அதீத மானவர். அப்படிப்பட்ட சத்குருவின் மகிமைகளை வர்ணிக்க முடியாமல் வேதசாத்திரங்கள் ஊமையாயின. சத்குரு அநுக்கிரக பிராப்திக்கு யுக்திகள், தர்க்கங்கள் எம்மாத்திரமும் உதவ மாட்டா. சத்குருவிடமிருந்தே பிரம்மத்தில் பிரம்மத்வம் பிராப்திக்கிறது. சத்குருவின் அனுக்கிரகத்தால் மாத்திரமே அது தெரிய வரும். அனன்ய சரணாகதியால், பஞ்ச பிராணன்களை சத்குருவின் பாதங்களில் சமர்பிக்க வேண்டும். அவருக்குத் தலைவணங்கி நமஸ்கரிக்க வேண்டும். நிரந்தர குரு தியானம் செய்ய வேண்டும். சத்குருவிற்கு உடல், மனம், பொருள், சர்வத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். ஆயுள் முழுவதையும் குரு சேவையில் வினியோகிக்க வேண்டும். குரு நாமம், குரு சகவாசம், குரு கிருபை, குருசரணபாயசம். குருமந்திரம். குரு கிரகத்தில் வாசம் இவைகள் அனைத்தும் மிகுந்த பிரயாசையின்றி கிடைக்காது. இவையனைத்தும் மிகுந்த சக்தியை உடையது. அவ்விதமாக சாதனை செய்து வந்தால் தவறாமல் குருவின் கிருபை கிடைக்கும். அப்படிப்பட்டவருக்கு நிச்சயமாய் மோட்சம் கிடைக்கும். அப்படிப் பட்டவருக்கு என் உதவி எப்போதும் உண்டு.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

68

பரமாத்ம சுகம், பரமாத்ம பிராப்தி, பரமானந்த சொரூப ஸ்திதி இவையெல்லாம் பேச்சளவே யொழிய சமானியர்களுக்கு கிடைக்காது. உண்மையில் நமக்கு தேவையானது என்ன? நமக்கு உண்மையாகத் தேவையாய் உள்ளது ஆனந்த நிலையே. அந்த ஆனந்த நிலையில் அனைத்தும் தன்மயமே யொழிய வேறென்று இருப்பதில்லை. சித்தம் அப்படி ஆனந்த நிலையில் இருந்தால், எப்போதும் அதே நிலையில் நிலைத்து இருந்தால் சுகம், சாந்தி, சமாதானம் அனைத்தும் பிராப்திக்கும். ஆனால் அந்த ஆனந்த நிலைக்கு அழைத்துச் செல்லும் எளிய

வழி எது என்று உங்களுக்கு சந்தேகம் ஏற்படலாம். யார் என்னை அனன்யமாக நேசிக்கிறார்களோ, யார் நீயே என் பரமகதி; நீயே என் விஸ்ராந்தி, நீயே கதி என்று ஏங்குபவர்களுக்கும், தீனர்களுக்கும், யார் பரமாத்மன் என்று என்னை பிரார்த்தனை செய்கிறார்களோ, அப்படிப்பட்டவரை நான் அனன்யமாக நேசித்து, அவர்களின் துக்கத்தையெல்லாம் நசிக்கும்படி செய்கிறேன். அவர்களுக்காகவே நான் எப்போதும் சிரமப்பட்டுக் கொண்டிருப்பேன். அவர்களுக்கு ஆனந்தம் ஏற்படும் நிலையை நானே உண்டுபண்ணுகிறேன். அப்படிப்பட்ட ஆனந்த நிலையில் இயற்கையே தென்படாது. அப்போது அவர்களுக்கு நானே தென்படுகிறேன். அப்படிப்பட்ட நிலையில் சகஜமாக ஆனந்தமே தோன்றுகிறது. அந்த நிலையைப் பெறும் முயற்சியைச் செய்யுங்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

69

பரமாத்ம பிராப்திக்கு பக்திமார்க்கமே மிகவும் சிறந்தது. எளிதானது, பகவான் பக்தர்களுக்கு எளிதில் கிடைப்பவன். என் வார்தைகளின் மீது நம்பிக்கை வையுங்கள், விக்கிரக ஆராதனையின் மூலமாக பக்தியை வளர்த்துக் கொள்வது எளிதாகிறது. அந்த பரமாத்மாவின் வடிவத்தை உள்ளத்தில் இருத்திக் கொள்ளும் அவகாசம் கிடைக்கிறது. என்னையே ஆழ்ந்து சிந்தித்து, என் உருவத்தை இதயத்தில் நிலைநிறுத்திக் கொள்பவர்கள் தன்யர்கள். என் குணநலன்களை, என் மகிமைகளை, என் லீலைகளை எப்போதும் கீர்த்தனை செய்பவர்கள், தாமரை மலர்மீது வண்டு மொய்ப்பது போல அவர்கள் என்னிடமே இருந்து பக்தியை வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். அப்படி அவர்களுக்கும் எனக்கும் அகண்ட ஆத்மானு சந்தானம் ஏற்படுகிறது. அப்படி என்னிடமே, என் சேவைகளின் மீதே ஈடுபாடு கொண்டவர்களுக்கு ஆன்மீகத்தில் நாட்டம் உண்டாகும்படி செய்கிறேன். ஆன்மீகத்தில் முன்னேற்றம் விரும்புவோர் வேதத்தில் கூறப்பட்டுள்ள கர்மங்களை

அனுஷ்டித்தல் வேண்டும். அப்படிப்பட்ட கர்ம அனுசரனையில் மனம் கர்த்துர்த்வ, போக்ருத்வ பாவங்களிலிருந்து விடுபட வேண்டும். அதுவே அகங்கார மற்ற நிலை. அதுவே பிரம்மார்பணமாகச் சொல்லப்படுகிறது. அதன் மூலம் யோகசித்தி பெறப்படுகிறது. காரியங்களைச் செய்பவன் நான் அல்ல என்ற பாவம் தோன்றும் போது சகஜமாகவே அது நானாக தான் இருப்பேன். இந்த முயற்சியைச் சாதனையாக மேற்கொண்டு என்னை அடையலாம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

70

கர்ம அனுசரனை ஏன் செய்ய வேண்டும்? என்ற சந்தேகம் வராமலிருக்காது. கர்ம அனுசரணை செய்து கொண்டு, பிராராப்தத்தின்படி வரும் சுகதுக்கங்களை நாமே அனுபவித்துக் கொண்டிருந்தால், குருவின் கருணை, தெய்வத்தின் கருணை என்று கருதி, நம் தேகத்தை மற்றவர்களின் சேவையில் இருத்தி நம்முடைய சுதந்திரத்தை ஏன் இழக்கவேண்டும்.? என்ற பாவம் அடிக்கடி தோன்றுகிறது. சாவதானமாகக் கேளுங்கள். கர்மபந்தத்திலிருந்து விமுக்தி அடையவே, இறைவன் மிகவும் அரிதான இந்த மானிடப் பிறவியை அளித்துள்ளார். அப்படி கர்மங்களை ஜீவன் அனுசரிக்கும் போது தர்மத்திற்குக் கட்டுப்பட்டவரான இறைவன் கர்மங்களிலிருந்து ஜீவர்களை விடுவிக்கிறார். சூத்திரதாரி இறைவனே என்ற விஷயத்தை மறக்க வேண்டாம். முள்ளை முள்ளால் எடுப்பது போன்று, கர்மங்களை கர்மங்களின் மூலமாகவே நிர்மூலமாக்க வேண்டும். அப்படிப்பட்ட கர்மங்களை அனுசரித்துக் கொண்டு, பலன் கருதாமல் இருத்தலே நிஷ்காம கர்மம் என்று சொல்லப்படுகிறது. இதுவே கர்மரகசியம். கர்மபல தியாக பாவத்துடன் செய்தல் சுத்த சுயதர்மம் ஆகிறது. அவரவருடைய தர்மத்தை அவரே அனுசரித்தல் யாருக்கும் தவிர்க்க முடியாததேயாகும். தான் சுயமாகச் செய்யும் கர்மங்களை இறைவனுக்கு அர்ப்பிக்க வேண்டும். ஒருகண நேரமும் இறைவனை மறக்கலாகாது. பகவத் அனுகிரகம் இல்லாத எந்த காரியமானாலும் அது பயனற்றதே.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

71

எளிதான மார்க்கத்தைச் சொல்கிறேன் சாவதானமாகக் கேளுங்கள். மறுபிறவியைத் தடுக்கக் கூடியதும், மோட்சத்தை பிரசாதிக்கக் கூடியதும் ஆன சுலபமான மார்க்கத்தை நான் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் கர்மஜீவர்களை கடைத்தேற்று வதற்காகவே அவதரித்துள்ளேன். அவர்களுக்கு நலன் ஏற்பட இரவும் பகலும் சிரமிக்கிறேன். நான் அவர்களிடமிருந்து ஏதும் எதிர்பார்க்க மாட்டேன். இந்த உடலுடனேயே அவர்களை முக்தியடைய நான் மிக்க ஆர்வம் உள்ளவனாய் இருக்கிறேன். யார் என்னுடைய கதைகளின் மீது ஆர்வம் கொண்டிருப்பார்களோ, அவர்களுக்கு என் லீலைகள், சில செயல்கள் ஆச்சரியமாகவும் விசித்திரமாகவும், கற்பனையாகவும் தோன்றவே தோன்றாது. என் லீலைகளை யார் எப்போதும் மனத்தில் இருத்திக் கொள்கிறார்களோ அவர்களின் வாழ்க்கை புனிதமடைகிறது. என் லீலைகள் பக்தர்களுக்கு போதனை மார்க்கங்களாகும். அவர்களின் பாபங்களை என் கதைகளைக் கேட்பதன் வாயிலாக, என் லீலைகளை நினைத்துப் பார்ப்பதன் மூலமாக நசித்துவிடும். மனம் எவ்வளவு மலின மடைந்திருந்தாலும் என் கதைகளைக் கேட்பதன் மூலம் பனிக்கட்டி போல் கரைந்து விடுகிறது. இதயம் பரிசுத்தம் அடைகிறது. பரிசுத்தமான இதயம் உடனே என்னை நாடுகிறது. என் இருப்பிடம் உன் இதயமே, நான் உங்களை, பிறவிக்கடலை மிக எளிதாகத் தாண்டும்படி செய்கிறேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

72

சேவை செய்கிறேன் என்ற பாவத்தை என்றும் உங்களிடம் வளர்த்துக் கொள்ளாதீர்கள். அப்படி சேவை செய்யும் பாக்கியத்தையும் நானே தருகிறேன். சேவை செய்யும் பாக்கியமும் கூட யோகம் இருந்தாலன்றி கிடைக்காது. சாதுக்களுக்கும்

சத்புருஷர்களுக்கும் சேவை செய்யும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்ததென்றால், அதைப் பெரிய பாக்கியமாகவே கருதுங்கள். சாதுக்கள் இறைவனின் பிரதிபிம்பங்களே, சேவை செய்பவர்கள் வெறும் கருவிகளேயாவார்கள், உண்மையில் ஆர்வத்தை உண்டாக்குபவர்கள் சாதுக்களே, மூர்க்கர்கள், மந்த புத்தியாளர்கள் சாதுக்களின் சாமர்த்தியத்தை கிரகிக்க மாட்டார்கள், சாதுக்களின் இருப்பிடத்தில் இறைவன் பிரத்தியட்சமாய் இருப்பார். சகல புண்ய தீர்த்த, புண்ய பலன்கள் வெறும் சாதுக்களின் சரண ஸ்பரிசத்தால் பிராப்திக்கும். அவர்கள் மனித வடிவில் இருக்கும் தெய்வங்களே என்பதை மறவாதீர்கள். சாதுக்களின் கருணை நிறைந்த பார்வையால், அவர்களின் அபய கரத்தை யார்தலைமீது வைக்கிறார்களோ, அவர்களுக்கு உடனே ஆத்மானுபூதி யுண்டாகிறது. ஜீவர்களை முக்தர்கள் ஆக்குவதற்கே, சாதுக்கள் சேவை செய்யும் பாக்கியத்தை அளிக்கிறார்கள். அப்படி அவகாசம் பெற்றவர்களுக்கு, முக்தி மார்க்கத்தின் கதவுகள் தாமாகவே திறந்து கொள்கின்றன. சேவை முக்தி மார்க்கத்தில் ஓடம் போன்றது என்று தெரிந்து கொள்ளுங்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

73

தீய, குரூரமனம் அனேக பிரச்சனைகளையும், தடைகளையும் உண்டுபண்ணுகிறது, தேகம் அவ்விதமாக மூப்படைந்து பலவீனமடைகிறது. அப்போது செய்யலாம் என்று நினைக்கும் எந்த உயர்ந்த செயலானாலும் செயல் வடிவிற்கு வராமலே போகும். அந்த உதவியற்ற நிலையில் உனக்கு ஆதாரமாய் யார் இருக்கிறார்கள்? சரீரபலம் குன்றி விட்டால் பெரிய புலிகூட செயலற்று சும்மாவிருக்கும். நடந்து முடிந்த காலத்தை நினைத்து புலம்புவதைத் தவிர்த்து வேறு மார்க்கம் தோன்றாது. இதற்கிடையே மரணம் வரவும் செய்கிறது. இப்படியாக ஒரு வாழ்நாள் முழுவதும் வீணாகிறது. மறுபிறவி மீண்டும் வருகிறது. இந்த ஜனன மரண சக்கர சுழற்ச்சியில் சாந்தி

எங்கிருக்கிறது? சாவதானமாகக் கேளுங்கள். இந்த தேகத்தை பரமார்த்திக பிராப்திக்கே பயன்படும்படி செய்தால் விதேகன் ஆகலாம், விதேகன் ஆன மறுநிமிடமே சுகம் துக்கம் போன்றவை தோன்றாது. யானையின் தலைமீது, காக்கையின் மலம் விழுந்தாலும் அதற்கு ஏற்படும் நஷ்டம் என்னவாக இருக்க முடியும்? யானைக்கு இருக்கும் மதிப்பு எப்போதும் இருக்கும். பாரமார்த்திக சிந்தனையில் மூழ்கியிருக்கும் மக்கள் யாரானாலும் தன்யமானவர்களேயன்றோ!

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

74

சத்தியம் நிறைந்த என் கதைகளையும், அநுபவங்களை யும் சதா மனனம் செய்து கொண்டிருங்கள். அப்படி செய்ய வேண்டு மென்ற ஆவல் உங்களிடமிருந்தால், என் உதவி எப்போதும் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் எங்கிருந்தாலும் சரி, எப்போதும் என்னையே நினைத்து என் தியானத்திலேயே இருங்கள். உங்கள் வேலைகளை, செயல்களை தடையின்றி நிறைவேற்றுவேன். உங்கள் செயல்களில் உங்களை விட நானே முன்னால் நிற்பேன். நீங்கள் விழிப்புணர்வு இன்றி இருந்தாலும், நான் மிகவும் விழிப்புடன் உங்களை முன் நடத்திவைக்கிறேன். பக்தி சிரத்தை எங்கிருக்கிறதோ அங்கு நான் எப்போதும் பந்திக்கப் பட்டவன் போல் இருப்பேன். அவை இல்லாதவர்களுக்கு நான் எப்போதும் கிடைக்காமலே போவேன். அகங்காரத்தை நான் எம்மாத்திரமும் விரும்ப மாட்டேன். அகங்காரத்தின் சுவடு உங்களிடமிருந்தாலும் கூட நான் பொறுத்துக் கொள்ளமாட்டேன். உங்களுக்கு நன்மை, தீமை எதுவானாலும் நானே ஏற்றுக் கொள்கிறேன். தினம்தோறும் என்னையே தியானித்து வந்தால், அது உங்களுக்கு ஒரு அப்பிரயத்ன கார்யமாகவே மாறிவிடும். நீங்கள் என்னுடனேயே இருப்பீர்கள். வெல்லம் இருக்குமிடத்தில் எறும்பும் வரும். வெல்லத்தை எடுத்து விட்டாலும் எறும்புகள் மீண்டும் அங்கேயே வரும். என்னையே

தியானிப்பதால் நீங்கள் எங்கிருந்தாலும் என் இதயத்திலேயே இருப்பவர்களாவீர்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

75

அசாந்தியற்ற ஒரு அங்குல இடம் கூட இப்பூ மண்டலத்தில் எங்கும் கிடையாது. சாந்தியைத் தேடி இங்கும் அங்கும் ஓடி அலைந்து இன்னும் அதிக அசாந்தியுடையவனாகிறாய். உனக்கு சாந்தியை உண்டுபண்ண, வேகமாக நான் வருகின்ற போது அதைவிட மிக வேகமாக நீ நகர்ந்து போகிறாய். ஒருகணமேனும் நிலையற்றவருக்கு என் உதவி எப்படி கிடைக்கும்? உன் அசாந்தி ஏதாக இருந்தாலும் அது பௌதீக உலகிற்கு சம்மந்தமானதே. பௌதீக உலகினை நம்பியிருக்கும் வரை சுகம் துக்கம் வராமல் எப்படியிருக்க முடியும்? அவற்றை யாரும் தடை செய்யமுடியாது. கம்பளிப்புழு ஒருமித்த தியானத்தால் பட்டாம் பூச்சியாக மாறிவிடுறது. அருவருப்பாகத் தென்படும் கம்பளிப்புழு, பட்டாம் பூச்சியாகி இன்பத்தை உண்டு பண்ணுகிறது. நன்மை தீமையை ஆய்ந்து தெரிந்து கொள்ளக் கூடிய மனிதர்கள் யாராகிலும் கூட சுகதுக்கங்களுக்கு ஆளாக மாட்டார்கள். நான் உன்னுடனேயே இருக்கிறேன். உன் பாரத்தை என்மேல் கிடத்து, சித்தவிருத்தியை சாவதானம் செய்துக் கொண்டு என் மீது உன் பார்வையைத் திருப்பு. என்னையே தியானி, நிச்சயமாய் நான் உனக்கு சாந்தியை அளிப்பேன். நிலையாய் உட்கார்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

76

ஹரி லீலைகளை யாரும் புரிந்து கொள்ள முடியாது. அவற்றை அந்த ஹரி ஒருவரே புரிந்து கொள்ள முடியும். ஸ்ருதி, ஸ்மிருதி, வேதங்களும் கூட ஊமையாயின. யாரும் அந்த லீலைகளை ஆழம் காண முடியாது. சாஸ்திர வல்லுனர்கள், வேதங்களைப் பற்றி விவாதிப்பவர், மேதைகள், பண்டிதர்கள் ஆகியோரை அதிகாரிகளாக எடுத்துக் கொள்ளாதே. தன்னுடைய உண்மையான பக்தர்களுக்கு ஸ்ரீஹரியே ஒரு லீலை. கள்ளம்

கபடமற்ற எளிய பக்தர்களுக்காக ஸ்ரீஹரி மிகவும் ஏங்குகிறார். அன்பு வலையில் முழுமையாக ஒரு கைதியாக இருக்கிறார். ஆனால் பெருமை கொள்பவர்களுக்கு, போலிகளுக்கு, வேஷதாரிகளுக்கு ஸ்ரீஹரி எட்டாத தூரத்தில் இருப்பார். பூஜை எப்படி செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும்? எங்கே செய்ய வேண்டுமென்ற அலோசனைகளுக்கு இடம் கொடுக்காதீர்கள். உன் இதயம் எனக்காக எங்கு ஏங்குகிறதோ அங்கு நான் இருக்கிறேன். உன் பரிசுத்தமான இருதயம் கொள்ளும் ஏக்கமே எனக்குச் செய்யும் பூஜையாகும். என்பக்தன் வசிக்குமிடமே என் இருப்பிடம். என்னைத் துதிப்பவர் இருக்குமிடம், என்னிடம் மிகுந்த அன்பு கொண்டோர் இருப்பிடத்திலேயே, மசூதி, துவாரகாமாயி, சாவடி, துணி, ஷிரிடி ஆகியவையும் இருக்கும். அப்படிப்பட்டவர்களுடைய இல்லமே என்னுடைய சமாதி மந்திரம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

77

பலர் நடந்தபாதையிலேயே மற்ற பாதசாரிகளும் நடக்கின்றனர். அவர்களின் பயணம் சுகமாக இருக்கும். சேரவேண்டிய ஊருக்கு விரைவில் சேர முடியும். அவர்களுக்கு எந்த தடைகளும் வராது. தெரியாத புதிய பாதையைத் தேர்ந்தெடுத்து, முயற்சி செய்தால் காலதாமதம் எற்படும். பரமார்த்திகத்தில் உன்னதமான நிலையை அடைய வேண்டும் என்று நினைப்பவருக்கு, ஹடயோகம், யோக முத்திரைகள், தபோ வனங்கள் இவைகள் ஏதும் தேவையில்லை. நிச்சலனமாக மனத்தை நிறுத்துதலே ஒரு யோகம். இறைவனுக்காக தவிப்பதே தவம். காட்டில் வளரும் செடிகளைப் போல் உன் மனத்தில் ஏராளமாக கோரிக்கைகள் தோன்றிக் கொண்டிருந்தால் இறைவன் எங்கு இருப்பார்? அவருக்கு இருப்பிடம் எங்கே இருக்கிறது? கோரிக்கைகள் இன்றி இருத்தலே ஒரு வரமாகும். என் நாமஸ்மரணையே உற்ற உபாயம். நீ எங்கு உட்கார்ந்து என்னை ஸ்மரிக்கிறாயோ அங்கு நிச்சயமாக நான் இருப்பேன். நாமஸ்ரணையால் உள்ளே உள்ள அழுக்குகள் நீங்கி விடுகின்றன. ஆன்மா தூய்மையடைகிறது. ஆன்மீக வைபவம்

கிடைக்கிறது. நாமஸ்மரணையால் நற்பேறு பெற்றோர் எத்தனையோ பேர் உள்ள். என் பேச்சை நம்பு.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

78

முதல் கவளத்திலேயே ஈ விழுந்தது போல, சாதனையைத் துவங்கிய உடனே ஏதேதோ தடங்கல்கள், வேண்டாத எண்ணங்கள், வெறுப்புணர்வு போன்றவை ஆரம்பமாகின்றன. கர்மங்களிலிருந்து விமுக்தி அடைய விரும்பும் சாதகனுக்கு தடைகள் வராமல் இருக்காது. அவைகளும் கர்மாக்களின் வடிவங்களே. அந்த மாத்திரம் உன் பாதையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அவற்றின் வழியில் அவைகளை வரவிடு. எறும்புகள் இறந்து விடுகின்றன என நினைத்து யானை நடப்பதை விட்டுவிடுமா? அப்படி செய்வதில்லை. அது நடந்து கொண்டே இருக்கும். சேரவேண்டிய இடத்தை அடையும். ஆன்மீக வழியில் செல்வோருக்கு வரும் தடைகளும் அப்படியே. அவற்றைத் தாண்டியவர்களே தன்யர்கள். உன் சித்தத்தை என் பாதங்களின் பால் ஸ்திரமாக வை. சபல சித்தனாக இராதே. உனக்கு சந்தேகமற்ற விஸ்வாசம் என்பால் இருந்தால் உன் சாதனையில் உன்னை வெற்றி பெறச் செய்கிறேன். உனக்கு அந்தச் சக்தியைக் கொடுக்கிறேன். நிச்சயமாய் ஆன்மீக சிகரத்தின் உச்சியை அடைய நீ மிக்க ஆவலுடையவனாய் இருந்தால், உன்னை குறிக்கோளை அடையச் செய்யும் பொறுப்பு என்னுடையதாக இருக்கும். எப்படிப்பட்ட உதவி வேண்டுமானாலும் நான் உனக்கு செய்கிறேன். உன் லட்சியம் நானாக இருக்கட்டும். நான் உன்னுடையவனாக இருப்பேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

79

தேகாபிமானம், உலகவிஷயங்களில் பற்று, சம்சாரத்தில் விருப்பம், பந்தம், போன்ற குணங்கள் பரமார்த்திக மார்க்கத்தில் தடைகளாக இருக்கும். காரணம் என்னவென்றால் பரமாத்மன்

விருப்பு வெறுப்பற்றவன். அவருக்கு கோரிக்கைகள் ஏதும் இருக்காது. பரமாத்மனின் விருப்பம் உலகின் க்ஷேமமே, ஆகையால் பரமார்த்திக பிராப்தியை வேண்டுபவர்கள், வைராக்கிய சுபாவம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். உலக வாழ்க்கையில் உழல் பவர்களுக்கு வைராக்கியம் சாத்தியமாகுமா என்ற சந்தேகம் உனக்கு ஏற்படலாம். தேக சம்மந்தமான வேலைகளை விட்டு விடும்படி எந்த கிரந்தங்களிலும் சொல்லப்பட வில்லை. எந்த குருவும் சொல்ல மாட்டார். தேகத்திற்கு சுகத்தையளிக்கும் எந்த வேலையையும் மனம் விரும்பிச் செய்யாதே. மனம் அப்படிப்பட்ட சுகங்களைக் கோரும் பட்சத்தில், அந்த மனத்தை என் பாதங்களில் வை. என் சாந்நித்தியத்தைச் சேர்ந்த ஏதாகிலும், உலக விவகாரங்களில் விருப்பத்தையுண்டு செய்யாது. காலக்கிரமத்தில் அது (மனம்) என்னையே பார்த்தல், அதிலேயே திருப்தியடைந்திருத்தல், என் ரூபதரிசனத்தில் ஆனந்தமடைதல் ஆகியவற்றைப் பழக்கப்படுத்திக் கொள்கிறது. அதன் மூலம் வைராக்கியம் தனக்குத்தானே ஏற்படுகிறது. வைராக்கியம் ஆனந்தத்தைத் தருகிறது. இந்த சாதனை சிரமமாக இருந்தாலும், என்னிடம் அங்கிதபாவம் கொண்டவர்களுககு சுலபமானதாகவே ஆகிறது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

80

சகஜமாகவே ஜீவர்கள் சுவர்க்கலோக சுகத்தை விரும்பு கின்றனர். உண்மையில் சுவர்க்கத்தில் என்ன இருக்கிறது? துக்கமற்ற வாழ்க்கையே இருக்கிறது. அனுபவிப்பதற்கு எல்லாமே இருக்கும். சுகத்தையன்றி வேறொன்றும் இருக்காது. சுவர்க்கலோக வாசம் நிரந்தரமானதன்று. கர்ம வசத்தால் கிடைத்தது கர்மத்தின் மூலமாகவே போய் விடும். காலக்கணக்கு முடிந்தால் மீண்டும் சுவர்க்கத்தை விட்டு நீங்குவது தப்பாது. அந்த மறு நிமிடமே அங்கிருந்து தள்ளப்படுகிறார்கள். ஜீவர்கள் விரும்பத்தக்கது பரமாத்மனின் சாயுஜ்ஜமே, பரமாத்மனில் ஐக்கியமடைதலே. இந்த வரிசையில் ஜனனம் மரணம் இருக்காது. இது மறு ஜென்மத்தைத் தராது. அதுவே மோட்சம்.

மோட்ச சாதனம் பரமாத்ம சாதனையின் மூலமே கிடைக்கிறது. மோட்ச சாதனைக்கு இந்த நரதேகம் மிகவும் உபயோகப் படுகிறது. இந்த உடலைவிட வேறு சிறந்த ஆயுதமே இல்லை. நிரந்தரமாக இந்த தேகத்தை இறைவனின் சேவையில் இருத்தி, இறை நாமஸ்மரணை செய்து, இறைவனையே லட்சியமாகக் கொண்டவர்களின் வாசல்முன், மோட்ச வாசல் கதவுகள் திறந்தே இருக்கும். அவர்கள் சம்சாரத்தில் இருப்பவர்களாயினும், சந்நியாசிகளாயினும் இந்த விஷயத்தில் ஒன்றேயாவார்கள். மோட்சமே உறுதியான குறிக்கோளாக இருந்தால், நிச்சயமாய் அதுவே கிடைக்கும். நரஜென்மத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

81

இந்த உலகில் பெற்று வளர்த்த தாய் தந்தையின் அன்புக்கு முன் எதுவானாலும் அற்பமானதேயாகும். அவர்களின் அன்புக்கு விலைகட்டுதல் யாருக்கும் இயலாது. அதிலும் தாயின் அன்பு மிகவும் உயர்ந்தது. மஹா சமுத்திரத்தை மிகுந்த முயற்சியுடன் தாண்ட முடியலாமேயொழிய, தாயின் அன்பை எந்த விதத்திலும் வர்ணிக்க இயலாது. எத்தனையோ விரதங்கள், பூஜைகள், புனஸ்காரங்கள், யாகங்கள் போன்றவற்றை எத்தனையோ செய்து கொண்டு எப்போதும் தீர்த்தயாத்திரைகள் செய்து, புண்ய நதிகளில் மூழ்கி எழுந்து தவித்துவிட்டோம் என்று நினைப்பவர் யாராயினும் அவர்கள் அஞ்ஞானிகளே யாவார்கள். இவ்வளவு செய்தாலும் எமக்கு இறைவனின் பிரத்தியட்ச தர்சனம் கிடைக்க வில்லையே என்று அவர்கள் புலம்புகின்றனர். அவர்களின் கண்கள் பரிபூரண குருடாகவே இருக்கிறது என்பதில் எம்மாத்திரமும் தவறில்லை. தாய் தந்தையரே கண்கண்ட தெய்வங்கள். அவர்களை மிஞ்சிய தெய்வம் ஏதிருக்க முடியும்? எவ்வளவு தேடினாலும் அதற்கு மேல் கிடைக்காது. நமக்கு பிறவியளித்து அவர்கள் எவ்வளவோ உதவி செய்துள்ளனர். குருசேவை, இறைவனின் சேவை

போன்றவற்றை செய்யும் அவகாசத்தை நமக்கு பிரசாதித்துள்ளனர். அப்படிப்பட்ட தாய் தந்தையரின் மனம், துக்கப்பட்டால் இறைவன் மிகவும் வருந்துவார்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

82

பரிபூரணமாக என்னிடமே லயமாதல் எப்படி? எப்படி அந்நிலையை அடைய முடியும்? என்ற சந்தேகம் உங்களுக்கு தோன்றிக் கொண்டிருக்கும். அந்த விஷயத்தைச் சொல்கிறேன். சாவதானமாகக் கேளுங்கள். என்னிடமே லயமானவர்கள் பூத உடலுடன் இவ்வுலகில் இருந்தபோதும், அப்படிப்பட்டவர்கள் இவ்வுலகிலிருந்து பரிபூரணமாக வேறுபடுத்தப்பட்டவர்களே, அவர்கள் எங்கிருந்தாலும் யாருடன் இருந்தாலும், அந்த சந்தர்ப்பத்தை என் சந்தர்பமாகவே மாற்றிக்கொள்வார்கள். அவர்களின் வாயிலிருந்து என் பேச்சே வெளிவரும். என் மகிமைகள், லீலைகள் பற்றியே பேசுவார்கள். காரணம் என்ன வென்றால் அவர்களுக்கு என் சிந்தனையன்றி வேறொன்று இருக்காது. அவர்களுக்கு என்னைத் தவிர வேறொருவர் தென்படமாட்டர்கள். அவர்களுக்கும் எனக்கும் உள்ள அனுபந்தம் ஜீவ–சிவ சந்தானம் போன்றதே, சர்க்கரையில் இனிப்பு, மேகத்தில் நீர், சமுத்திர நீரில் உப்பு எப்படி யிருக்குமோ அவ்விதமாகவே அவர்கள் என்னுள் இருப்பார்கள். இந்த விதானத்தை இதய பூர்வமாக யார் கடைபிடிக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக என்னுள் லயமாவார்கள். மரண காலத்தில் என் சாந்நித்தியத்தையே அடைவார்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

83

வெளிப்படுத்தப்பட்டாலும் வெளிப்படுத்தப்படாவிட்டாலும் (வியக்தம் அல்லது அவியக்தம்) மாயை என்பது பரமாத்மனின் அம்சமே. ஆகையால் மாயை என்பது பரமாத்மனே. அது பரமாத்மனுக்கு பின்னமானது அல்ல. தமோ குணத்திலிருந்து மாயை நிர்ஜீவ, சலனரஹித ஜட பதார்த்தங்களை சிருஷ்டித்தது.

இது அதனுடைய முதல் சிருஷ்டி காரியமாகும். பரமாத்மா சத்குணத்துடன் கூடி ரஜோகுணத்தால் பிரபஞ்சத்தை உண்டு பண்ணினார். பின் சத்வகுணம் புத்தி தத்துவத்தை நிர்மாணித்தது. அந்த புத்தி பரமாத்ம ஆனந்தத்துடன் பரிபூரணமாகி இந்த சிருஷ்டியை பூர்த்தி செய்தது. மாயை மனோவிகாரி, அதை கிரியா ரூபம் செய்யாதவரையில் திரிகுணமான சிருஷ்டி நடைபெறாது.அந்த திரிகுணங்கள் அவியக்தமாக இருக்கும். அந்த திரிகுணங்கள் வியக்தம் ஆகாத வரை மாயை வெளிப்படாது. பரமாத்மன் மாயையை சிருஷ்டித்தார். மாயையின் கிரீடா விலாசங்கள் அனைத்தும் பரமாத்மனின் ஆதீனத்திலேயே இருக்கும். அப்படி ரகசியமான மாயை என் கதைகளைக் கேட்டல், என் லீலைகளை விவாதித்தல், என் நாம ஸ்மரணை போன்றவற்றின் மூலம் சேதமாக்கப்படுகிறது. அப்போது நீங்கள் என்னை பரிபூரணமாக தெரிந்து கொள்ள முடியும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

84

தர்ம மார்க்கத்தை கடைபிடித்து வாழும் காலம் வரை நிச்சயமாக நான் உங்களுடன் இருப்பேன். அப்படிப்பட்ட பிரத்தியட்ச அநுபூதியை நான் உண்டாக்குகிறேன். ஆனால் தர்ம சம்மதமாக வாழ்வது என்றால் என்ன என்ற சந்தேகம் உங்களுக்கு வராமல் இருக்காது. அதையும்கூட தெரிவிக்கிறேன். சிரத்தையுடன் கேளுங்கள். உனக்கு நேற்று தோன்றிய கஷ்டமானாலும், துக்கமானாலும், மற்ற எந்த இக்கட்டான நிலையானாலும் இன்று யாருக்காவது நேர்ந்தது என்றால் அவர்களுக்கு நீ செய்ய முடிந்த உதவியைச் செய். அப்படி உதவி செய்ய முடியாதபட்சத்தில் உன் இதயம் கரையும்படி பரிதவி, அவ்வளவேயொழிய அவர்களின் உதவியற்ற நிலைமையைப் பார்த்து ஏளனம் செய்யாதே, சந்தோஷப் படாதே, ஏதோ ஒரு உபகாரம் மற்றொருவருக்குச் செய்ய வேண்டுமென்ற சத்சங்கல்பமே தர்மம். அந்த குணம் உன்னிடம் இல்லாதபோது அது தர்ம சம்மதமான வாழ்கையாகாது. பசி என்ற

விஷயமானாலும் சரி, அது உனக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கிறது. மற்றவர்களின் பசிகூட அவ்வளவு கொடுமையானதே அல்லவா? அதை ஒரு சிறிதாவது குறைக்கும் முயற்சியை மேற்கொள். உணவில் ஒரு கவளமாகிலும் கொடு, ஒரு விழுங்கு நீராகிலும் கொடு. அப்படிச் செய்து வந்தால் உன்னை விட்டு நான் எங்கே செல்ல முடியும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

85

அறுசுவை உணவைத் தயார் செய்து, என் விக்ரகத்தின் முன் வைத்து, சாஷ்டாங்கமாக தண்டனிட்டு. பாபாவிற்கு நைவேத்யம் படைத்தேன் என்று நீ திருப்தியடைந்தால் அந்த திருப்தி எனக்கு தோன்றாது. அப்படிப்பட்ட திருப்தியில் எனக்குப் பங்கு கிடையாது. எதை எனக்கு நைய்வேத்தியமாக சமர்ப்பித்தாயோ அந்த பதார்த்தத்தை முதலில் பேசமுடியாத வாயில்லா உயிர்களுக்கு கொஞ்சம், ஏழை எளியோருக்கு கொஞ்சம், பக்தர்களுக்கு கொஞ்சம் கொடுத்துப் பின்னர் நீ புசிக்க வேண்டும். இவ்விதமாக நீ செய்த பின்னர் ஏற்படும் திருப்தி எப்படியிருக்குமோ ஒருமுறை பார். அப்படி வர்ணிக்க முடியாத திருப்தியில் நான் திருப்தியாக இருப்பேன். எங்கு ஏழை எளியவர்கள், ஊனமுற்றோர், வயதானவர்கள் ஆதரிக்கப்படுகிறார்களோ அங்கு நான் இருப்பேன். அந்த அனுபூதி உனக்கு நிச்சயமாக ஏற்படும். இப்படிப்பட்டவர்களை ஆதரிக்க வேண்டுமென்ற தயாகுணம் உன்னில் இருந்தால் உனக்கு ஏதோ ஒருவிதத்தில் அது நிறைவேறும்படி நான் செய்வேன். என் ஒருவனுக்கே அது சொந்தம், என்று நீ நினைத்தால் அங்கு எனக்கு என்ன வேலை.? நான் அங்கிருக்கமாட்டேன். நீ எனக்குச் செய்யும் ஆராதனை ஏழை எளியோர்கள் மூலமாகவே என்னை அடைகிறது. உணவு எனது சொரூபம். அதை பத்து நபர்களுக்கு அளி. என்னை ஆனந்தமடையும்படிச் செய்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

86

என் பூஜை ஆரம்பத்திலும் என் தரிசனத்திற்கு வருமுன்னரும் பாபாவை இதை நிறைவேற்றும்படி கேட்க வேண்டும் என்ற பாவத்துடன் வருகின்றனர். பூஜிக்கின்றனர். உன் வரையில் அந்த கோரிக்கை சரியானதே. நான் இருப்பது நீ விரும்பிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கே, அதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. கோரிக்கை உறுதியாக இருக்கும் போது ஹிதம் (நலன்) பின்னால் மறைகிறது. உனக்கு நலம் தராத கோரிக்கைகளை நிறைவேற்றி நான் தர்மத்திலிருந்து நழுவமுடியுமா? ஒரு கணம் ஆலோசனை செய். சிறுவன் எப்போதும் வெல்லம் சாப்பிட விரும்பினால், பெற்ற தாய் கொடுப்பாளா சொல்லுங்கள். அப்படி அவள் என்றும் செய்யமாட்டாள். வெல்லத்தைத் தென்படாமல் மறைத்து வைப்பாள். சிறுவன் அந்த விஷயத்தை மறப்பதற்கு நல்ல முறையில் புத்தி சொல்லுகிறாள். நல்ல கதைகளைச் சொல்லுகிறாள். வேறோரு ஆசையை உண்டுபண்ணுகிறாள். உன் கோரிக்கைகள் தீராத விஷயத்திலும் கூட நான் தாயைப் போன்றவனே. கோபித்து உட்கார்ந்தால் தாய் தாலாட்டி உணவூட்டுகிறாள். நானும் அப்படியே. இவ்விதமாக நீ என்னை அறிய முடிந்தால் என்மீது உன் நம்பிக்கை குறையாது. உன் வேலையாகவே வந்த எனக்கு வேறு காரியம் என்ன இருக்கமுடியும்? கண நேரம் அமைதியாய் அமர்ந்து ஆலோசனை செய்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

87

என் பக்தர்களின் வீட்டில் உணவு உடைக்கு குறைவு இருக்காது. அவை பரிபூரணமாகக் கிடைக்கும். இது என்னுடைய வாக்குதானம். நீங்கள் செய்யவேண்டிய வேலை ஒன்றே. என்னுடைய ஆலயத்திலேயே கௌரவத்திற்கு ஆசைப்பட்டு என் அனுக்கிரகத்தை வேண்டி கோரிக்கொள். என் ஆசீர்வாதத்

திற்காகவே ஏங்கி இரு. பௌதிக உலக பெயருக்கும் புகழுக்கும் ஆசைபடாதே. பௌதீக உலகத்தவரின் பாராட்டுக்காக ஏன் எதிர் பார்க்கிறாய்?உன் இஷ்ட தெய்வத்தின் இதயம் கரைந்து போகும்படி பார். உன் சரீரம் இறைவனின் கருணையால், வியர்வையை வர்ஷிக்கட்டும். உன் அன்பின் லட்சியம் இறைவனாகவே இருக்கட்டும். உன் இந்திரியங்கள் அனைத்தும் பக்திப்பரவசத்தால் நிறையட்டும். இந்திரிய விகாரங்கள் பக்தி கிரியைகளாக மாற்றப்படட்டும். அப்போது மிகவும் ஆனந்தமாக இருக்குமல்லவா! எப்போதும் தெய்வ உபாசனைச் செய்து கொண்டிரு, மற்ற எதன் மீதும் மனத்தை போகவிடாதே. உன் மனம் என் நாமஸ்மரணையில் ஐக்கியமாகட்டும். மற்றவற்றை மறந்து விடு. அப்போது மனம் எல்லா கோரிக்கைகளிலிருந்தும் விடுபட்டு பரமானந்தத்தில் மூழ்கியிருக்கும். மனம் சிந்தனைகளற்று பரிபூரணமடையும். சமாதானம் (சாந்தி) அடைந்த மனம் என்னை அடைந்ததாகவே கருதப்படும். அலைபாயும் மனம் என்னை எப்படி தரிசிக்க இயலும்? ஸ்திரமான மனம் உனக்கு இருந்தால் என் அனுக்கிரகம் உன்னுடைய தாகும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

88

உன் வேலையின் நிமித்தம் நீ வெளியே புறப்பட்ட போது யாரோ ஒருவர் வழியில் வருகிறார். அவர் ஆதரவாகப் பேசுகிறார். உன் யோகக்ஷேமங்களை விசாரிக்கிறார். நீங்கள் எந்த வேலையின் நிமித்தம் சிரமப்படுகிறீர்கள் என்றும் அவர் கேட்கிறார். உணவும் கொடுக்கிறார். அன்புடன் உண்ணும்படியும் சொல்கிறார். அப்படிப்பட்டவர் தென்பட்டால் அவர் கோரிக்கையை மறுக்காதே. அவர் கொடுக்கும் உணவை வேண்டாம் என்று மறுக்காதே. உணவு கொடுப்பவர், உணவு உண்பவர் விஷ்ணுவின் வடிவங்களே, காரியநிமித்தம் நீங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கையில் நான் அவ்விதமாக அங்கு தோன்றிக்கொண்டிருப்பேன். எனக்கு ஒரு வடிவம் என்பது இல்லை. பெயரும் இல்லை. அப்படி அன்பு மழை பெய்விப்பவர் நானே என்று என்னை அறிந்து கொள்பவர் தன்யர்கள். நீங்கள்

ஏதோ ஒரு வடிவத்தை மனதில் இருத்திக் கொண்டு, நான் அவ்விதமாகவே இருப்பேன் என்ற மயக்கத்திலிருந்து வெளியே வா. நான் எல்லா ஜீவர்களிலும் இருக்கிறேன். பிரம்மா முதல் எல்லா வடிவங்களும் என் வடிவமே. இந்த சத்தியத்தை நீங்கள் உணர்ந்து கொண்டபோது நான் ரகசியமாகவும் மறைமுகமாகவும் எங்கிருக்க முடியும்? உங்களுக்கும் எனக்கும் தூரம் என்பது இல்லவே இல்லை.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

89

ஒவ்வொரு நாளும் சூரியன் உதயமாகிறான். ஒவ்வொரு நாளும் இரவும் வருகிறது. வருடம் வருடமாய் நாட்கள் உருண்டோடுகிறது. பாதி ஆயுட்காலம் உறக்கத்தில் கழிந்து போகிறது. மீதமுள்ள பாதி ஆயுட்காலமும்கூட சுகசாந்தியை அளிக்காது. இளவயது விளையாட்டில் கழிகிறது. வாலிபம் தேக சுகத்தில் கழிந்து போகிறது. முதுமை உடல் உபாதைகளால் பீடிக்கப்பட்டிருக்கும். மனிதப் பிறவியெடுத்தல் உடலை திடப்படுத்திக் கொண்டு தேக சுகங்களை அனுபவிப்பதற்காக மாத்திரமே என்றால் விலங்குகள் கூட அச் செயலை செய்து கொண்டு தானிருக்கின்றன. பசி, உறக்கம், பயம், காமம் போன்ற இந்த நான்கு காரியங்களுக்கே ஆயுள் முடிந்து விட்டால் மற்ற ஜீவர்களுக்கும், மனிதர்களுக்கும் பேதம் என்ன இருக்க முடியும்? மானுடர்களுக்கு விதிக்கப்பட்ட உயர்ந்த செயல் ஒன்று இருக்கிறது. முக்தன் ஆவதற்கு மானிடருக்கு மாத்திரமே அவகாசம் உள்ளது. கர்ம பந்தங்களிலிருந்து விமுக்தி யடைவதற்காகவே நரஜென்மம் கிடைத்துள்ளது. மீண்டும் இந்த பிறவியையும் கூட அதே மார்க்கத்தில் செலுத்தினால் முக்தி எப்படி கிடைக்கும்? ஞானம் பெறுதலே இந்த ஜென்மத்தின் குறிக்கோள். அது தவிர மற்ற ஏதாகிலும் வீணானதேயாகும். காலம் மிகவும் பொன்னானது. அந்த உயர்ந்த காலத்தை ஞானத்தைத் தேடுதல், இறைவனைத் தேடுதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் தன்யமானவர்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

90

துர்வாசனைகள் நிறைந்த இந்த தேகத்தைப் பார்த்து பரவசமடைதல் உண்மையில் அறிவற்ற செயலேயல்லவா? மலம், மூத்திரம், சீழ், ரத்தம், கபம், அபான வாயுக்கள், கிருமிகள் வசிக்குமிடம் ஆன இந்த தேகத்தில் பரவசமடைய என்ன இருக்கிறது? இந்த உடல் அமங்களகரமான இடம். க்ஷண காலத்தில் நசித்து விடும். அக்னிக்கு இரையாகிவிடும். சாம்பலாகி விடும். ஆனால் மங்களகரம் நிறைந்த பரமாத்மனை பெறுவதற்கு இந்த நரதேகமே உற்ற சாதனமாகும். அப்படிப்பட்ட உடலை வீணான காரியங்களில் ஈடுபடுத்தி புலம்புதல் உண்மையில் அஃஞானமேயல்லவா? நமக்கு முன்னால் மரணமடைந்த வர்களை நம் கண்களாலேயே பார்த்துக் கொண்டு நாம் என்றும் இருப்போம் என்ற மயக்கம் உண்மையில் மாயையில் பிறந்ததே. க்ஷனிகமான மானிடப்பிறவியில், மஹாத்மாக்களின் கதைகளைக் கேட்டல், இறைவனின் வைபவத்தை கானம் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்ட நேரமே புண்ணியத்தை சம்பாதித்துத்தரும். இந்த தேகத்தை அந்த விதத்தில் பயன்படுத்துவோர் விவேகம் நிறைந்தவர்கள் என்று சொல்வது மிகவும் சரியானதே.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

91

மாயையை வெல்ல வேண்டுமென்று நினைப்பவர்கள், ஞானம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஞானம் இல்லாத உயிர் வீணானது. ஜீவாத்மனும் பரமாத்மனும் ஒன்றே என்ற ஞானம் அபேத ஞானம் எனப்படுகிறது. இதையே உபநிடத்துக்கள் பிரம்ம ஞானம் என்கிறது. பரமாத்ம உபாசனை என்றாலும் இதுவே. பக்தர்களின் பகவான் என்பதின் அர்த்தமும் இதுவே. குரு பிரம்மா இருவரும் ஒன்றே என்ற அபேத ஞானம் பெற்றவர்கள், இந்த ஞானத்துடன் பக்தி உபாசனை செய்பவர்கள், இந்த மாயையைலிருந்து சுலபமாக விடுபடுவார்கள். முயற்சி யுடையவர்கள், ஞான வைராக்கியம் பெற்றவர்கள் மாத்திரமே

ஆத்மதத்துவத்தை அனுபவிப்பதற்கு அருகதை உள்ளவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட பக்தர்களே தன்யர்களாவார்கள். தனது சொரூப ஞானம் இல்லாமலேயே நான் பரிபூரணன் ஆனேன் என்று நினைத்தல் பெரிய அஞ்ஞானம் ஆகும். இது பரமாத்ம சாதனையில் பெரிய இடையூறு. இந்த சாதனையில் ராகம் என்ற எண்ணெய் முழுமையாக எரிந்து போக வேண்டும். அஞ்ஞானம் என்ற இருள் சாம்பலாக வேண்டும். நான் எனது என்ற திரி எறிந்து போகவேண்டும். சாம்பலாக வேண்டும். இப்படிப்பட்ட ஞானம் பெற்றவர்கள் என்னிடம் வந்தால் நிச்சயமாக என் உதவி கிடைக்கும். அப்படிப்பட்டவர் யாராகிலும் என்னிடம் வந்தால் அந்த நாளை சுபநாளாகக் கருதுவேன்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

92

மார்ஜால நியாயம், மர்கட நியாயம் என்று உலகில் இரண்டு விதமான ஞாயங்கள் உள்ளன. மர்க்கடம்-குரங்குக் குட்டிகள் தாயைப் பற்றிக் கொண்டிருக்கும். குரங்கு தாவிக் குதித்து குட்டிகளை எடுத்துச் செல்லும். அந்த முறையில் குட்டிகள் கை நழுவவிடும் அபாயம் இருக்கிறது. ஆனால் மார்ஜால விதானம் வேறு. பூனை தன் குட்டிகளை வாயில் கவ்விக் கொண்டு பத்திரமாக எடுத்துச் செல்லும். இந்த முறையில் கை நழுவவிடும் அபாயம் இல்லை. என்னை முழுமையாகச் சரணடைந்தவர்கள் விஷயத்தில் கூட நான் இந்த முறையையே கடைபிடிக்கிறேன். அவர்கள் எங்கிருந்த போதும் என் ஒருமித்த பார்வை அவர்கள் மீதே இருக்கும். தங்களுடைய காரியமாக அவர்கள் எங்கு சென்றாலும், அவர்களுடன் பாது காவலாக இருப்பேன். கண் இமைகளைப் போலவே காப்பாற்றிக் கொண்டிருப்பேன். மார்ஜாலம் (பூனை) அடிக்கடி வந்து குட்டிகளுக்கு பாலை ஊட்டிச் செல்வது போல், என் பக்தர்களை ஒவ்வொரு நிமிடமும் கவனித்துக் காப்பாற்றி வருவேன். அவர்கள் எந்த வேலையாகச் சென்றாலும், அவர்களை விட முன்பாகவே நான் அங்கு சென்று இருப்பது அவர்களுக்கு ஆச்சரியத்தையுண்டாக்கும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

93

சகுண ஆராதனை சிறந்ததா அல்லது நிர்குண ஆராதனை சிறந்ததா என்ற சந்தேகம் பலருக்குத் தோன்றுகிறது. உண்மையில் இரண்டுமே உயர்ந்ததுதான். ஏகாத்ம பாவனையுடன் ஆராதிக்கும் எந்த விதமானாலும் நல்ல பலன்களையே கொடுக்கிறது. நிர்குண உபாசனை செய்ய நினைப்பவர்களுக்கு மனம் ஸ்திரமாக இருக்க வேண்டும். சபலத்துவம் (அலைபாய்தல்) கூடாது. சகுணோபாசனையில் ஒரு சௌகர்யம் இருக்கிறது. மனம் இங்கும் அங்கும் அலையும் போது சகுண உருவத்தைப் பார்த்து மீண்டும் மனத்தை நிலைப்படுத்திக் கொள்ள இயலும். மனதிற்கு திருப்தி ஏற்படவும் அதன் வழியாக ஆனந்திக்கவும் முடியும். சந்தனம், புஷ்பம், அட்சதைகள் ஆகியவற்றை விக்ரகத்திற்குச் சமர்பித்து ஆனந்த மடையலாம். சகுண சாகார உருவத்தை உபாசிக்காவிடில் உண்மையான பக்திபாவம் ஏற்படாது. பக்திபாவம் ஏற்படாமல் உள்ளே யுள்ள சித்தம் மலர்ச்சி அடையாது. மலர் மலராதவரை பரிமளம் வராது. மலராத புஷ்பத்தில் மகரந்தம் இருக்காது. மகரந்தம் இல்லையெனில் வண்டுகள் வராது. ஆராதனை செய்து கொண்டிருந்தாலும் மனம் கட்டுப்பாடின்றி திரிந்து கொண்டிருந்தால் பலன் எப்படிக் கிடைக்கும்? இறைவன் விரும்புவது அலைபாயாத தன்மையையே. ஸ்திரத்துவம் இருந்தால் ஆகார, நிராகாரத்தில் எதைக் கடைபிடித்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

94

சிலர் என்னைப் பார்த்து பக்கீர் என்கின்றனர். சிலர் பிச்சையெடுப்பவன் என்கின்றனர். சிலர் பைத்தியக்காரன் என்கின்றனர். அவ்விதமாகவே இன்னும் சிலர் மஹாத்மா, பெரிய மனிதன், அவதார புருஷன் என்று அவரவர் மனோபாவத்திற்கு ஏற்ப அழைக்கின்றனர். அவர்கள் என்னை என்ன வென்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவல் எனக்கு இல்லை.

அப்படிப்பட்ட ஆசையும் இல்லை. அந்தந்த மனோபாவங்கள் அவரவர்களின் யோகத்தை அனுசரித்துத் தோன்றிக் கொண்டிருக்கும். எதோ ஒரு பிறவியில் புண்ணியம் செய்திருந்தாலொழிய இந்த மகூதித் தாயின் படிகளில் காலடி எடுத்து வைக்க முடியாது. அவ்விதமாக அவர்கள் மகூதி படிகளின் மேல் காலடி எடுத்து வைத்த மறு நிமிடமே கர்ம பாசத்திலிருந்து விமுக்தி யடைகின்றனர். அவர்களைப் பார்த்து எனக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. யோகம் என்பது இருந்தால் ஏதோ ஒருவிதமாக முக்தி ஏற்படுகிறது. ஜடப் பொருளான ஒரு தூணை காலினால் உதைத்ததால் நரசிம்மர் அவதரித்து இரண்யகசிபுவிற்கு முக்தியை அளித்தார் அல்லவா! இறைவனுக்கு அனேக பாவங்கள் இராது. மற்ற வேலைகள் இருக்காது. ஜீவர்களை கடைத் தேற்றுவதே அவரது குறிக்கோள். இந்த உண்மையைத் தெரிந்து கொண்டவர்கள், விழிப்புணர்வுக் கொண்டு புத்தியுள்ளவர்களாக இருப்பார்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

95

இறைவனை பக்தியுடன் பூஜித்து முக்தியடைந்த மகான்கள் எத்தனையோ பேர் உள்ளனர். அவர்களை இந்த உலகம் எப்போதும் நினைவில் இருத்திக்கொள்ளும். ஸ்மரணை செய்து கொண்டிருக்கும். ஆராதனை செய்துக் கொண்டிருக்கும். அவர்கள் மார்கத்தை ஏற்றுக் கொண்டு அனுசரிக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கும். அவர்கள் எப்போதும் மதிப்பிற்குரியவர்களே யாவார்கள். இதற்கு மாறாக சிலர் இருப்பார்கள். அவர்கள் இறைவனை நிந்தனை செய்து கொண்டிப்பார்கள். அவர்கள் தங்கள் நித்திய கடனாக இச்செயலை செய்து கொண்டிருப்பார்கள். அவர்களை இந்த உலகம் வெறுக்கிறது. ஒரு ரகசியம் சொல்கிறேன். சிரத்தையுடன் கேளுங்கள். இறைவன் யாரையும் வெறுப்பதில்லை. அவரில் அத்தகைய குணமே இல்லை. எதோ ஒரு விதத்தில் இறைவனை நினைத்துக் கொண்டிருக்கிறானல்லவா? அது போதும். இறைவனின் நாமத்தில் உள்ள உயர்ந்த குணம் அதுவே.

பவித்திரத்தில் பவித்திரமே இருக்குமே யொழிய மற்றொன்றிருக்காது. கங்கை நதியின் ஒரு கரையில் மஹாத்மாக்கள் தாகத்தை தீர்த்துக் கொண்டிருக்கையில் மற்றொரு கரையில் பசுக்கள் தாகத்தைத் தணித்துக் கொண்டிருக்கும். அவர்களுக்கும் இவற்றிற்கும் தாகத்தை கங்கை நதி தீர்த்துக் கொண்டிருக்கும் என்பதை மறக்கலாகாது. ஞானம் உள்ளவர்களுக்கு இறைவனின் வைபவம் தெரியவரும். அது இல்லாதவருக்கு தெரியாது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

96

மரணம் இல்லாத ஜீவர்கள் சிலர் இருக்கிறார்கள். அத்தகையவர்கள் மஹாத்மாக்களே என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் மானிட வடிவத்தில் தென்பட்டுக் கொண்டிருந்தாலும் தெய்வ சம்பன்னர்களே என்று தெரிந்து கொள்ளுங்கள். உண்மையில் மரணமற்ற ஜீவன் இல்லை. ஆயுள் தீராத உடல் இருக்காது. தேகம் அழிந்து விடும் என்ற விஷயம் நிரூபணம் ஆகிக்கொண்டேயிருக்கிறது. தேகம் அழிதல் என்றால் மரணமே. மரணம் என்றால் திரும்பிச் செல்வதே யல்லவா? யார் எப்போதும் என்னையே நினைத்து என்னையே தியானித்து, என்னையே ஆராதனை செய்கிறார்களோ, அவர்கள் மரணகாலத்தில் இப்பௌதீக உலகின் தொடர்பினை விடுத்து என்னுள் பிரவேசிக்கின்றனர். அவர்கள் அவ்விதமாக என்னுள்ளயே இருப்பார்கள். எனக்கு பிறவியும் இல்லை. மரணமும் இல்லை. என்றும் இருப்பவன். ஜீவர்கள் பிறப்பதற்கு முன்பும் இருந்தேன். இப்போதும் இருக்கிறேன். எப்போது மிருப்பேன். அந்த காரணமாகவே என் உண்மையான பக்தர்களுக்கு மரணம் என்பது இருக்காது. இப்பௌதீக உலகினை ஆதாரமாகச் செய்து கொண்டு என்னுள் பிரவேசிக்கின்றனர். என் சான்நித்தியத்தில் மரணம் என்பது இருக்காது. மோட்சமே இருக்கும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

97

பிரயாணம் செய்ய நல்ல நடைபாதை இருக்கையில் சிலர் வேண்டுமென்றே குறுகலான பாதையில் நடக்கின்றனர். இந்த இருக்கமான பாதையிலிருந்து மற்றொரு இருக்கமான பாதையில் செல்வார்கள். விசாலமான நடைபாதை இருக்கையில் இக்கட்டான மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்து துன்பப்பட்டு சேரவேண்டிய இடத்தை அடைவார்கள். இப்படிப்பட்ட முயற்சியில் மகிழ்ச்சி இருக்குமா என்பது எனக்குப் புரியாது. இறைவனை மிக எளிதாக அடைவதற்குச் சிறந்த பக்தி மார்க்கம் இருக்கையில், உபவாசங்கள், தீட்சைகள், ஹடயோகங்கள் செய்து கொண்டு, தேகத்தை பலவீனமாக்கி அதிலிருக்கும் இறைவனையும்கூட கஷ்டப்படுத்தி வீணான முயற்சிகள் செய்கிறார்கள். கைக்கு எட்டக்கூடிய பழத்தை கைத்தடியால் பெறுபவர்களைப் பார்த்து என்ன வென்பது? பக்தி என்பது ஒரு அனல் போன்றது. இறைவன் என்பவன் வெண்ணெய் போன்றவன். அனல்பட்டால் போதும் வெண்ணெய் கரைந்துவிடும். வெண்ணெய்க்கு அனல் படாமல் அப்படியே வைத்தோ மென்றால் வீணாகிப் போகும். அனல் பட்டால் நறுமணம் வீசும் நெய் உண்டாகிறது. எப்போதும் பக்தி மார்க்கத்திலிருந்தால் அவர்களுக்குத் தூரமாக நான் எப்படியிருக்க முடியும்? அவர்களே என் ஆத்ம நண்பர்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

98

ஜீவர்கள் ஏதோ ஒருவிதமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருக்கிறார்கள். யாரும் இதற்கு விதிவிலக்கல்ல. கர்மத்தின் வடிவம் அப்படிப்பட்டது. இப்படிப்பட்டவர்களில் சிலர் என்மீது விஸ்வாசம் வைத்து என்னிடம் வந்து கொண்டிருப்பார்கள். "பாபா நாங்கள் இந்த கஷ்டத்தைத் தாங்க முடியாமலிருக்கிறோம். அதைத் தாங்கும் சக்தி எங்களுக்குச் சிறிதும் இல்லை. எங்களுக்கு மரணத்தைப் பிரசாதியுங்கள் போதும். மறு ஜென்மத்தில் அனுபவிக்கிறோம்" என்று அழுகின்றனர். அவர்களைப் பார்த்து என் இதயம் தூள் தூளாகி விடுகிறது. கரைந்து போகிறது. நான் ஜீவர்களை காப்பாற்றுவதற்கே இருக்கிறேன். மரணத்தை நான் ஏன் அளிக்க வேண்டும்? கர்மத்தின் கயிறு மிகவும் கடினமானது. அதற்கு பாரபட்சம் கிடையாது. தர்மத்தையன்றி அதற்கு வேறொன்று தெரியாது. அனுபவித்தாலொழிய கர்மம் கரையாது. கர்மத்தை கூட்டி வைத்துக் கொள்வது நாமே, புலம்பி அழுவதும் நாமே. இப்படிப்பட்ட கர்மவினைகள் தொடராமலிருக்க வேண்டு மென்றால் என் நாமஸ்மரணை செய்யுங்கள். என்னையே ஸ்மரணை செய்யுங்கள். என் நாமஸ்மரணையில் கர்மா அதன் சுபாவத்தை இழக்கிறது. அவர்களின் துன்பங்கள் தாமரை இலையின் மீது நீர்த்திவலையைப் போன்றதேயாகும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

99

என்னை ஆராதித்துக் கொண்டிருந்தாலும் நான் சிலருக்குக் கிடைக்காமலே இருப்பேன். அவர்கள் என்னை ஆராதிப்பதின் பலனே அவர்களுக்குக் கிடைக்காது. அவர்கள் யார் என்று ஆலோசனை செய்ய வேண்டாம். அவ்விஷயத்தையும்கூட நானே சொல்லி விடுகிறேன். தங்க நகைக்கு 'நான் ஒரு தங்க ஆபரணம்' என்ற அஹம் அதனில் நுண்ணிய வடிவத்தில் ஒளிந்திருக்கும். அதில் தேர்ச்சி பெற்ற பொற்க் கொல்லன் நெருப்பில் வைத்துப் பொசுக்கி தூய்மையடையச் செய்கிறான். அதேவிதமாகவே பேராசை, துவேஷம், அசூயை, பகை, அசத்தியம், அஹம் போன்றவை அவர்களிடம் எந்த வடிவத்திலிருந்தாலும் எனக்குத் தெளிவாகத் தெரியவரும். இந்தத் தடைகள் அவர்களின் பூஜையை எனக்குக் கிடைக்காமல் செய்கிறது. அப்போது நான் அவர்களுக்கு என்ன செய்ய இயலும்? இருந்த போதிலும் என் முயற்சியை நான் செய்து கொண்டே இருப்பேன். அவர்கள் என் பேச்சைக் கேட்பதில்லை. என்னை அடைய வேண்டும் என்ற துடிப்பு இருப்பவர்கள் அந்த துர்குணங்களை விட்டுவிட வேண்டும். அவர்களின் நடத்தையை

அவர்களே மாற்றிக்கொள்ள வேண்டும். விதை நல்லதானல் மட்டுமே விளைவு நன்றாக இருக்கும். இல்லையேல் உழவனின் உழைப்பு வீணாகிவிடும். நன்மை விழைபவரே என் வார்த்தைகளை கேட்டு நடப்பார்கள்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

100

இந்த எல்லையற்ற பிரபஞ்சம் மிகப்பெரிய அறிய முடியாத ஒன்று. யாருக்கும் புரியாது. எது நன்மையோ எது தீமையோ என்பது நமக்குத் தெரியாது. சேறும் மணலும் கலந்து கங்கையில் இருப்பது போல், நன்மை தீமை இரண்டும் இந்த பிரபஞ்சத்தில் கலந்தே இருக்கும். வேறு படுத்தக்கூடிய சாமர்த்தியம் ஞானிகளுக்கு மாத்திரமே இருக்கும். எந்த மார்க்கம் சுலபமானதாக இருக்குமோ, நமக்குத் தெரியாது. இவ்விதமாக அறிய முடியாமல் போவதால் நாம் குறிக்கோளை அடைவது தடைபடுகிறது. இந்த உலக நாடகத்தை ஈஸ்வரன் கவனித்துக் கொண்டிருப்பார். ஜீவர்களின் போராட்டத்தை அவர் பார்த்துக் கொண்டிருப்பார், சேரவேண்டிய இடத்திற்கு ஜீவர்களை எளிதாக சேர்ப்பதற்கு தன்னால் தேர்வு செய்யப்பட்ட சத்குருக்களை உலகில் நியமித்து வருகிறார். அந்த சத்குருக்களுக்கு உலகின் போக்குவரத்து நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட சத்குருவை சார்ந்திருக்க வேண்டும். அவருக்கு இந்த உடலை அர்ப்பணம் செய்ய வேண்டும். அவரின் சேவையிலேயே ஆவல் உடையராக இருக்க வேண்டும். சத்குரு தன் கிருபாகடாட்சத்தால் இந்த ஜீவர்களை காலுக்கு ஈரம் படாமல் இந்த பவ சாகரத்தை எளிதாகத் தாண்டும் படிச் செய்கிறார். சத்குருக்கள் பரமாத்மனின் மாற்று வடிவங்களே.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

101

நித்திராவஸ்தையில் இருக்கையில் நல்ல கனவு ஒன்று வருகிறது. அந்த கனவில் மாட மாளிகைகள், சேவகர்கள், விருந்து போஜனம் இன்னும், இன்னும் ஏதேதோ தென்படுகிறது.

மிகுந்த ஆனந்தம் ஏற்படுகிறது. அவற்றை அனுபவிக்கும் சுகமான அனுபூதி ஏற்படுகிறது. இவ்விதமாக ஒரு கெட்ட கனவும் வருகிறது. மரங்கள் உடைந்து மேலே விழுந்தது போலவும், யாரோ இம்சிப்பது போலவும், பயங்கரமாக தென்படுகிறது. அப்போது உடல் வியர்வையைக் கொட்டுகிறது. உறக்கம் கலைந்த உடன் அந்த நல்ல கனவும் இந்த தீய கனவும் இரண்டுமே பொய்யானது என்று தெரிய வருகிறது. ஜாக்கிரதா அவஸ்தையில் நாம் நாமாகவே இருக்கிறோம். தூக்கம் என்ற மாயை பீடிக்கையில் உண்மையல்லாதது உண்மை போலவும், உண்மையானது பொய்யைப் போலவும் தென்படுகிறது. இந்தப் பிரபஞ்சம் மாயை என்ற விஷயம் ஞானம் தோன்றிய உடன் தெரிய வருகிறது. அப்போது ஏங்குதல் என்பது இராது, பிரமைகள், பிராந்திகள் என்பது இருக்காது. எது சத்தியமானதோ அதுவே தென்படுகிறது. இறைவனின் உண்மை நிலை ஞானம் என்ற கண்ணாடியை அணிந்த உடன் தெரியவருகிறது. ஆகையால் ஞானம் பெறுவதே ஜீவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

102

இறைவன் நம்முள்ளேயே இருக்கிறார் என்று வேதங்களும், சாஸ்திரங்களும் புராணங்களும் முழங்குகின்றன உண்மையில் நம்முள்ளேயே இருந்தால் அவ்வளவு மறைவாகவும், ரகசியமாகவும் ஏன் இருக்கிறார்? வெளிப் படையாகவே தோன்றலாம் அல்லவா? இந்த சந்தேகம் சகஜமாகவே எல்லோருக்கும் தோன்றுகிறது. அந்த சந்தேகத்தை எப்படி தீர்த்துக் கொள்வது? சாவதானமாகக் கேளுங்கள். இந்த பூமியின் மேல் மனிதர்கள் நடமாடுகின்றனர். மிருகங்களும் நடமாடுகின்றன. மனிதர்களுக்கு இருப்பதும், மிருகங்களுக்கு இல்லாததும் பகுத்தறிவு ஒன்றே. மனிதன் தன் பகுத்தறிவால் தன் தேவைக் கேற்ப கடப்பாரை, மண் வெட்டியால் பூமியின் மேலுள்ள மண்ணை அப்புறப்படுத்தி, தண்ணீரைப் பெற்று தேவையைப் பூர்த்தி செய்துக் கொள்கிறான். இந்த நீர் எங்கு இருக்கிறது? பூமியின் உள்ளே இருக்கிறது. கடப்பாரை, மண்வெட்டியின்

உதவியால் பெறக்கூடிய நீர் நம் தேவைகளை நிறைவேற்றுகிறதல்லவா? அவ்விதமாகவே ஜீவர்கள் உள் முகமாகி சிரத்தை பக்தியின் உதவியால் நம் உள்ளேயே இருக்கும் இறைவனைப் பெறமுடியும். காணவும் செய்யலாம். இறைவன் எங்கோ இல்லை. கோடானு கோடி ஜீவர்கள் எந்த வடிவத்தில் இருக்கிறார்ளோ, அந்த வடிவிலேயே இறைவன் இருக்கிறார். பார்த்ததையே சொன்னது ஏதாக இருக்குமோ அதுவே வேதங்களும் சாஸ்திரங்களும் ஆகும்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

103

மதங்கள், குலங்கள், ஆசாரங்கள் மிகவும் புராதன மானவை. ஆதியிலிருந்தே இவைகள் இருந்து கொண்டே இருக்கிறது. பல யுகங்களுக்கு முன்பே இவை தீர்மானிக்கப்பட்டது. அதன் படி யாருக்கு எந்த வேலை, எந்த ஆசாரங்கள் விதிக்கப் பட்டனவோ அவற்றை ஜீவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். நன்மையளிக்கும் செயலை யார் சொன்னாலும், எந்த சாஸ்திரம் சொன்னாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியதேயல்லவா? விதிக்கப்பட்ட சம்ஸ்காரங்கள் எதுவாக இருக்குமோ அதை கடைபிடிப்பதே சிறந்ததாகும். அந்த மார்க்கமே நன்மை யளிப்பதாகும். சிருஷ்டியை அவ்விதமாக தொடரவும், ஜீவர்கள் முக்தியைப் பெறவும் அந்த இதமளிக்கும் கர்மாக்கள் விதிக்கப்பட்டுள்ளன. சிருஷ்டி ஒரு மிகப் பெரிய மரம் போன்றது. மதங்கள், குலங்கள், ஆசாரங்கள், கிளைகளும் உபகிளைகளும் போன்றவை, அலட்சியத்தாலோ, துவேஷபாவத்துடனோ கிளைகளையும் உபகிளைகளையும் வெட்டி விட்டால் விருட்சம் பலவீனமடையும். பின்னர் இறந்து விடும். ஆகையால் ஒருவருடைய மதத்தையோ, குலத்தையோ, ஆசாரத்தையோ விவாதிக்கலாகாது. கீழ்மைபடுத்தவும் கூடாது. இவற்றின்பால் சமபாவம் தோன்றியபோது தீயவிளைவுகள் தோன்றாது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

104

அஸ்திரங்களால் அழிக்கமுடியாத விரோதிகளை, சாஸ்திரங்கள் அழிக்கின்றன. அஸ்திரங்கள் வெளியேயுள்ள பகைவரை அழிக்கிறது. ஹிம்சையை உண்டுபண்ணுகிறது. மனிதர்களின் உள்ளேயுள்ள விரோதிகளை சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்கள் அழித்து விடுகின்றன. நன்மையை அளிக்கிறது. துவேஷம், பகைமை, விரோதம் போன்ற குணங்கள் உள்ளிருக்கும் விரோதிகள். இவற்றைக் கருவிகளால் அழிக்க இயலாது. சாஸ்திரங்கள் எது நன்மையளிப்பவை என்று உரைக் கின்றனவோ, அவற்றைப் பின்பற்றி தன்னைத் தானே ஆத்ம பரிசீலனை செய்து கொண்டால், வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருந்தால் தீயவிளைவுகள் தோன்றாது. குரோதத்தால், காமத்தால் தோன்றும் தீயவிளைவுகள் ஏராளமாக இருக்கும். இவற்றால் மனிதன் அமைதிக்கு தூரமாகி அசாந்தியை அடைகிறான். சாஸ்திரங்களால் விதிக்கப் பட்டுள்ள கர்மங்களை செய்து கொண்டு, என் கதைகளை சிரவணம் செய்து கொண்டு, என் லீலைகளை மனனம் செய்தால், என் நாமத்தை ஸ்மரணை செய்து, என்னையே பார்த்துக் கொண்டிருந்தால் அனர்தங்களுக்கு இடமளிக்கும் எதுவும் உங்களிடம் வராது. உங்களைத் தூய்மைப் படுத்தவே இரவும் பகலும் நான் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னிடம் சம்பூரண சரணாகதி யடைந்தால், மறு நிமிடம் நீங்கள் அடையும் ஆனந்தத்திற்கு எல்லை இருக்காது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

105

மனிதர்களுக்கும் மஹாத்மாக்களுக்கும் அளவற்ற வித்தியாசம் இருக்கிறது. மனிதர்கள் பேசுகிறார்கள், மறந்தும் விடுகிறார்கள். கடைபிடிக்க மாட்டார்கள். நாம் கடை பிடிக்காமல் மற்றவர்களுக்கு நற்போதனை செய்தால், அந்த வார்த்தை களுக்கு என்ன மதிப்பிருக்க முடியும்? அது வெறும் வாய்ப்பேச்சே

ஆகிறதே யொழிய வெறொன்றில்லை. இந்த உலகில் மற்றவர்களுக்கு நீதி போதனை செய்வதைவிட சுலபமானது வேறொன்றுமில்லை. அதனால் மனிதர்கள் பக்குவத்திற்கு வராத காய் போன்றவர்கள். மஹாத்மாக்கள் இதற்கு மாறுபட்டு இருப்பார்கள். அவர்கள் பேசுவதை பேச்சு என்று சொல்வதில்லை. மஹாத்மாக்கள் சொற்கள் 'வாக்கு' எனப்படும். அவர்கள் சொல்வதை செய்து காட்டுவார்கள். ஒவ்வொரு வினாடியும் அவர்கள் தங்கள் ஆத்மனை பரிசீலனை செய்து கொண்டே இருப்பார்கள். தவறானவற்றைச் செய்யாமல் ஜாக்கிரத்தையாக இருப்பார்கள். மிதமாகப் பேசுவார்கள், நல்லவற்றையே பேசுவார்கள். அவர்கள் வாக்கு அமோகமானதாகும்! வீணாக ஒரு செயலையும் செய்யமாட்டார்கள். ஒரு வார்த்தையும் பேசமாட்டார்கள். மௌன மாகவே மிகப்பெரிய உபதேசங்களை அளித்துக் கொண்டிருப்பார்கள். மஹாத்மாக்கள் தரிசனம், அவர்கள் உபதேசங்களைக் கேட்டல் வாயிலாக மஹாபாவங்கள் ஆணிவேருடன் பிடுங்கி எறியப் படுகிறது.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

106

அடிக்கடி குருமார்களை மாற்றிக் கொண்டு அவர்களையும் இவர்களையும் பின் பற்றினால், தனக்கு ஒரு சொந்த குரு என்பவர் இல்லாமல் போவார். அப்படியும், இப்படியும் இன்றி திரிசங்கு சொர்க்கமே கிடைக்கும். என் லீலைகளில் இருக்கும் உட் பொருளை கிரகித்தால் உனக்கு இது தெரியவரும். உங்களுடைய குரு விடத்தில் ஸ்திரமான விஸ்வாசம் கொண்டிருக்க வேண்டும். உன் சித்தம் வேறு எங்கோ இருக்கக் கூடாது. இந்த ரகசியத்தை பத்திரமாக மனத்தில் இருத்திக் கொள்ளுங்கள். என் லீலைகளில் இதை மிஞ்சிய பிரயோஜனம் வேறில்லை. மற்றவர்களுக்கு பெயரும் புகழும் அதிகமாகவே இருக்கலாம். உன் குருவிற்கு அது எதுவும் இல்லாமல் போகலாம். ஆனாலும் தன் குருவிடம் திடமான நம்பிக்கை இருக்க வேண்டும். என் லீலைகளின் மூலம் நீங்கள் கிரகிக்க வேண்டிய உபதேசம்

இதுவே. ஆனால் உங்களுடைய நம்பிக்கையில் திடமான பற்றுதல் இல்லாவிடில் மாத்திரம் என் வார்த்தைகள் நல்ல பலன்களைத் தராது. அப்போது சக்தியுள்ளவனாக ஆகமாட்டாய். குரு சரணங்கள் மீது தலை வைத்து, அவர்கள் வார்த்தைகள் மேல் நம்பிக்கை வேத்தால் நிறைவேராத காரியம் ஒன்றும் இருக்க முடியாது. இதயத்தில் எந்த மூலையிலாவது ஒரு சிறு மணல் துகள் அளவு அவநம்பிக்கை இருந்தாலும் என்னைப் பின்பற்றி பயன் இல்லை.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

107

உனக்கு நல்ல இதமான வற்றைச் சொல்கிறேன். சாந்தியை உண்டாக்கும் மார்க்கத்தைச் சொல்கிறேன். என் வார்த்தைகளின் மேல் விஸ்வாசம் வைத்து அந்த மார்க்கத்தைப் பின் பற்றுங்கள். எப்போது எது கிடைக்கிறதோ அதை ஏற்றுக் கொள்ளுங்கள். இருப்பவற்றுடனேயே எப்போதும் நித்தியமான திருப்தி அடைந்து இருங்கள். எப்போதும் எதைப்பற்றியும் கவலை கொள்ளாதீர்கள். என்னைப் பாருங்கள். நான் ஒரு பக்கீர். எனக்கு வீடு, வாசல், குடும்பம் எதுவும் இல்லை. இருக்கும் இடத்தின் மேல் பற்றும் இல்லை. பௌதீக உலக விஷயங்களைத் தியாகம் செய்து கவலையின்றி நான் இருக்கிறேன். ஆனாலும் மாயை என்னை விடவில்லை. அது என்னையும் அடிக்கடி கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கும். நான் அதை மறந்தாலும் அது என்னை மறப்பதில்லை. அது எப்போதும் வரும். என்னை அரவணைத்துக் கொள்ளும். ஆதிமாயை பரமாத்மனிடமிருந்து வருகிறது. பிரம்மா முதலியவர்களையும் மோகத்தில் ஆழ்த்துகிறது. இனி என்னைப் போன்ற தீனனான பக்கீரைப் பற்றி சொல்ல வேண்டுமா? என்னையும் மோகத்தில் ஆழ்த்துகிறது. இறைவனின் கருணை மாத்திரமே அதன் பந்தனையிலிருந்து காப்பாற்ற முடியும். நிரந்தரம் நாம ஜெபம் செய்து வந்தாலொழிய பலமான மாயை நசிக்காது. இறைவனின் நாமஸ்மரணையொன்றே தருணோபாயம்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

108

நான் உங்களுக்கு வாக்கு தானம் செய்கிறேன் விஸ்வாசத்துடன் சிரத்தையாகக் கேளுங்கள். நான் ஸ்தூல உடலுடன் ஷிரிடியில் இல்லையென்று கருத வேண்டாம். சூஷ்ம உருவத்தினனாய் உங்கள் அனைவரிடமும் ஸ்திரமாக இருக்கிறேன். என்னை இதயபூர்வமாக ஸ்மரணை செய்த மறு நிமிடமே உன் முன்னால் இருப்பேன். எப்போதும் உங்களுடனேயே இருப்பேன். உங்களுக்குத் தாசனாய் இருப்பேன். உங்கள் சேவையில் தன்யனாய் இருப்பேன், உங்கள் காரியங்களில் என் உதவியைக் கோரினால் உடனே நிறைவேற்றுகிறேன். என்னை எப்போதும் ஸ்மரிப்பவரின் கடனை அவ்விதமாகத் தீர்த்துக் கொள்வேன். குழந்தை தாயின் கர்ப்பத்தில் எவ்வளவு தூரத்தில் இருக்குமோ அவ்வளவு தூரத்திலேயே நானும் இருப்பேன். சமுத்திரம் அலைகளை மறந்தால், சந்திரன் குளுமையை இழந்தால், சூரியன் கிழக்கில் அஸ்தமித்தால் அப்போது நான் உங்களை மறப்பேன். நான் உங்களுடையவன் என்று திடமான விஸ்வாசத்துடன் என்னை நம்புங்கள். உங்களை விட்டு ஒரு க்ஷணகாலமும் எங்கும் போகமாட்டேன். தாய் தந்தையர்கள் உங்களுக்கு ஜன்மத்தையளித்தார்கள். நான் உங்களுக்குச் சக்தியைக் கொடுக்கிறேன். தாய், தந்தை, குரு ஒருவரே என்ற பாவத்துடன் ஆராதியுங்கள். பாபா உன்னுடையவர். உங்களுடனேயே இருப்பார்.

என் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வை!

முடிவுரை

பாபாவின் மதுர வாணியினைக் கேட்கும் அவகாசத்தை பாபா நமக்கு அருளினார். தாயின் கர்பத்திலிருந்து குழந்தை வெளி வந்த போது, சீழ், இரத்தம் போன்ற அசுத்தங்களால் மூடப்பட்டு இருக்கும். அப்படிப்பட்ட குழந்தையை, சுத்தமான நீரில் சுத்தம் செய்து தாயின் அருகில் இருத்துவார்கள். பிரசவ வேதனையை அனுபவித்த அந்த தாய், களைத்து உறக்கத்தில் ஆழ்ந்திருப்பாள். ஓய்வடைந்த தாய் கண்களைத் திறந்து அந்தக் குழந்தையைப் பார்த்து, என் குழந்தை இவ்வளவு சுத்தமாக இருக்கிறதே என்று ஆனந்தமடைகிறாள். பாபா தமது மதுர வாணியைச் சொல்லிச் சொல்லி களைப்படைந்து பிரம்ம நிலையில் இருக்கிறார். இதற்கிடையில் நாம் பாபாவின் சத்குரு வாணியில் புண்ய ஸ்நானம் செய்து பரிசுத்தமாக இருப்போம். பாபா பிரம்ம நிலையில் இருந்து வெளி வந்த பிறகு நம்மைப் பார்த்து மிகவும் சந்தோஷப்படுவார். பரிசுத்தமாக இருக்கும் குழந்தையைப் பார்த்து தாய் ஆனந்தப்படுவதைப் போல. நம்மைப் பார்த்து பாபா தன் மடியில் வைத்துக் கொள்வார். சந்தேகப்படவேண்டாம். அவ்வளவு பவித்திரமானது சத்குரு வாணி. பாபாவின் முகக் கமலத்திலிருந்து வெளிப்பட்டதே இந்த அம்ருதவாணி. எவ்வளவு பாவம் செய்தவர்களானாலும் ஒரு கணத்தில் பரிசுத்தம் அடையமுடியும். இதன் மகிமைகளை யாரும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. பாபாவின் மதுரவாணியைக் கேட்டுக் கொண்டிருந்தால் கற்கள் கூட கரைந்து போகும். அந்தக் கற்கள் மண்ணில் கலந்து, மறுபிறவியில் மனிதனாய்ப் பிறந்து சத்குரு சாயியின் சேவையை மேற்கொள்ளும், மறுஜென்மம் இல்லாமல் போகும். பாபாவின் வாணியைச் சிரத்தையுடன் கேட்டு மனனம் செய்து கொண்டிருந்தால் ஆன்மீகக் குன்றின் மீது உட்காரலாம். இந்த உடலுடனேயே முக்தியைப் பெறலாம். இந்த வாணியைக் கேட்பதற்கு முன், ஜீவர்களின் கர்ம வடிவம், எந்த அளவிலிருந்தாலும் சரி, கேட்ட உடனே சாயியின் பாதங்களில் சரணடைகின்றன. பந்த விமுக்தி கிடைக்கும். மோட்சம் உங்கள் வாசல் முன் இருக்கும். **நான் உங்கள் பாரத்தை சுமக்கிறேன்** என்று வாக்குதானம் செய்த பகவான் சாயிபகவான் ஒருவரே. சாயிநாதனின் மேல் விஸ்வாசம் வையுங்கள். சலிப்படைவதை விட்டுவிடுங்கள். கவலையின்றி இருங்கள். இந்த க்ஷணத்திலிருந்து உங்களுக்கு சுபம் ஏற்படும். சாயிநாதன் சாட்சியாய் என் வார்தைகளை நம்புங்கள். இந்த நூலை சிரத்தையுடன் ஓதுங்கள், ஆழ்ந்து மனனம் செய்யுங்கள். எப்போதும் ஸ்மரணை செய்யுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கைப் படகு, நிலவொளியில் இளங்காற்று வீசும் போது, சரோவரத்தில் பிரயாணம் செய்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்குமோ அவ்வளவு ஆனந்த அனுபூதியை நீங்கள் நேரில் அனுபவிக்கலாம்.

சாயி சரணங்களை விடாதே.
சாயி நாமத்தை மறவாதே.
சர்வேஜனா சுகினோ பவந்து.

ஆரம்பம்
30-4-2004
வெள்ளிக்கிழமை

சாயி பாத தூளி
சிட்டா வெங்கடேஸ்வருலு சாயி
14-5-2004-வெள்ளிக்கிழமை

ஸ்ரீ ஷீரடி சாயிபாபாவின் அமுத மொழிகள்

1. ஷீரடி மண்ணை எவன் ஒருவன் மிதிக்கிறானோ அவனுடைய துன்பங்கள் யாவும் முடிவடைந்து, சௌகரியத்தை அடைவதை அவன் மனம் உணரும்.

2. துவாரகா மாயியை அடைந்தவுடன் பெரும் துன்பத்திற்கு உள்ளானவர்களும் மிகுதியான சந்தோஷத்தை அடைவார்கள்.

3. இவ்வுலகை விட்ட பிறகும், நான் சர்வ சக்தியுடன் வேலை செய்து கொண்டேயிருப்பேன்.

4. என்னுடைய சமாதி, என் பக்தர்களின் தேவையை அறிந்து அநேக ஆசீர்வாதங்களையும், புத்திமதிகளையும் கொடுக்கும்.

5. என்னுடைய பூத உடல் என் சமாதியிலிருந்துக் கொண்டே என் பத்தர்களிடத்தில் பேசி ஆசீர்வதிக்கும்.

6. என் சமாதியில் இருந்துக் கொண்டே, நான் மிகவும் சுறுசுறுப்பாகவும், தீவிரமாகவும் செயல்படுவேன்.

7. என்னிடம் வருபவர்களுக்கும், என்னையே தஞ்சமாக சரணடைபவர்களுக்கும் என் உபதேசத்திற்காக, என்னிடம் தீவிர நம்பிக்கை உடையவர்களுக்கும் நான் எப்போதும் உயிருடன் இருக்கிறேன்.

8. நீங்கள் என்னை அடைந்தால் நான் உங்களைக் காத்து அருள்கிறேன்.

9. நீங்கள் உங்கள் பளுவை என்மீது சுமத்தினால் நான் நிச்சயமாய் அதை தாங்கிக்காப்பேன்.

10. நீங்கள் என் ஆதரவிற்காகவும், உதவிக்காகவும் வேண்டினால் அவற்றை உடனே நான் உங்களுக்கு கொடுப்பேன்.

11. என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒரு போதும் தேவை என்பதே இருக்காது. விருப்பங்கள் அனைத்தும் என்னால் நிறைவேற்றப்படும்.